# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ்க் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை MANNA

பொழிவு - 07
குவிப்பு - 09
பக்கங்கள் - 14
விலை ரூபா 15.00
செப்ரெம்பர் 2004

THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Manna Office, Pastoral Centre, Cathedral St, Mannar, Sri Lanka. T.P: 023 - 2232377


திருத்தந்தையின் இலங்கைக்கான புதிய பிரதிநிதி


## பேராயர் மரியோ செனாறி



திருத்தந்தையின் இலங்கைக்கான புதிய பிரதிநிதியாக பேராயர் மரியோ செனாறி ஆண்டகை கடந்த மே மாதம் 10ஆம் திகதி திருத்தந்தையால் நியமிக்கப்பட்டார். இலங்கைக்கான பிரதிநிதியாக கடமையாற்றிய கலாநிதி தோமஸ் செங்நாண் ஆண்டகை தனது பணியினை நிறைவுசெய்து கொழும்பை விட்டு புறப்பட்டமையால் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்பவே பேராயர் மரியோ செனாறி நியமிக்கப்பட்டார். இவர் யூலை மாதம் 13ம் திகதி கொழும்பு வந்து சேர்ந்தார். 1946ம் ஆண்டு இத்தாலியில் பிறந்த இவர் 1970ம் ஆண்டு குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். திருச்சபைச் சட்ட இயலில் கலாநிதிப் பட்டம் பெற்றுக்கொண்ட பின்னர் 1980ம் ஆண்டு இராஜதந்திர வட்டாரங்களில் பணிபுரியத் தொடங்கினார். நெனகல், லைபீரியா, கொலம்பியா, ஜேர்மனி, ருமேனியா ஆகிய இடங்களில் பாப்பரசரின் பிரதிநிதியாக பணியாற்றிய இவர் 1999ல் பேராயராக நியமனம் பெற்றார்.

அனைத்துப் பங்கு மறையாசிரியர்களின் ஒத்துழைப்போடு

## மன்னாரில் மாபெரும் மறைக்கல்விக் கண்காட்சி



மன்னார் மறைக்கல்வி நிலையத்தில் இடம்பெற்ற மறைக்கல்விக் கண்காட்சியை மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. ஆபேல் றெவ்வல் அவர்களும் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி அதிபர் அருட்சகோதரர் ஸ்ரனிஸ்லோஸ் அவர்களும் திறந்து வைக்கின்றனர். (இக்கண்காட்சி பற்றிய மேலதிக விபரங்களை பக்கம் 11ல் காணலாம்)

இளைஞர் பணியை இனிதாய் ஆற்ற வருக வருக!

## மன்னார் மண்ணில் காலடி பதிக்கும்

# சலேசியக் குருக்கள்

சலேசிய சபையைச் சேர்ந்த குருக்கள் முதன் முறையாக மன்னார் மறைமாவட்டத்தில் தமது பணிகளை ஆரம்பிக்க வருகை தந்துள்ளனர். செப்ரெம்பர் 9ம் திகதி மாலை 4.00 மணிக்கு முருங்கனில் நடைபெற்ற நிகழ்வின்போது மன்னார் ஆயர் அவர்களும் மற்றும் குருக்கள் இறைமக்கள் யாவரும் இணைந்து இவர்களை வரவேற்றனர். முருங்கனை மையமாகக்கொண்டு பணியாற்றவுள்ள சலேசிய சபையினர் அங்கேயுள்ள மாணவர் இல்லத்தை பொறுப்பேற்று நடத்தவுள்ளனர். அத்துடன் இளைஞர்களுக்கான தொழினுட்ப நிலையத்தையும் உருவாக்கி பெருநிலப்பரப்பிலுள்ள இளைஞர் யுவதிகளின் முன்னேற்றத்திற்காக உழைக்கவுள்ளனர். இவர்களின் வருகை மன்னார் திருச்சபைக்கு புதிய எழுச்சியை ஏற்படுத்தும் எனக் கருதப்படுகிறது. சலேசிய சபைக் குருக்களை மன்னா மகிழ்வோடு வாழ்த்தி வரவேற்கின்றது.

கல்விப் பணித்தளங்களை அகலப்படுத்தும்

## டிலாசால் சகோதரர்கள்

டிலாசால் அருட்சகோதரர்கள் தமது கல்விப் பணித்தளங்களை அகலப்படுத்தி வருகின்றனர். இம்முயற்சியின் ஒரு கட்டமாக இரு அருட்சகோதரர்கள் அடம்பன் மத்திய மகா வித்தியாலயத்தில் கல்விப்பணி புரியச் சென்றுள்ளனர். அருட்சகோதரர்கள் செல்வதாஸ், றெஜினோல்ட் (மணி) ஆகியோரே அடம்பனில் தங்கள் கல்விப்பணியை ஆரம்பித்துள்ளனர். கடந்த ஓகஸ்ட் மாதம் 29ம் திகதி அடம்பனுக்கு சென்ற இவர்களை அடம்பன் பங்குத் தந்தை ஞானாதிக்கம் அடிகளார் மற்றும் இறைமக்கள் குருக்கள் ஆகியோர் அன்போடு வரவேற்றனர். தற்போது நெடுங்கண்டல் முன்னாள் பங்குமனையில் தங்கியிருக்கும் இவர்கள் காலப்போக்கில் தமக்கென நிரந்தரமான ஓர் இல்லத்தை அடம்பன் பகுதியில் ஏற்படுத்துவார்கள் எனவும் அங்கே மாணவர்களுக்கான விடுதிச்சாலை ஒன்றை அமைப்பார்கள் என்றும் மன்னார் டிலாசால் சகோதரர்களின் முதல்வர் அருட்சகோதரர் ஜெராட் மன்னாவுக்கு தெரிவித்தார்.

கிறிஸ்தவத்தை ஆசிய மயமாக்குதல்!

## மன்னாரில் பயிற்சிக் கருத்தரங்கு

"கிறிஸ்தவத்தை ஆசிய மயமாக்குதல்" என்னும் தொனிப்பொருளில் கடந்த ஓகஸ்ட் மாதம் 23ம் திகதி தொடக்கம் 26ம் திகதிவரை மன்னார் ஞானோதயம் இல்லத்தில் ஓர் ஆய்வுக் கருத்தரங்கு நடைபெற்றது. 2ம் அருள் சின்னப்பருடைய 'ஆசியத் திருச்சபை' என்னும் சுற்றுமடலை மையமாக வைத்து இடம்பெற்ற இக்கருத்தமர்வை அருட்பணியாளர் ஜெராட் றொசைறோ (அமதி) அவர்கள் நெறிப்படுத்தினார். மன்னார், யாழ்ப்பாணம், கற்றன் ஆகிய இடங்களில் இருந்து குருக்கள், துறவிகள், பொதுநிலையினர் ஆகியோர் இதில் பங்கேற்றனர். அருட்பணியாளர்கள் ஸ்ரனி அன்ரனி, ஜெயசேகரம், இம்மானுவேல் யேசுதாசன் ஆகியோர் இக்கருத்தரங்கை நடாத்த உதவி புரிந்தனர்.

சுவிஸின் புதிய ஆன்மீக இயக்குனராக

## பீற்றர் மனோகரன் அடிகளார்



பீற்றர் மனோகரன் அடிகளார்.

சுவிஸ் தமிழ்க் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தின் இயக்குனர் அருட்பணி. பெப்பி சோசை அவர்கள் தமது பணியை நிறைவுசெய்து தாயகம் திரும்புவதால் அவரது இடத்திற்கு புதிய இயக்குனராக மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணி. பீற்றர் மனோகரன் அவர்கள் மன்னார் ஆயரால் நியமிக்கப்பட்டுள்ளார். இவரது பணியேற்புத். திருப்பலி 18. 07. 2004ல் இடம்பெற்றது. புதிய இயக்குனரை பணியகம் அன்புடன் வரவேற்கிறது. இவரது பணி சிறக்க மன்னா வாழ்த்துகின்றது.

மன்னா பத்திரிகைப் பணியகத்தினால் நடாத்தப்பட்ட

## ஊடகவியலுக்கு ஓர் அறிமுகம்

## வதிவிடப் பயிற்சிப் பாசறை



கடந்த ஓகஸ்ட் மாதம் 20ந் திகதி தொடக்கம் 22ந் திகதிவரை இடம்பெற்ற ஊடகவியல் பற்றிய கருத்தமர்வை நடாத்த வருகை தந்த பாதுகாவலன் பத்திரிகை ஆசிரியர் ரூபன் மரியாம்பிள்ளை அடிகளாரும் அவரது குழுவினரும் வரவேற்கப்படுகின்றனர்.

மன்னார் மறைமாவட்டத்தில்

## மறைக்கல்வி வாரம்

**19 – 26 செப். 2004**

மன்னார் மறைமாவட்டத்தில் உள்ள பங்குகளில் செப்ரெம்பர் மாதம் 19ம் திகதி (ஞாயிறு) தொடக்கம் 26ம் திகதி (ஞாயிறு) வரை மறைக்கல்வி வாரமாகக் கடைப்பிடிக்கப்படும். இம் மறைக்கல்வி வாரத்திற்கான மையப்பொருள், "இயேசு ஞானத்திலும் உடல் வளர்ச்சியிலும் முதிர்ந்து கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவராய் வாழ்ந்து வந்தார்." (லூக். 2:52) என்பதாகும். செப்ரெம்பர் மாதம் 26ம் திகதி மறைக்கல்வி ஞாயிறு தினமாகக் கொண்டாடப்படும்.

["விடுதலை அளிப்பவர் ஆண்டவர், அவர் தம் மக்களுக்கு ஆசி வழங்குவராக!" (திருப்பாடல் 3: 8)]

# மன்னா

**மனப்பொழிவு பதிப்பாசிரியர் பகர்வது**

## மத நல்லிணக்கத்திற்காகப் பாடுபடுவோம்

மதங்களின் பெயரால் நிகழும் அழிவுகளும், கொலைகளும் இன்று மதங்களின் இருப்பைக் கேள்விக்குள்ளாக்கி உள்ளன. இந்த அழிவுகளுக்கும் கொலைகளுக்கும் மதங்கள் காரணங்கள் அல்ல: மாறாக ஒவ்வொரு மதங்களிலும் உள்ள மதவெறியர்களே இவற்றிற்குக் காரணம். தங்கள் மதங்களில் உள்ள அதீதப் பற்றினால் இவர்கள் மதங்களின் பெயரால் அழிவுகளையும் கொலைகளையும் செய்யத் துணிகின்றனர். குழப்பங்களுக்கும் கலகங்களுக்கும் காரணமாகின்றனர். இது இன்று பரவலாக உலக அரங்கில் நிகழும் கவலைக்கும் கண்டனத்திற்கு உரிய நிலைப்பாடு.

### கவலையோடு கண்ணோக்க வேண்டிய விடயம்

காலாகாலமாக மத நல்லிணக்கத்தை முன்னிலைப்படுத்தி வந்த மன்னார் மண்ணில் இன்று மதங்களுக்கிடையே முறுகல் நிலைகள் எழுந்துள்ளமை மத நல்லிணக்கத்தை ஆசிக்கும் அனைத்து மக்களையும் ஆழ்ந்த கவலையில் ஆழ்த்தி உள்ளது. கிறிஸ்தவ மக்களின் புனித பூமியாகிய மடு அன்னையின் திருத்தலமும் இந்துக்களின் பாடல் பெற்ற திருத்தலமாகிய திருக்கேதீஸ்வரமும் அமைந்துள்ள மன்னார் மண் முழு இலங்கைத் தீவிற்கும் மத ஒற்றுமையின் சின்னமாக விளங்க வேண்டிய ஒரு இடம் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

### முறுகல் நிலைக்கான நேரடிக் காரணிகள்

ஏற்கெனவே சில வருடங்களாக மத அடையாளச் சின்னங்களைப் பொது இடங்களில் வைப்பதற்கு எதிராக கிறிஸ்தவர்கள் இந்துக்களையும் இந்துக்கள் கிறிஸ்தவர்களையும் மாறி மாறி குற்றம் சாட்டி வந்த நிலைப்பாடு இருந்து வந்தது. அண்மையில் டிலாசால் அருட்சகோதரர்கள் அடம்பன் பாடசாலைக்கு செல்வது தொடர்பாக கருத்து முரண்பாடு எழுந்தது. இது தொடர்பாக தனிப்பட்ட முறையில் உரிமை கோராத மற்றும் உரிமை கோரிய கடிதங்கள் பொது மற்றும் சமய அமைப்புகளுக்கு விநியோகிக்கப்பட்டன. இந்துக்கள் பக்கத்தில் இருந்தும் கிறிஸ்தவர்கள் பக்கத்தில் இருந்தும் எழுதப்பட்ட இக்கடிதங்களில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்கள் ஒருவர் ஒருவரை குற்றம் சாட்டுவதாக இருந்தது. இக்குற்றச் சாட்டுக்கள் எந்தளவுக்கு உண்மையானவை என்பது ஆய்வுக்குரியது. இதன் உச்சக்கட்டமாக சூரியன் டொட் கொம் என்ற இணையத்தளத்தில் வெளியிடப்பட்டிருந்த விடயங்கள் மன்னார் கத்தோலிக்க திருச்சபையைப் புண்படுத்துபவையாக – பல உண்மைக்குப் புறம்பான தகவல்களைக் கொண்டதாக அமைந்திருந்தது. இதனை ஆட்சேபித்து கத்தோலிக்க மக்கள் யூலை 14ந் திகதி அன்று மன்னாரில் அமைதிப் பேரணி ஒன்றை நடாத்தினார்கள்.

### மதங்களின் அடிப்படைகளுக்கு செல்லுவோம்

மதங்களின் மேலெழுந்தவாரியான தன்மைகளை மட்டும் நோக்கும் போதுதான் பிரச்சினைகள் விஸ்வரூபமெடுக்கின்றன. அப்போதுதான் சிலுவையா, சூலமா என்ற பிரச்சினை எழுகின்றது. ஒவ்வொரு மதங்களின் அடிப்படைகளுக்குள் நின்று பார்க்கும்போது இந்த மேலோட்டமான வேறுபாடுகள் தெரியாது. அங்கே அன்பு ஒன்றே அனைவரையும் இணைக்கும் பாலமாக இருக்கும். ஒவ்வொரு மதங்களும் கற்பிக்கும் அடிப்படையான தத்துவங்கள் பிளவுகளையும் பிரிவினைகளையும் வளர்ப்பவை அல்ல. மாறாக அவை உலகளாவிய சகோதரத்துவத்தை அடிப்படையாகக் கொண்டவை. நமது தமிழ்ப் பண்பாடும் இதைத்தான் வலியுறுத்துகிறது. "யாதும் ஊரே யாவரும் கேளீர்" (ஒன்றே உலகு, அனைவரும் உறவினரே) என்ற விருது வாக்கு சங்ககாலத் தமிழரிடையே நிலவிய சமதர்ம தத்துவமாகும்.

### க்த்தோலிக்க திருச்சபையின் படிப்பினைகள்

பிறமதங்கள் மட்டில் கத்தோலிக்க திருச்சபை தெளிவான பார்வையைக் கொண்டிருக்கின்றது. இரண்டாம் வத்திக்கான் சங்க ஏட்டில் திருச்சபை தன் மக்களுக்கு இவ்வாறு படிப்பிக்கின்றது. "கிறிஸ்தவர்கள் தம் நம்பிக்கைக்கும் வாழ்விற்கும் சான்று பகருங்கால், கிறிஸ்தவமல்லாச் சமயங்களைப் பின்பற்றுபவர்களோடு முன்மதியுடனும் அன்புடனும் உரையாடல் நிகழ்த்த வேண்டும். அவ்வாறே அவர்களோடு ஒத்துழைக்க வேண்டும்." (ஏடு : கிறிஸ்தவமல்லாச் சமயங்களோடு திருச்சபைக்குள்ள உறவு எண். 2)


### பிரச்சினைகளைப் பேசித்தீர்ப்போம்

பிரச்சினைகளை – முறுகல் நிலைகளைத் தீர்ப்பதற்காக நாகரீக உலகில் ஏற்றுக்கொள்ளப்பட்ட இன்றைய நடைமுறை பேச்சுவார்த்தைதான். கடந்த 20 வருடப் போரின் பின்னர் போரில் ஈடுபட்ட இரு தரப்பும் பிரச்சினைகளைப் பேசித்தான் தீர்க்கவேண்டும் என்ற நிலைப்பாட்டிற்கு வந்துள்ளன. எனவே ஆதாரமற்ற குற்றச் சாட்டுக்களை அடுக்கிக்கொண்டு இருப்பதை விடுத்து பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஆக்கபூர்வமான முயற்சிகளில் ஈடுபட வேண்டும் என சம்மந்தப்பட்ட அனைவரிடமும் அன்போடு வேண்டுகோள் விடுக்கின்றோம்.

மீண்டும் மறுமடலில் வந்து சந்திக்கும்வரை

அன்புடன் – அருட்பணியாளர் நேசன், பதிப்பாசிரியர்.

## வாசகர் எண்ணங்கள்



### எப்படி நன்றி சொல்வதென்றே தெரியவில்லை!

அன்பின் மன்னா, புலம்பெயர் நாட்டில் வாழும் நான் உன் மறைமாவட்டத்தை சேர்ந்தவன். உன்னை என் கரங்களில் ஏந்தும்போது புலம் பெயர் நாட்டில் வாழுகின்ற எண்ணமே எனக்குத் தோன்றுவதில்லை. ஒவ்வொரு மாதமும் மலர்ந்து என்னைப் புதுப்படைப்பாக மாற்றுகின்றாய். உடலுக்கு உயிர் முக்கியமாவதுபோல உன்னில் அடங்கியுள்ள அனைத்து அம்சங்களும் எம் ஆன்மாவுக்கு அவசியமானவையே. உன்னை ஆன்ம உணவாக உட்கொள்ளும் நான் எப்படி உனக்கு நன்றி சொல்வதென்றே தெரியவில்லை. அனைத்து உள்ளங்களையும் பிரகாசிக்க வைத்து என்றும் மலர்ந்திட மனதார வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன். "உண்பவரை இறவாமல் இருக்கச் செய்யும் உணவு விண்ணகத்தில் இருந்து இறங்கி வந்த இந்த உணவே" (யோவான் 6: 50)

*திருமதி எரிக் சுகந்தி, சுவிஸ்.*

### உன் சேவை பூத்து மணம் பரப்பட்டும்

அன்பின் உறைவிடமான மன்னாவே, உன் சேவை என்றும் பூத்து மணம் பரப்பட்டும். நாடு முழுவதும் நடமாடி மக்கள் மனங்களை மாற்றட்டும். வேத உண்மைகளை ஊட்டி இறைவழியில் நடக்க எங்களுக்கு உற்ற துணையாக இருக்கட்டும். மன்னாவே உனக்கு என் வாழ்த்து மலர்களைச் சமர்ப்பிக்கின்றேன்.

*நிலோஜினி (ஜான்சி) சிறுத்தோப்பு, பேசாலை.*

### உன் ஆக்கங்கள் ஊட்டச் சத்து போன்றவை!

வாசகர் பலரின் நெஞ்சங்களை கொள்ளை கொண்ட மன்னாவே, உன்னில் மலரும் ஆக்கங்கள் சோர்ந்து போயிருக்கும் பலருக்கு ஊட்டசத்து போன்றவை. நீ பூத்து நிற்கும் கைகூ கவிதைகள் என்னை மிகவும் கவர்ந்துள்ளன. கலங்கி நிற்கும் எம் மனதிற்கு உன் கவிதைத் துளிகள் மிகவும் ஆறுதலானவை. நீ பல்லாயிரம் ஆண்டுகள் புதுப்பொலிவுடன் பூத்து நிற்க எனது வாழ்த்துக்கள்.

*எ. தர்ஷினி பெரேரா (மெடோ), பேசாலை.*

### நீ கல்விக்கோர் கலங்கரை விளக்கு!

மன்னாவே, நீ மறைபரப்புப் பணியுடன் மட்டும் மகிழ்வடையவில்லை. மாறாக, மன்னார் மறை மாவட்டத்திற்கு மகத்தான செல்வம் கல்விச் செல்வம் எனக் கருத்துடன் சிந்தித்தாய். கோட்டங்கள் தோறும் போட்டோக்களுடன் மாணவர் திறமைகளைப் பிரசுரம் செய்கிறாய். ஆம், புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள்! கல்விக்கோர் கலங்கரை விளக்கானாய்! கல்வி என்னும் தோட்டத்தில் கனிதரும் மரங்கள் பல உருவாகட்டும்.

*வின்சென்ட் டலிமா, தலைமன்னார்.*

## குருத்துவ வாழ்வில் வைர விழாக்காணும் அருட்தந்தையர்கள்

### அந்தோனிப்பிள்ளை அடிகளார்




87 வயது நிரம்பிய அந்தோனிப் பிள்ளை அடிகளார் தற்போது மன்னார் ஆயர் இல்லத்தில் வசிக்கின்றார். அமலமரித் தியாகிகள் சபையில் உதித்த இவர் பல்வேறு பணித்தளங்களில் பணியாற்றிய பின் 1980ம் ஆண்டு மன்னாருக்கு ஆன்ம குருவாக வந்து இன்றுவரை மன்னார் மறைமாவட்டத்தின் இன்ப துன்பங்களில் தன்னை இணைத்துக் கொண்டுள்ளார்.

யாருக்கும் எந்த தொந்தரவும் கொடுக்காமல், எந்த முறையீடும் செய்யாமல் மகிழ்வோடும் நிறைவோடும் இவர் வாழ்கிறார். 60 வருட நிறைவில் குருத்துவ அர்ப்பண வாழ்வின் நிறைவை நன்றியுடன் நினைவுகூரும் அருட்தந்தையை மன்னார் ஆயர், குருக்கள், இறைமக்கள் சார்பாக மனதார வாழ்த்துகிறோம்.

ஆயரில்லத்தை வதிவிடமாய் ஆக்கி
தள்ளாடும் வயதிலும் தனிப்பண்பு கொண்டு
கண்களை மூடியே கருத்தாய் செபிப்பார்
முணுமுணுப்பார் .... பெருமூச்சு விடுவார் ..........
அருள் நிறை மரியே என்பார்.....
அருட்கரம் நொந்தாலும் உருட்டுவார் செபமாலையை
குருத்துவ வாழ்விலே பல்லாண்டுகள் சென்றாலும்
குழந்தை மனநிலை இன்னும் மாறவில்லை!
நகைச் சுவைத் துணுக்குகள் இனிதாய்க் கூறி
சிரிக்க வைப்பார் அருகில் உள்ளோரை
இளமை மனத்துடன் இன்னும் பல்லாண்டுகள்
இறைவன் அரசில் இனிதாய் வாழ்ந்திட
இறைவன் அரசில் நின்று நிலைத்திட
செபிக்கின்றோம் ... வாழ்த்துகிறோம்.....!

*செ. சற்ளின், செபமாலைக் கன்னியர் மடம்,*
*பட்டிதோட்டம், மன்னார்.*

### மைக்கல்சாமி அடிகளார்



ஏறக்குறைய 20 ஆண்டுகள் யாழ் மறை மாவட்டத்தின் குருமுதல்வராக பணியாற்றி இப்போது ஓய்வு (?) பெற்றிருக்கும் அருட்தந்தை மைக்கல்சாமி அடிகளார் (அமதி) சுறுசுறுப்பும் மகிழ்ச்சியும் நிறைந்த ஓர் மூத்த குரு. மன்னார் மண்ணில் அடிகளார் ஆற்றிய அன்புப் பணிகளை நன்றியோடு இவ்வேளையில் நினைவு கூருகின்றோம். அவருடைய குருத்துவ வாழ்வின் 60 வருட நிறைவில் மன்னார் ஆயர், குருக்கள், துறவியர் சார்பாக மன்னா தனது வாழ்த்துக்களையும் செபங்களையும் மகிழ்வோடு தெரிவித்து நிற்கின்றது.

### இவர்களைத் தெரிகிறதா?



1944ம் ஆண்டு குருப்பட்டம் பெற்ற புதுக்குருக்களாய் இளமையோடும் அழகோடும் திகழும் இவர்களை யார் எனத் தெரிகிறதா? வலமிருந்து இடமாக மைக்கல்சாமி அ.ம.தி அடிகளார், ஸ்ரனிஸ்லொஸ் அ.ம.தி அடிகளார், அந்தோனிப்பிள்ளை அடிகளார். *(நன்றி - பாதுகாவலன்)*

## சிரிக்க..... சிந்திக்க....!



அன்று திங்கட்கிழமை காலை சுவாமியாருக்கு ரெலிபோன் வந்தது.
"சுவாமி, நேற்று நீங்கள் திருப்பலியில் ஆற்றிய பிரசங்கம் பதிவு செய்திருக்கிறீர்களா? ஒரு காசற் அனுப்பினால் பதித்து எடுக்க முடியுமா" என்றார் ஒரு அம்மையார்.
சுவாமிக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. அடடா, நாம் எவ்வளவு அழகாக பிரசங்கித்திருக்கிறோம் என நினைத்துக்கொண்டார். தொலைபேசி உரையாடல் தொடர்ந்தது.
"அந்தப் பிரசங்கத்தைக் கேட்டால் நன்றாகத் தூக்கம் வருகிறது சுவாமி, என் கணவர் தூக்கமில்லாமல் அவதிப்படுகிறார். அவருக்காகத்தான் இது தேவைப்படுகிறது" என்றாரே அந்த அம்மா!

### புனிதர் பொன்மொழி

"மனித உதவி நம்மைக் கைவிடும்போது கடவுளது உதவி நமக்கு அண்மையில் இருக்கிறது"

- புனித லொயோலா இஞ்ஞாசியார் -

### புனிதர் பொன்மொழி

"நீ செய்வதையெல்லாம் கடவுளுக்கு ஒப்புக்கொடு, அவருக்கு ஒப்புக்கொடாமல் செய்யும் வேலை அனைத்தும் வீணே."

- புனித வியான்னி மரிய ஜான் -

# “இப்பொழுது நான் நடந்தே பாடசாலைக்குப் போகிறேன்.

## எனது வாழ்விற்கு ஒளி ஊட்டிய வாழ்வுதயத்தை மறக்க மாட்டேன்”

### செயற்கைக்கால் பொருத்தப்பட்ட 12 வயதுச் சிறுவன்

“மூன்று மாத காலமாக நான் எனது கல்வியைத் தொடர முடியாமல் அவதிப்பட்டேன். இந்நேரத்தில் வாழ்வுதய நிறுவனம் என்னை அன்போடு வரவேற்று இல்லிடம் உணவு போன்ற வசதிகளைத் தந்து எனக்கு இலவசமாக மிகவும் தரமான செயற்கைக்கால் பொருத்தியது. இப்பொழுது நான் நடந்தே பாடசாலை சென்று எனது கல்வியைத் தொடருகின்றேன். எனது எதிர்கால வாழ்விற்கு ஒளி காட்டிய மன்னார் வாழ்வுதய நிறுவனத்தை நான் என்றும் நன்றியோடு நினைவு கூருவேன்.” இவ்வாறு மட்டக்களப்பு வாகரைப் பகுதியைச் சேர்ந்த 12 வயது நிரம்பிய செல்வன் குமாரசாமி றொபின் தெரிவித்தான்.

மன்னார் மறைமாவட்ட மனித நேய அமைப்பான வாழ்வுதய நிறுவனத்தின் பணிபற்றிக் குறிப்பிடும்போதே இச்சிறுவன் மேற்கண்டவாறு கூறினான்.

அவன் தொடர்ந்து கூறுகையில், “எனது வயது 12. நான் மட்டக்களப்பு வாகரை மத்தியைச் சேர்ந்தவன். எனது பெயர் குமாரசாமி றொபின். நான் பாடசாலை சென்று வீடு திரும்பியவுடன் தண்ணீர் குடிப்பதற்காக எனது வீட்டு வளவில் உள்ள கிணற்றடியை நோக்கி ஓடினேன். எனது அப்பா கிணற்றில் நீர் எடுத்துக்கொண்டு இருந்தார். நான் கிணற்றடியைத் தேடி ஓடும்பொழுதே எனது வலது கால் மிதிவெடிக்கு இரையாகியது.

(தொடர்ச்சி 9ம் பக்கம்)




## நித்திய அர்ப்பணம்

அன்புக் கன்னியர் சபையைச் சேர்ந்த அருட்சகோதரிகள் பிரிசில்டா (வவுனியா), டொறத்தி (விடத்தல்தீவு) ஆன் றோகினி (செட்டிகுளம்) ஆகியோர் தமது நித்திய அர்ப்பணத்தை செய்தனர். கடந்த ஓகஸ்ட் மாதம் 28ம் திகதி மன்னார் பேராலயத்தில் மன்னார் ஆயர் தலைமையில் இடம்பெற்ற திருப்பலியின் போது இச்சகோதரிகள் தமது அர்ப்பணத்தைச் செய்தனர். நித்திய அர்ப்பணம் செய்த அனைத்து அருட்சகோதரிகளையும் மன்னா வாழ்த்துகிறது.

## காலநதிக்கு ஆதரவு கொடுங்கள்!

மன்னார் மாவட்டத்தில் இருந்து வெளிவரும் *காலநதி* என்ற பத்திரிகை மன்னார் மக்களின் ஆதரவைக் கோரி நிற்கின்றது. மன்னாரின் குரலாக ஒலிக்கும் இப்பத்திரிகையை மக்கள் வாங்கி வாசிக்கும்படியும், இதன் விநியோகத்திற்கு உதவி புரியும்படியும் கேட்டுநிற்கின்றோம். குறிப்பாக வெளிநாட்டில் உள்ளவர்கள் இப்பத்திரிகைக்கு தமது ஆதரவை வழங்க வேண்டுமென எதிர்பார்க்கின்றோம். இப்பத்திரிகையின் உள்ளூர் விலை 17 ரூபாய.

காலநதியின் உள்ளூர் தொடர்புகளுக்கு
ஆசிரியர், காலநதி, பேசாலை - 08.
T.P. 023-2250080, 2250081.

ஐரோப்பிய நாடுகளின் தொடர்புகளுக்கு
Mr. L. Thavathash Peiris (M.A) Dp.
20 Botwel Common, Road
Hayes, Middx, UB 3 JA. UK

காலநதி மின்னஞ்சல் தொடர்புகளுக்கு
kalanathy@hotmail.com

நன்றி - மன்னா பதிப்பாசிரியர்

## இலவச பல் மருத்துவம்

வவுனியா ராஜ் மெடிக்ஸ் ஆய்வுகூடத்தில் இயங்கிவரும் பல் வைத்தியப் பகுதியானது கத்தோலிக்க குருக்கள் துறவிகளுக்கு இலவச பல் வைத்திய சேவையை வழங்க முன்வந்துள்ளது. தொடர்புகளுக்கு,
Dr. ஜே. சஜீவன்,
தொலைபேசி இல. 0777588729

## ‘ஞானோதயம்’ ஆன்மீகக் கல்வி மையத்தின் கருத்தமர்வுகள் பற்றிய விபரங்கள்

### புரட்டாதி - 2004

11ம் திகதி (சனி) “ஆசியச் சூழமைவில் துறவியரின் இன்றைய சவால்கள்” ஆரம்பம்: காலை 8.30 மணி - மாலை 4 மணிவரை. கருத்தமர்வு இலவசம். உணவு 50/= (துறவியருக்கானது) *விண்ணப்ப திகதி முடிவு: 25.08.2004*

25ம், 26ம் திகதிகளில் (சனி, ஞாயிறு) “நான்கு வடிவ நற்செய்திகள்” ஆரம்பம்: சனி காலை 9 மணி ஞாயிறு மாலை 4 மணி வரை. கருத்தமர்வு இலவசம். உணவு, இருப்பிடம் 150/=. (நற்செய்தி பணியாளர், பொதுநிலையினர், துறவியர்) *விண்ணப்ப திகதி முடிவு 31.08.2004*

### ஐப்பசி - 2004


2ம், 3ம் திகதிகளில் (சனி, ஞாயிறு) “குடிபோதையும் விடுதலையும்”
ஆரம்பம். சனி காலை 9 மணி - ஞாயிறு மாலை 4 மணி வரை. கருத்தமர்வு இலவசம். உணவு, தங்குமிடவசதி 150/= (குடிபோதையில் நின்று விடுபட்டவருக்கு குடிபோதையைவிட விரும்புவோருக்கானது) விண்ணப்ப திகதி முடிவு 15.09.2004

9ம் திகதி (சனி) “ஆசியத் திருச்சபையில் பொதுநிலையினரின் நிலை”
ஆரம்பம் - காலை 9 மணி - மாலை 4 மணி வரை. கருத்தமர்வு இலவசம். உணவு 50/= (பொதுநிலையினர், பங்குப் பேரவையினருக்கானது) *விண்ணப்ப திகதி முடிவு: 15.09.2004*

16ம், 17ம் திகதிகளில் (சனி, ஞாயிறு) ‘இளைஞரும், தலைமைத்துவமும்’ ஆரம்பம்: சனி காலை 9 மணி - ஞாயிறு மாலை 4மணி வரை. கருத்தமர்வு இலவசம். உணவு தங்குமிடம் 150/= (இளைஞர் யுவதிகளுக்கானது) விண்ணப்ப திகதி முடிவு: 20. 09. 2004.

23ம் திகதி (சனி) “உளவியலும் சமூக ஆற்றுப்படுத்தலும்” ஆரம்பம்: காலை 8.30 மணி - மாலை 4 மணி வரை. கருத்தமர்வு இலவசம். உணவிற்காக 50/= (ஆசிரியர்களுக்கானது) *விண்ணப்ப திகதி முடிவு: 01.10.2004*

## பங்குத் தள சங்கதிகள்



### அளவக்கைப் பங்கு புதிய உற்சாகம் பெறுகிறது

அளவக்கைப் பங்கானது கடந்த 2003ம் ஆண்டிலிருந்து யேசு சபையிடம் ஒப்படைக்கப்பட்டது. அவ்வேளையில் முதல் யேசுசபைக் குருவாக அருட்திரு மாசில்லாமணி அடிகளார் அளவக்கைப் பங்கைப் பொறுப்பேற்றார். அவர் குறுகிய காலமே பணியாற்றினார். இதனை அடுத்து அதே சபையைச் சேர்ந்த அருட்திரு யோசப் அடிகளார் தற்காலிகமாக பங்கைப் பொறுப்பேற்றார். அவரும் குறுகிய காலமே பணி செய்தார். இதனைத் தொடர்ந்து அதே சபையைச் சேர்ந்த அருட்திரு தேவறாஜா அடிகளார் பங்கில் பணியாற்ற வந்தார். அவரும் குறுகிய காலமே பணிசெய்தார். இவை அனைத்தையும் கண்ணுற்ற இறைவன் 25.07.2004 அன்று அளவக்கைப் பங்கிற்கு என நிரந்தரக் குருவாக அருட்பணியாளர் சந்தியாகு அடிகளாரை தேர்ந்தெடுத்து அனுப்பி வைத்துள்ளார். இவரது வருகை பங்கு மக்களுக்கு புதிய உற்சாகத்தைக் கொடுத்துள்ளது.

*- எஸ். மெலானி, ஆத்திக்குளி, அளவக்கை பங்கு*

### வஞ்சியன் குளத்தில் இராயப்பர் ஆலய நூற்றாண்டு விழா

வஞ்சியன்குளப் பங்கின் பாதுகாவலரான புனித இராயப்பர் ஆலயம் 1904ம் ஆண்டு கட்டப்பட்டு 2004ம் ஆண்டு நூற்றாண்டு விழாக் காண்கின்றது. மேற்படி விழா ஓகஸ்ட் 17ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. 17ம், 18ம், 19ம் திகதிகளில் முறையே சிறுவர், இளைஞர், பெற்றோர் ஆகியோரை முன்னிலைப்படுத்தி திருப்பலிகள் இடம்பெற்றன. 20ம் திகதி நற்கருணை ஆராதனையை ஸ்ரனி அன்ரனி அடிகளார் நடத்தி வைத்தார். 21ந் திகதி விழாத் திருப்பலியை மன்னார் ஆயர் பேரருட் கலாநிதி இராயப்பு ஜோசேப்பு ஆண்டகை தலைமை தாங்கி ஒப்புக்கொடுத்தார். நூற்றாண்டு விழாத் திருப்பலியில் குருமுதல்வர், குருக்கள், கன்னியர்கள், அருட்சகோதரர்கள், வன்னி பாராளுமன்ற உறுப்பினர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர், மடுப்பிரதேச செயலாளர் ஆகியோர் கலந்துகொண்டனர். அதனைத் தொடர்ந்து நூற்றாண்டு விழா மலர் வெளியீடும் புதிய ஆலயம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டும் வைபவமும் நடைபெற்றது. இரவு 7.30 மணிக்கு கலை நிகழ்வுகள் நடைபெற்றன. இந்நிகழ்வுகள் அனைத்தும் பங்குத் தந்தை அருட்பிரகாசம் அடிகளார் தலைமையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றன.

*- எஸ். சந்தியோகு (ஜெயந்தன்)*

### பெருச்சார்கட்டு திருவிழாவையொட்டி கலை நிகழ்வுகள்

முருங்கன் பெருச்சார்கட்டு புனித அந்தோனியார் ஆலய திருவிழாவையொட்டி 03.08.2004 அன்று பெருச்சார்கட்டுக் கிராமத்தில் இரவு கலைநிகழ்வுகள் இடம்பெற்றன. எ. டி. தேவா அல்மேடா அவர்களால் எழுதி இயக்கப்பட்ட நான்கு சமூக சீர்திருத்த நாடகங்களும், புனித சவேரியாரின் வாழ்க்கையை சித்தரிக்கும் *அழியாத தேகம்* எனும் நாட்டுக்கூத்தும் வெகு சிறப்பாக நடைபெற்றன. பள்ளக்கமம் மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தினரால் *இவர் ஒரு இஞ்சினியர்* எனும் நகைச்சுவை நாடகமும், முருங்கன் பங்கு கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தினரால் *முக மூடிகள்* எனும் நகைச்சுவையுடன் கூடிய சமூக சீர்திருத்த நாடகங்களும் மேடையேற்றப்பட்டன. இந்நிகழ்வில் கலைஞர் எ.டீ. தேவா அல்மேடாவுக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவம் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

*- தலைவர், வழிபாட்டுக்குழு, முருங்கன்.*

## மத ஒற்றுமையை சீர்குலைப்போருக்கு எதிராக மன்னாரில் கண்டனப் பேரணி

இணையத்தளம் ஒன்றில் மன்னார் கத்தோலிக்க திருச்சபை தொடர்பாக தவறான - உண்மைக்குப் புறம்பான தகவல்கள் வெளியானதைக் கண்டித்து ஜுலை 14ம் திகதி அன்று மன்னாரில் கத்தோலிக்க மக்கள் அமைதிப் பேரணி ஒன்றை நடாத்தினர். (தொடர்ச்சி 10ம் பக்கம்)




## பங்குச் செய்திகளை அனுப்புவோர் கவனத்திற்கு

*செய்தி என்பது வழக்கத்திற்கு மாறாக நடைபெறும் நிகழ்வுகள் ஆகும். நாய் மனிதனைக் கடித்தால் அது செய்தி அல்ல. மாறாக மனிதன் நாயைக் கடித்தால் அதுதான் செய்தி. பங்குச் செய்திகளை அனுப்புவோர் தயவுசெய்து உங்கள் பங்கு திருவிழா போன்ற வழமையான செய்திகளை அனுப்ப வேண்டாம் என அன்போடு கேட்டுக்கொள்கிறோம். உங்கள் பங்கில் நடைபெறும் முக்கிய நிகழ்வுகளை - ஏனைய பங்குகளும் பின்பற்றக் கூடிய செய்திகளை மட்டுமே அனுப்புங்கள். அவ்வாறான செய்திகளுக்கே முக்கியத்துவம் கொடுப்போம்.*

*(பதிப்பாசிரியர்)*

### பேசாலை வெற்றிநாயகி கிராமத்தில் அன்பிய எழுச்சி விழா

பேசாலை வெற்றிநாயகி கிராமத்தில் 19.08.2004 அன்று அன்பிய எழுச்சிவிழா மிக விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. கடந்த ஒரு மாதகாலமாக இக்கிராமத்தில் அருட்பணியில் ஈடுபட்டு வந்த அருட்பணியாளர் ஜெகான் அவர்களின் அயராத முயற்சியினால் 4 அன்பியக் குழுக்கள் உருவாக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகின்றது. அதன் சிறப்பம்சமாக 19.08.2004 அன்று 4 அன்பியக் குழுக்களும் இணைந்து இவ்வன்பிய எழுச்சிவிழாவை ஏற்படுத்தியிருந்தனர்.

*திரு. எஸ். ஜே. சீலன் குலாஸ், வெற்றிநாயகி கிராமம்.*

### முருங்கன் முன்பள்ளி மாணவர்களின் விளையாட்டு நிகழ்வு

முருங்கன் பங்கில் வாழ்வுதயத்தால் நடாத்தப்படும் கிறிஸ்து அரசர் முன்பள்ளி மாணவ மாணவிகளுக்கிடையிலான 2004ம் ஆண்டுக்கான சிறுவர் விளையாட்டு நிகழ்வுகள் 17.08.2004 அன்று மாலை வெகு சிறப்பாக முருங்கன் கிறிஸ்து அரசர் ஆலய முன்றலில் நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு வன்னி பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சிவசக்தி ஆனந்தன் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. பிச்சைகுளம், சிறுக்கண்டல், முருங்கன் முன்பள்ளி மாணவர்களால் நடாத்தப்பட்ட இப்போட்டியினை முன்பள்ளிகளுக்கு பொறுப்பான கார்மேல் சபை அருட்சகோதரி சயந்தினி அவர்கள் திறம்பட ஒழுங்கு செய்திருந்தார்.

*தலைவர், வழிபாட்டுக்குழு, முருங்கன்.*

# சிறுவர் பொழிவு

## பகிர்தல்
## சிறுவர் சிந்தனைக் கதை



அந்தச் சாலையோரத்தில் மதியென்ற சிறுமி வறுமையின் கோரத்தால் பீடிக்கப்பட்டு கையில் தட்டுடன் வருவோர் போவோரிடம் உணவு கேட்டு அழுதாள். யாரும் அவளுக்கு உதவி செய்ய மனமில்லாதவராய் வேறு திசை பார்த்து நடந்தனர். அத்தெருச் சந்தியின் ஓரத்தே தர்ம கர்த்தாக்கள் தங்குமடம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. அந்த மடம் செல்லும் மட்டும் அவள் பசியைப் பொருட்படுத்தாது கிடைத்த ஓரிரண்டு உணவுப் பொட்டலங்களை மட்டும் கொண்டு அந்த மடத்தின் கதவைத் தட்டினாள். அந்த மடத்தைச் சேர்ந்த தர்ம கர்த்தா ஒருவர் சாளரத்தினுடே எட்டிப் பார்த்துவிட்டு டபெக்கென்று மூடிவிட்டார்.

அப்படியே இன்னொருவரும் செய்தார். மூன்றாவதாக குரல் கொடுத்த தர்மகர்த்தா கதவைத் திறந்து வெளியே வந்தார். மதி பெரும் ஆவலுடன் தனக்கு ஏதோ தரப்போகிறார் என்று எண்ணிப் பூரிப்புடன் நின்றிருந்தாள். ஆனால் அந்தத் தர்ம கர்த்தா அவளது தட்டையும் பறித்துவிட்டு அவளை வெளியே தள்ளிக் கதவைப் பூட்டினார்.

சிறுமி அழுதுகொண்டு காந்தி சிலைக்கருகே அமர்ந்தாள். அறைக்குள் சென்ற தர்ம கர்த்தா அந்த உணவை உண்டுவிட்டு தண்ணீர் குடிக்க முயன்றபோது விக்கலெடுத்தது. அப்போதே அவருக்கு மனச்சாட்சி உறுத்தத் தொடங்கியது. எதையோ பறிகொடுத்தவர் போன்று சாய்மனைக் கதிரையில் வந்தமர்ந்தார். அப்போது அவரருகில் அநாதையாக விடப்பட்டிருந்தது அந்தத் தட்டுக் கோப்பை. தனது வறுமையையும் தான் வந்த வழிவகைகளையும் கூறி விளக்கியது. தர்மகர்த்தா திகைத்துப் போய் தானொரு தர்மகர்த்தா என்று அழுதார்.

அந்தச் சிறுமியைத் தேடும் நோக்கத்தோடு அவர் தெருவழியே நடக்கத் தொடங்கினார். ஆனாள் அவள் தன் முயற்சியால் வென்று பெரிய அந்தஸ்த்தை தொட்டாள். இப்போது மிகுந்த வசதியுடன் அவள் பெரிய வீடு கட்டி பெரியவளாகி மற்றவர்களுக்கும் உதவி புரிந்துகொண்டிருந்தாள். அப்போது அந்த தர்மகர்த்தா தெருவழியே போவோர் வருவோரிடம் அந்தச் சிறுமிபற்றி விசாரித்தார். அவருக்கும் பசிவாட்டியது. அதே தட்டைக் கையில் கொண்டு அலைந்து திரிந்தார்.

கடைசியில் பெரிய வீட்டு வாசலில் வந்து நின்றார். வந்தவரை ஓடோடி வந்து உள்ளே அழைத்துச் சென்றாள் மதி. பெரியவரைக் கதிரையில் அமர்த்தி உணவளித்தாள். அப்போதுதான் தான் வைத்திருந்த அதே தட்டைக் கண்டு அவள் அழுதேவிட்டாள். பெரியவருக்கு விபரம் தெரிந்தவுடன் பரவசத்தால் துள்ளினார். ஆனால் தான் செய்த துரோகத்தை நினைத்து அழுதார். மதியோ அதைப் பொருட்படுத்தாமல் பெரியவரைத் தனது வீட்டில் நிரந்தரமாக இருத்தி உணவளித்தார்.

இரக்கமுடையோர் பேறு பெற்றோர் ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவர். (மத்தேயு 5:7)

*செ. வினோதினி (யூலி), மன்/ பரிகாரிகண்டல்*
*அ.த.க. பாடசாலை.*

# கவிதைப் பூக்கள்

### ஊரோடு ஒத்து ....

அடுத்தவனுக்கு அன்பை ஊட்டிடு
அகிலம் போற்ற வாழப் பழகிடு.
அனைவருக்கும் ஆறுதல் கூறிடு
இதய வீட்டில் இன்பமாய் வாழ்ந்திடு
இன்முகத்துடன் இணைந்து செயலாற்றிடு
இதய நேர்மையை எப்போதும் பேணிடு
அனைவரையும் சமமாய் மதித்திடு
உலகப் பெருமையில் மூழ்காதிருந்திடு
ஊரோடு ஒத்து வாழப் பழகிடு.

*தீ. றாஜன், பள்ளக்கமம், முருங்கன்.*

### அன்னையின் அரவணைப்பு

பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்த
அன்னையே வாழ்க!
பத்தியம பல காத்து பண்புடன் வளர்த்த
அன்னையே வாழ்க!
அன்புடனே அறிவை ஊட்டிடும்
அன்னையே வாழ்க!
பக்குவமாய் பாடசாலைக்கு அனுப்பி வைத்த
அன்னையே வாழ்க!
வாழ்க வாழ்க வாழ்க அன்னையே!

*தீ. பமிலா, பள்ளக்கமம், முருங்கன்.*

### உயிர் நிலைக்க

அன்பு என்று சொன்னால் அகிலம் முழுதும் ஏங்கும்
பண்பு என்று சொன்னால் பாசம் நிறைந்து வழியும்
கருணை என்று சொன்னால் கண்கள் குளுமை அடையும்
இரக்கம் என்று சொன்னால் இனிமை மனதை நிறைக்கும்
வள்ளல் என்று சொன்னால் வளமை வாழ்வில் வளரும்
வரவு என்று சொன்னால் நாடு முழுதும் களிக்கும்
அமைதி என்று சொன்னால் அகிலம் அதற்காய் உருகும்
ஆற்றல் என்று சொன்னால் மனது மகிழ்ந்து பாடும்
அருள் என்று சொன்னால் உள்ள இருள் அகன்று போகும்
இயேசு என்று சொன்னால் உயிர் நிலைத்து நிற்கும்

*பி. வெனான்ஸ் சீயூஸ், ஆண்டு - 10, தேவன்பிட்டி.*

### வெண்புறாவே விலகிவிடாதே

ஐந்து ஆண்டுகள் அண்ணளவாய்
அரசுகளின் அசமந்தப் போக்குகளால்
வதைபட்டு வாடி இடிபட்ட எம் இனத்துக்காய்
வேண்டுகிறேன் வெண்புறாவே - வந்து
இலங்கையிலே நீ இறங்கிவிடு
இயன்றவரை உனக்கு இடமொதுக்க
இறைஞ்சுகின்றேன் என் இறைவனிடம்
தொடர்கின்ற சமர் ஓய்வு என்றும் தொடர்ந்திட
தொழுகின்றேன் வெண்புறாவே வந்து
இலங்கையிலே நீ இருந்துவிடு
சில எட்டப்பர் கூட்டத்தின் பல
நட்பற்ற செயல்களால் இளம் வட்டுக்கள் என்றும்
பலியாகி விடாமலிருக்க உனைப் பணிகிறேன் வெண்புறாவே
வந்து இலங்கையிலே நீ உறங்கிவிடு
வறுமையில் நோகடிக்காமல், வாழ்க்கையை சீரழிக்காமல்
உதயமான புதுவருடத்தில் இனிமையான எதிர்காலத்தைக்
கொண்டு முடிகின்ற விரைவில் வெண்புறாவே வந்து
இலங்கையை நீ அடைந்துவிடு
யுத்த கோஷங்களால் பூஜிக்கப்பட்டு
துப்பாக்கி வேட்டுக்களால் பாதிக்கப்பட்டு
மனிதக் கொலைகளால் நிலம் செங்குருதியாய்
செம்மணிகளாய் மாறாமலிருக்க உனைத்தேடுகிறேன்
வெண்புறாவே வந்து நீயும்
இருந்திடு இலங்கையின் இதயத்துள்ளே.

*ஐ.ஏ. பரிதா, மூர்வீதி, மன்னார்.*

# ஹைக்கூ கவிதைகள்





**மரணம்**
மறுக்க முடியாத
மர்மப்பரிசு

**மனிதன்**
மரணித்துப் போகும்
மனிதப் பண்பு

**மாது**
மயங்க வைக்கும்
மனித மாத்திரை

**பணம்**
உறவுகளை
ஒட்ட வைக்கும்பசை

**மேகம்**
சமுத்திரத்தின்மேல் ஓர்
அழகிய நீரோட்டம்.

*வே. அன்ரனீற்றா,*
*உயிர்த்தராசன் குளம்,*
*முருங்கன்.*

**கண்ணீர்**
ஏழைகளுக்கென்று
பிறந்த உரிமைச் சொத்து

**சோகம்**
கண்ணீரின் இன்னும்
ஓர் அரங்கம்

**தண்ணீர்**
தாகத்தை தீர்ப்பதற்கு
ஊறிய ஊற்று

**வாழ்க்கை**
போராட்டத்தை வென்று
எடுக்கும் ஆயுதம்.

**நம்பிக்கை**
சந்தேகத்தை தீர்க்கும்
மருந்து

**கண்கள்**
கண்ணீரை சுரக்கும்
அட்சய பாத்திரம்

**தூய்மை**
உள்ளங்களில் இருக்க
வேண்டிய நல் எண்ணம்

**பணம்**
மனிதனின் உயிரைக்
குடிக்கும் கொடியவன்

*ச. யூட்சி குரூஸ்,8ம் வட்டாரம்,*
*கெபியடி, பேசாலை.*

**முதுமை**
வாழ்க்கை புத்தகத்தின்
கடைசிப்பக்கம்

**இரவு**
குருட்டு விழிகளின்
சமத்துவ பொழுது

**மனிதன்**
உலகத்திரை
நடிகன்

**வாழ்க்கை**
சீராய் ஒட்ட நினைத்தேன்
ஏற்கனவே கிழித்துவிட்டேன்.

**குயில்**
ஸ்வரங்கள் தெரியாமலே
காணமிசைக்கும் சங்கீத மேதை.

*செ. சோபா சயந்தினி,*
*வண்ணாகுளம், அடம்பன்.*

# கொஞ்சமாச் சிரிங்க...!

அம்மா: உனது அப்பா மயானத்தில் புல் வெட்டும் வேலை ஒன்றில் சேர்ந்திருக்கிறார் மிகவும் நல்ல கௌரவமான வேலையாம். தனக்குக் கீழே சுமார் 500 பேர் வரை இருக்கிறார்களாம். தான் 500 பேருக்கு மேலாக வேலை செய்வதாக எல்லோருக்கும் சொல்லி பெருமையடைகிறார்.
மகன்: அப்ப அவருக்கு 500 பேரின் சம்பளமும் கொடுப்பார்களா?
அம்மா: அந்த 500 பேரும் செத்த பிணங்கள்.

*எம். சசி, ஆட்காட்டிவெளி.*

நோயாளி: டாக்டர் எனக்கு கண்ணிலிருந்து தண்ணி தண்ணியா வருது
டாக்டர்: எனக்கு மட்டும் என்ன பிளேன்ரீயா வருது.

******************

தாத்தா: பேரா இந்தக் கடிதத்தை உதில போற இடத்தில போட்டுட்டுப் போவேனப்பு
பேரன்: சரி தாங்க தாத்தா
தாத்தா: தம்பி கடிதத்தைப் போட்டியா?
பேரன்: ஓம் தாத்தா இரண்டாவது வீட்டுப் படலைக்கிட்ட போட்டுட்டன்.

*செ. வினோதினி (யூலி), தரம் - 10, நறுவிலிக்குளம்.*

*****************

பூமிசாஸ்திர வகுப்பறை! ஆசிரியரோ அறிவுக்கடல், மாணவர்களோ மதிநுட்பக் களஞ்சியங்கள்............
ஆசிரியர்: உலகம் உறுண்டையல்ல, கோழிமுட்டை வடிவம்! சரிதானே
மாணவர்: சரிசேர், ஆனால் வடிவம், கோழியைப் பொறுத்தது!
ஆசிரியர்: இல்லை, உலகமே ஒரு கூழ் முட்டை !!

*"முகத்தார்", பிரான்ஸ்*

ஆசிரியர்: குமார் மரத்தில் இருந்து விழுந்தான் இது என்ன காலம்
மாணவன்: அது அவனுடைய கஸ்ர காலம்

******************

ஆசிரியர்: நல்ல காரியங்களுக்கு வாழைமரம் கட்டுவது ஏன்?
மாணவன்: விழுந்து விடாமல் இருக்க.

*ஜெ. நவீன், ஆண்டாங்குளம்.*



முடிதிருத்துபவர்: இதற்கு முன் இங்கே வந்திருக்கிறீர்களா?
வந்தவர்: வந்திருக்கின்றேன்
முடிதிருத்துபவர்: உங்க முகத்தை பார்த்த நினைவே இல்லையே
வந்தவர்: இருக்காது தான் ஏன்னா எல்லாக் காயமும் ஆறி விட்டது.

*****************

அரசியல்வாதி: உங்க பத்திரிகையிலே என்னை முட்டாள், அயோக்கியன்னு திட்டி ஏன் எழுதுறீங்க.
ஆசிரியர்: எங்க பத்திரிகையில் உங்களைப்பற்றி அப்படி ஒருக்காலும் எழுதியிருக்க மாட்டோம்.
அரசியல் வாதி: எதனால் அப்படி உறுதியாக சொல்றிங்க.
ஆசிரியர்: எல்லோருக்கும் தெரிந்த செய்தியை நாங்கள் வெளியிடுவது இல்லை.

*****************

மகன்: ஏம்மா பக்கத்து வீட்டுல இருக்கிறவங்க ரொம்ப ஏழையம்மா
தாய்: இல்லடா கண்ணா ஏன் அப்படிக் கேக்கறே
மகன்: அவங்க வீட்டுக் குழந்தை 25 காசு நாணயத்தை விழுங்கிட்டதுக்கு இப்படி அழுது ஆர்ப்பாட்டம் பண்றாங்களே.

*பி. திலிபன், ஆட்காட்டிவெளி.*

நண்பன்: உங்க பையன் குடிக்கிறானே, நீங்க கேட்கக் கூடாதா?
மற்றவர்: நானே இப்ப ஃபுல்லா இருக்கிறன். அவன் கிட்ட வேற வாங்கிக் குடிச்சா விழுந்திடுவேன்.

*யே. ஆன் நிறோஜா, பொன்தீவு கண்டல், முருங்கன்.*

தந்தை: டேய்! சோம்பேறி சூரியன் எழுந்து எவ்வளவு நேரமாகின்றது இன்னும் தூங்கிக் கொண்டே இருக்கிறாயே? எழுந்திரு.
மகன்: அப்பா! சூரியன் ஆறு மணிக்கே படுக்கப் போய்விட்டது. நான் இரவு பத்து மணிக்குத்தானே படுக்கிறேன்.

*சந்தான் கொண்சிலா, வண்ணாகுளம், அடம்பன்.*

ஒருவர்: ஒரே வீட்டில் இருந்த மாமியாரையும் மருமகளையும் பிரிச்சு வைத்ததே பெரிய பிரச்சனையாக இருக்கு
மற்றவர்: ஏன் சேர் என்ன பிரச்சனை
ஒருவர்: டெலிபோனில் சண்டை பிடிச்சி பிடிச்சி கரண் காசு ரொம்ப அதிகமாச்சு.

******************

கணவன்: புது மேனேஜர் வந்ததில இருந்து ஆபிஸ்ல ஒழுங்கா தூங்கக்கூட முடியல.
மனைவி: ஏன் அவ்வளவு கண்டிப்பானவரோ
கணவன்: இல்லை அவ்வளவு பெரிய சத்தமாக அவரே கொறட்டை விட்டு தூங்குறார்.

*அ. எட்னா குரூஸ், தரம் 10, பூங்காவீதி,*
*தாழ்வுபாடு, மன்னார்*

நம் மண்ணின் விசுவாசம்

## வாழ்வு தரும் வார்த்தை

“இரத்தம் சிந்தி சுத்திசெய்யப்பட்ட மண் அசுத்தமாக்கப் படுகின்றதா?”

நம் மண்ணின் விசுவாசம்

# இறை விசுவாசத்தை ஆழப்படுத்துவோம்

*– பி. நொய்லின் லியோன், அரிப்புத்துறை, முருங்கன் –*

தூய வேதசாட்சிகளின் பரிசுத்த இரத்தத்தினால் சுத்தி செய்யப்பட்ட மன்னார் மறைமாவட்ட மண்ணானது புதுப்பித்தலின் பாதையில் நடைபயின்றாலும் இன்றும் ஒருசிலர் அண்ணாவியார் எனப்படும் சாத்தானின் தூதுவர்களின் அடாவடித்தனங்களுக்கு உட்பட்டு வாழ்வது கவலைக்குரியது. கஷ்டங்களைப் போக்க கரம் நீட்டி கடவுளை இரந்து வேண்டி, மன்றாடி வரங்கள் பெறுவதற்குப் பதிலாக, இன்றும் சிலர் கடாக்களை வெட்டி அதனை சாத்தானுக்குச் சமைத்து சாதமிட்டுத் தலை வரைக்கும் தமது செல்வத்தை பெருக்க முனைகின்றனர்.

மருதமடு அன்னை பதியமைத்து வாழும் இப்புண்ணிய பூமியானது மறையை - அதன் விசுவாசத்தைப் புதுப்பிக்க பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. ஆனால் சிலர் இன்றும் தெய்வத்தைத் தேவராகவும், தேவரைத் தெய்வமாகவும் கருதி வாழ்கின்ற நிலை உள்ளது.

இறைவன் தாம் படைத்த மானிடர் மாண்பு பெறவும், அவர்களது அவல நிலைகள் அகன்றுபோகவும் அருள் கூர்ந்து அவர்களுக்கு தொடர்ந்து அருள்வளங்களை அளித்துக்கொண்டே இருக்கின்றார். மனிதனின் கட்டுக்கடங்காத பேராசையினால், தேவைக்கு அதிகமாகப் பெற்று வாழ விரும்பி தேவர்களையும், அவர்களின் தூதுவர்களையும் கொண்டு மிருகங்கள், காய்கனிகளைப் படைத்துப் பலியிட்டு அதன் மூலம் தனது ஆசையை அடைத்துக் கொள்ளவிரும்புகின்றான். இவ்வாறு செயற்படுவோர் குறித்து இறைவார்த்தை எச்சரிக்கின்றது.

*“பொய்யர் சொல்லும் குறிகள் பலிக்காதவாறு செய்கின்றேன் மந்திரவாதிகளை மடையராக்குகின்றேன் ஞானிகளை இழிவுறச் செய்து அவர்களது அறிவு மடமையெனக் காட்டுகின்றேன்” (எசாயா. 44:25)*

மனிதன் பில்லி, சூனியச் செயல்களினால் தான் இன்புற்று வாழ்வதோடு மட்டும் நின்றுவிடவில்லை. அவனுடைய சுயநலம் அவனை சும்மா இருக்க விடுவதில்லை. அவன் ஏனைய மனிதன் கொண்டிருக்கும் செல்வங்களைத் தான் பெற்றுக்கொள்ளவும், அல்லது அதனை இல்லாதொழிக்கவும் விரும்பி அயலவனுக்கு எதிராகக் கேடுவிளைவித்து சாத்தானின் மூலம் அவனது வாழ்வை சீரழித்து அழிகின்றான். இவ்வாறான செயல்களினால் தன் குடும்பத்தவர்கள், உறவினர்கள் ஏன் தன்னையே இழந்தும் விடுகின்றான். *“விண்வெளியே கேள், மண்ணுலகே செவிகொடு. ஆண்டவர் திருவாய் மலர்ந்தருளுகின்றார். பிள்ளைகளைப் பேணி வளர்த்தேன். அவர்களோ எனக்கெதிராகக் கிளர்ந்தெழுந்தார்கள். காளை தன் உடைமையாளனை அறிந்துகொள்கிறது. கழுதை தன் தலைவன் தனக்கு தீனி போடும் இடத்தை அறிந்துகொள்கிறது. ஆனால் இஸ்ராயலோ என்னை அறிந்துகொள்ளவில்லை. என் மக்களோ என்னைப் புரிந்துகொள்ளவில்லை.” (எசாயா 1 : 3)*

இவ்வாறு மனிதர்கள் அழிந்து சீரழிவதை விரும்பாது அவர்களை இறை வழியில் திசைதிருப்ப இறைவன் பல்வேறு இறைபணியாளர்களை இன்றும் அனுப்பிக்கொண்டே இருக்கின்றார். அவர்களின் நற்செய்திப் போதனைகள் அதிகரிக்க அதிகரிக்க தீய சக்திகளும் தம் வேலைகளைச் செய்யவே செய்கின்றன. நமது மக்களில் சிலர் இப்படியானவர்களின் செயல்களுக்கு விலை போகின்றனர்.

“உங்கள் கைகளோ இரத்தக் கறையால் நிறைந்துள்ளன. உங்களைக் கழுவித் தூய்மைப் படுத்துங்கள். உங்கள் தீச்செயலை என்முன்னிலிருந்து அகற்றுங்கள்.” (எசாயா 1: 16) எனவே விசுவாசிகளே, விழிப்புடன் இருந்து, சாத்தானையும், தேவர்களையும் எமது மக்கள் மத்தியில் புகுத்த வருபவர்கள் பற்றி எச்சரிக்கையுடன் செயற்படுங்கள். அப்படியானவர்கள் பற்றி எமது மக்களுக்கு, குறிப்பாக இளம் சமுதாயத்தினருக்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துங்கள். இறைவனில் நம்பிக்கை கொண்டு உங்கள் செல்வ வளத்தைப் பெருக்குங்கள். இவ்வுலக செல்வத்தைச் சேர்க்க அக்கறை காட்டுவதுபோல மறுவுலக செல்வத்தைப் பெற்றுக்கொள்ளவும் இன்னும் அதிகமாக அக்கறை காட்டுங்கள்.

தூய வேதசாட்சிகளின் இரத்தத்தினால் சுத்திகரிக்கப்பட்ட எமது மண் மிருக இரத்தத்தினால் கறைபடுத்தப்படாது இருக்கட்டும். விசுவாச வித்துக்கள் இன்னும் அதிகமாக, ஆழமாக விதைக்கப்பட்டு இறை இயேசு மட்டும் என்றும் உயிர் வாழும் மண்ணாக உருப்பெறட்டும். இயேசுவுக்கு சாட்சிகளாக வாழ்வோம்.


*“ஆண்டவர்மேல் நம்பிக்கை வைத்திருப்பவர்களோ புதிய ஆற்றல் பெறுவர். கழுகுகள்போல் இறக்கை விரித்து உயரே செல்வர்.” (எசாயா 40: 31).*

**“பொய்யார் சொல்லும் குறிகள் பலிக்காதவாறு செய்கின்றேன் மந்திரவாதிகளை மடையராக்குகின்றேன் ஞானிகளை இழிவுறச் செய்து அவர்களது அறிவு மடமையெனக் காட்டுகின்றேன்”**
(எசாயா. 44:25)



# எப்படி செபிக்க வேண்டும்?

## சிந்தனைக் கதை



ஊரிலே ஓர் அரசன் இருந்தான். ஒருநாள் அவனைத் தேடி ஐந்து இளைஞர்கள் வந்தார்கள். அரசன் அவர்களை அழைத்து விசாரித்தான்.

முதலாமவன் அரசனிடம் கூறினான் “மாண்புமிகு மன்னவரே எனக்கு 28 வயதாகின்றது. நான் திருமணம் செய்யப்போகின்றேன். என்னிடம் சல்லிக்காசுகூட இல்லை. நீங்கள் மனமிரங்கி எனக்கு உதவவேண்டும்” எனக்கேட்டான். அரசன் அவனுக்கு நூறு பொற்காசுகள் வழங்கும்படி கட்டளையிட்டான்.

இரண்டாவது நபர் “மன்னா எனக்கு ஐந்து ஏக்கர் நிலம் உண்டு என்னிடமிருந்த இரு காளைமாடுகளும் கோடைவெயிலில் நோய் வாய்ப்பட்டு இறந்துவிட்டன. அதனால் என்னால் விவசாயம் செய்ய முடியாதுள்ளது. என்மேலும் என் பெற்றோர் சகோதரர்கள் மேலும் இரங்க வேண்டும்” என்று கூறி முடிப்பதற்கு முன்பே “ஒரு சோடி காளைமாடுகள் உனக்கு வழங்கப்படும்” என்றான் மன்னன்.

மூன்றாம் நபர் “கருணைமிக்க வள்ளலே, என் பெற்றோர் இருவரும் நோய்வாய்ப்பட்டு கடந்த இருமாதங்களாகப் படுத்த படுக்கையாய் இருக்கின்றார்கள்” ஏன்று தன் தேவையைக் கூறுமுன்பே சிறந்த ஒரு வைத்தியரிடம் அவர்களை அழைத்துச் செல்லவும் அவர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுக்கும்படியும் அரசனிடமிருந்து ஆணை பிறந்தது. நான்காம் இளைஞன் “மன்னா எனக்கு ஒரு வேலையின்மையால் என்னால் உழைக்க முடியவில்லை. என் பெற்றோர் குடும்பத்தைப் பராமரிக்க முடியவில்லை” என்றான். மன்னன் அவனுக்கு களஞ்சியங்களுக்குப் பொறுப்பான அதிகாரியின்கீழ் வேலை ஒன்று போட்டுத்தந்தார்.

ஐந்தாம் இளைஞனை அரசன் நோக்க அவன் “மாண்பு நிறை வேந்தனே! எனது குடும்பத்தில் ஐந்து அங்கத்தினர். பெற்றோரும் மூன்று பிள்ளைகளும் உள்ளோம். தாங்கள் கருணை கூர்ந்து எமது இல்லத்தில் மாதத்தில் ஒரு நாள் விருந்தினராக வந்து தங்கிச் செல்லவேண்டும். தங்கள் மாண்புக்கும் கௌரவத்துக்கும் ஊறு இல்லாத வகையில் தங்களைப் பார்த்துக் கொள்வோம்” என்றான்.

எல்லோரும் அவனை விசித்திரமாகப் பார்த்தார்கள். அரசன் சிரித்துக்கொண்டு, “அதற்கென்ன மாதத்தின் இறுதிச் சனிக்கிழமைகளில் நான் உங்கள் வீட்டில் விருந்தினராகத் தங்கியிருப்பேன்” என்று கூறினார்.

மன்னன் அந்த வீட்டிற்குச் செல்ல வேண்டுமென்பதால் தலைநகரிலிருந்து அக்கிராமத்திற்குச் செல்லும் வீதி விசாலமாக்கப்பட்டு புனரமைப்புச் செய்யப்பட்டது. வீதியோரங்களில் நிழல்மரங்கள் நடப்பட்டன. அக்கிராமத்தின் தண்ணீர் தேவை கருதி பெரிய குளம் ஒன்று அமைக்கப்பட்டது. விவசாயப் பெருக்கத்துக்கு தேவையான வசதிகள் மக்களுக்கு வழங்கப்பட்டன. பழமரங்கள் வீடுகள்தோறும் நடப்பட்டன. வைத்திய நிலையம் - கல்வி நிலையம், தொழிற்சாலைகள் நிறுவப்பட்டன. பல வசதிகள் ஏற்படுத்தப்பட்டமையால் இப்போது அக்கிராமத்து மக்கள் செல்வச் செழிப்புடன் சிறப்பாக வாழ்ந்தனர்.

கடவுளை நோக்கிய எமது செபங்களும் முதல் நான்கு இளைஞருடயதைப் போன்று நம் தேவைகளை முன்னுரிமைப்படுத்துவதாகத்தான் அமைந்திருக்கின்றன. அதற்கு மாறாக கடவுளை நம் உள்ளத்துக்கும் இல்லத்திற்கும் அழைப்பதாக அமைந்திருந்தால், நாம் நம் உள்ளத்தையும் இல்லத்தையும் இறைவனுக்குப் பொருத்தமான இடமாக மாற்றி அமைப்போம். அதுமட்டுமல்ல இறைவனின் வருகை நமக்கு மட்டுமல்ல நமது அயலவர்களுக்கும் பயனுடையதாக அமையும். நாமும் மற்றவர்களுக்கு இறைவனைக் கொடுக்கக் கூடியவர்களாக மாறுவோம்.

நன்றி : இன்றொரு தகவல், திருச்சி வானொலி. - றொசாறியன் -

## “உன் பணிக்கு நான் இதோ”

# தேவ அழைத்தல் தினம்

இறைவனின் குரலைக்கேட்டு குருத்துவப் பணிக்கு தங்களை அர்ப்பணிக்க விரும்பி 2005ம் ஆண்டு தை மாதம் சிறிய குருமடத்தில் நுழைய விரும்பும் மாணவரே, நீங்கள் உங்கள் பங்குத்தந்தை மூலமாக தொடர்புகளை ஏற்படுத்தி குருமட நுழைவுப்படிவத்தைப் பூர்த்திசெய்து நேரகாலத்தோடு எமக்கு அனுப்பி வையுங்கள்.



இவ்வருட இறை அழைத்தல் தினத்தை கடந்த வைகாசி மாதம் 2ம் திகதி மன்னார் மடுமாதா சிறிய குருமட அதிபர், மாணவர்கள், முருங்கன் மறைக்கோட்ட பீடப்பணியாளர்கள் 147 பேருடன் முருங்கன் பங்கில் சிறப்பித்தார்கள். இந்நிகழ்வில் இறை அழைத்தல் உரைகள், இறை அழைத்தல் கண்காட்சி, இறை அழைத்தல் பாடல்கள், நாடகங்கள், சிறப்புரைகள் சிறப்புத்திருப்பலி என்பன நடந்தேறின. அன்றைய நாளானது அனைத்து மாணவர்களையும் கவர்ந்ததோடு சிந்திக்கவும், செயற்படவும் தூண்டியது. இறை அழைத்தல் மன்னார் மறைமாவட்டத்தில் பெருக இந்நிகழ்வு ஓர் அரிய பெரிய தூண்டுகோலாக அமைந்தது. தொடர்ந்தும் பல பங்குத்தந்தையர்களின் அழைப்பின்பேரில் பங்குகளுக்குச் சென்று இறை அழைத்தல் பற்றிய சிந்தனைகள் குருமட அதிபராலும், மாணவர்களாலும் வழங்கப்பட்டு வருகின்றன. இப்பணிக்கு தம்மை அர்ப்பணித்து இச்சிந்தனைகளைக் கேட்க தொடர்ந்தும் பல மாணவர்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

## 2005ம் ஆண்டில் குருமட நுழைவுக்கான அறிவுறுத்தல்கள்

ஒரு குருமட மாணவன் குருமடத்தில் சேர்வதற்கு ஒரு வருடத்திற்குமுன் தனது சுய விருப்பத்தை நேரடியாகவோ அல்லது பெற்றோர் மூலமாகவோ தனது பங்குத்தந்தையிடம் தெரிவித்தல் வரவேற்கத்தக்கது. இதன் மூலம் அந்த மாணவன் எப்படிப்பட்டவர் என்பதை பங்குத்தந்தை நன்றாக இனங்கண்டு தேவ அழைத்தலுக்கான அறிகுறிகளையும், தகைமைகளையும் அவர் கொண்டுள்ள்ர் என்பதை பங்குத்தந்தை அறிந்து சிபார்சு செய்ய முடியும். மாணவர்களைக் குருமடத்திற்கு அனுப்ப விண்ணப்பிக்குமுன் அவதானிக்கப்பட வேண்டிய அம்சங்களை இத்துடன் அறியத்தருகின்றோம் 1. குடும்பப் பின்னணி : (பெற்றோரின் விசுவாசம், நற்பெயர், ஆலயத்தில் ஈடுபாடு, சமூக செயற்பாடுகள்)

2. ஆன்மீக அடித்தளம் : (வழிபாட்டில் ஆர்வம், மறையறிவு)

3. மனித வளர்ச்சியும், கல்வியும் : (உடல், உளம் சார்ந்த நோயிலிருந்து விடுபட்டவர், சராசரியான கல்வியறிவு உடையவரும் நாளாந்தம் தானாக படிப்பவராகவும் இருத்தல் வேண்டும்)

4. சமூக நடத்தையும் தனிப்பட்ட மனித நடத்தையும் உடையவராயிருத்தல்: (உண்மை, நேர்மை, கீழ்ப்படிவு, மகிழ்ச்சி, அமைதி, ஒழுங்கமைப்பு, ஏனைய பண்புகள் உடையவராக இருத்தல் வேண்டும்.) அத்துடன் பிற்காலத்தில் இவரை பாதிக்கும் காரணிகளை அவதானிக்க வேண்டும். குருமட அதிபருக்கும், பங்குத்தந்தையர்களுக்கும், பெற்றோருக்கும் சேரவிருக்கும் மாணவனுக்கும் அன்புறவும், நல்ல தொடர்பும் இருத்தல் வேண்டும். (தொடர்ச்சி 9ம் பக்கம்)

# கலை இலக்கியச் சாளரம்

## கவிதைக் களம்

### இரக்கம் மலரட்டும்

மானிடர் வாழ்க்கையை நோக்கின்
மாண்புகள் அழிகின்ற நிலைதான்
மனிதனையே மனிதன் அடிமையாக்கியே
மண்ணில் புதைக்கும் கொடூர நிலைதான்
ஒரு தாய் வயிற்றின் பிள்ளைகளாய் வாழ
ஒற்றுமையாய் ஒன்று கூடிடவே
இதயத்தில் இரக்கம் எனும் மலரினையே
என்றும் இதழாய் மலரச் செய்வோம்.
வீதியிலே விபத்தினால் ஒருவன் கிடக்கிறான்
பார்க்காமல் செல்கின்றோம் பாவிகள் நாம்
இரக்கம் என்ற எண்ணம் எங்கே
இதையே எம் உள்ளத்தில் விதைத்திடுவோம்.
ஏழைகளை தினம் வெறுத்தொதுக்கியே
ஏளனம் செய்யும் இவ்வுலகினிலே
இரக்கம் என்ற ஓர் உயரிய பண்பை
இதயமதில் மலர்ந்திடச் செய்வோம்.
ஆறாத் துயரிலே அழுகின்ற இதயங்களுக்கு
இரங்கியே ஆறுதல் கூறிடுவோம்
இதயமதில் இதமான மணம் பரப்பும்
இரக்கம் என்னும் மலர் மலர்ந்திடட்டும்.

*செ. சிந்து, ஆத்திக்குளி, முருங்கன்*

### குறைந்து போன அன்பு

வசதி இல்லாக் கவலை
வசதியுள்ளவர்களுக்கு தெரிவதில்லை
பாசம் இல்லாக் கவலை
பாசமுடன் வாழ்பவர்களுக்கு புரிவதில்லை
பிள்ளையில்லாக் கவலை
பிள்ளை பெற்றவர்களுக்கு தெரிவதில்லை
சந்தோஷம் இல்லாக் கவலை
வேதனைப்படாதவர்களுக்குப் புரிவதில்லை.
சோகம் என்பது
வேதனையில் வாழ்பவனுக்குப் புரியும்
பாசம் என்பது
ஏங்கும் உள்ளத்திற்குத் தெரியும்
மனிதன் துணை ~ உயிர் இருக்கும் வரை
இறைவன் துணை ~ ஆன்மா இருக்கும் வரை
அன்பைச் செலுத்து.
அமைதியான வாழ்க்கையை நடத்து.
அகங்காரத்தை நிறுத்து.
ஒழுக்கத்தை மனதினுள் புகுத்து.
தீமை செய்வதை விட்டு ~ உன்
மனதில் உள்ள கபடத்தை விரட்டு.
பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடையில்
நல் மனிதனாக வாழ்ந்துவிடு.
உன் ஆன்மாவுக்கு இறைவனால்
அமைதி கிடைத்துவிடும்.
பொய்கள் பேசாதே ~ அன்பு மனம் தாங்காது.
வார்த்தைகளை அள்ளி வீசாதே.
என் கண்கள் இனித் தாங்காது.
இருதயம் இரும்பல்ல
சரியில்லையென்றால் புது வடிவம் செய்ய.
உன் வீட்டு வாசலுக்கு
நான் வர முடியாவிட்டாலும் ~ என் கருத்துக்களைத்
தாங்கி மன்னா உன் வீடு வரும்.
மனம் என்ற ஒன்று எனக்கும் இருந்தது ~ அது
இப்போது மரணம் என்ற
ஒன்றை மட்டுமே விரும்புகின்றது.

*அ. ராசேந்திரன், கீளியன்குடியிருப்பு*

### பணிந்து போய்விடு

அதிகாரத்தின் இறுக்கமான பிடிகள்
அசிங்கமான கோடுகளாக மாறி
உன்னை அடக்கியாழ முன்பே
உலகை நொந்து கொள்ளாமல்
பணிந்து போய்விடு.............!
ஒருவேளை உன்னைப் பாதித்த
அந்த வடுக்கள் ஒவ்வொன்றும்
அழகிய மச்சங்களாக மாறிவிடும்.
அதனால் இப்போதே.... இன்றே....
பணிந்து போய்விடு.
அன்பைக் கண்டு ஒரு படை உன்பின்னால்
அணி திரண்டு நடை பயில
அதிகார வர்க்கம் உன்னை
ஆட்டிப் படைக்க முனையும்
பணிந்து போய்விடு.
உனது ஆற்றல் கண்டு
உலகம் உன்னைப் பாராட்ட
அதிகார வர்க்கம் உன்னை
அவமானப்படுத்த முயலும்.
தளராதே.... நடை போடு.
ஆனால் பணிவாக.... அதனால்
பணிந்து போய் விடு......!
அளிப்பார் இயேசு வெற்றியுனக்கு.

*அருட்சகோதரி*
*யோ. இராஜரட்ணம் S.C.J.M,*
*செட்டிகுளம்.*

### சமர்ப்பணம்

அன்புருவாய் வந்தவரை
ஆழமான அன்புடன்
இல்லமெங்கும் போற்றிடவே
ஈன்றெடுத்த தாய்மரியே.
உன்னடி வணங்குகின்றேன்
ஊன்றுகோலாய் இருமம்மா.
என்னுகின்ற எண்ணமெல்லாம்
ஏற்றம் பெறவேண்டும் தாயே
ஒற்றுமையே வேண்டும் என்று
ஓதுகின்ற மக்களுக்கு
ஔவையின் வழியினிலே
இஃது உரைப்பாய் நன்னெறியே.

*திரு. த. யேசுதாசன், பாடசாலை வீதி,*
*பெரிய பண்டிவிரிச்சான், மடுக்கோவில்*

மன்னா சிறுகதை

## தகரப்பீங்கான்

அ. வேஜினி றெவல்,
முள்ளிக்குளம்,
மறிச்சுக்கட்டி.



தண்டுப்பகுதி கொஞ்சம் மெல்லியதாக இருந்தாலும் அதன் கிளைகள் பாய்ந்தோடும் நதிகளாக பரந்திருந்தன. அடர்த்தியான இலைகள்! கொத்து கொத்தாய் காய்கள்! செழிப்பாய் இருந்தது அந்த வேம்பு மரம்!
அதன் நிழலில் கோழிக்கூட்டைவிட மோசமான ஒரு குடில். கூரையிலும் சுற்றுப்புறத்திலும் எக்கச்சக்கமான துவாரங்களுடன் சூரியக்கதிர்களை வரவேற்கக் காத்திருந்தது அக்குடில்.
அக்குடிசைக்குள் வயதுபோன கிழவி தனிமையில் படுத்துக்கொண்டு முனங்கிக்கொண்டு இருந்தாள். யாரோ வந்து குடிசையின் கதவைத் தட்டும் சத்தம் கேட்டது.
"யாரது" அவள் பொக்கை வாயால் வார்த்தை சக்கையாகி வந்தது. "நான்தான் பாட்டி வந்திருக்கிறன்" என்ற சிறுபிள்ளையின் குரல் கேட்டு, "யாரது மீனா கண்ணுவா?" என்றவாறே பாட்டி பக்கத்தில் கிடந்த தடியின் உதவியோடு எழுந்து சென்று கதவைத் திறந்தாள். அங்கே அவளின் பேத்தி மீனா தகரப்பீங்கானில் இரண்டு மூன்று பாண் துண்டுகளோடு நின்று கொண்டிருந்தாள். "இந்தாங்க பாட்டி பாண்" என்றவாறே தகரத் தட்டினை நீட்டினாள். "நீங்க எல்லாம் சாப்புட்டிட்டீங்களா?" என்று பாண் துண்டுகளை எடுத்துக்கொண்டு பீங்கானை நீட்டியவாறு கேட்டாள் பாட்டி. "எண்டைக்காயினும் நாங்க சாப்பிட முதல்ல ஒனக்கு அம்மா சாப்பாடு தந்திருக்காங்களா? நீ என்னடானா சாப்புட்டிட்டீங்களானு கேட்கிறே....." "என்னம்மா செய்யிறது? பெத்த மனசாச்சே பாசத்த மறக்க முடியுமா?" என்றாள் பாட்டி. "உனக்கு அவுங்க மேலே பாசமிருக்குது. ஆனா அவுங்களுக்கு உன்மேல பாசமில்லையே"?
"ஏம்மா அப்படிச் சொல்றே? அவுங்களுக்கு நிறைய பாசமிருக்கும்மா"
"அப்போ ஏன் பாட்டி ஒன்ன ஓலைக்குடிசையில் கோழிய மாதிரி அடைச்சுப் போட்டிருக்காங்க? எங்களுக்கெல்லாம் பளிங்கு தட்டில் உணவு பரிமாறும் அம்மா உனக்கு மட்டும் தகரப்பீங்கானில் தாறாங்க?"
"அட அதுவா எனக்கு வயசாயிடுச்சேலாமா? குலையை வெட்டினதுக்கப்புறம் எதுக்கம்மா வாழைமரம்? அது மாதிரித்தான் நானும்" என வாயால் சொல்லும்போது கண்கள் கலங்கின.
"என்ன பாட்டி கண் கலங்கிறா?"
"தூசி விழுந்திடிச்சம்மா"?
"அப்போ ஏன் பாட்டி ரெண்டு கண்களும் கலங்குது"?
"ரெண்டு கண்ணிலும் தூசி விழுந்திடிச்சும்மா அதுதான் ரெண்டு கண்ணும் கலங்குது"?
"சரி பாட்டி, நான் போறேன். அம்மா தேடுவா" என்றவள். அக்குடிசைக்கு முன்னால் உள்ள பெரிய வீட்டை நோக்கி ஓடினாள்.
அந்தப் பெரிய வீடு வேறு யாரினதுமில்லை அக்கிழவியின் மகனுடையதுதான். அவனுடைய சின்ன வயதிலே அப்பா இறந்துவிட எவ்வளவோ சிரமப்பட்டு அவனை வளர்த்து படிக்க வைத்து ஆளாக்கினாள் அவள். ஆனால் படித்து பட்டம் வாங்கினதுக்கப்புறம் தன் இஸ்டத்திற்கு காதலித்து கல்யாணம் பண்ணிக்கொண்டான். அதன்பின் அவனுக்கு மனைவி சொல்லே மந்திரமாகிப்போனது. கடைசியாக பெற்று வளர்த்தவள் குடிசைக்குள்ளும் நேற்று வந்தவள் மாளிகைக்குள்ளும் சொந்தமாகிப் போயினர்.

அன்று இரவு தென்றலாய் வீசிய காற்று கொஞ்சம் வேகமாக வீசத்தொடங்கியது. அந்தக்குடிசையால் அந்தக் காற்றுக்கு ஈடுகொடுக்க முடியவில்லை. அங்குமிங்குமாய் அசைந்தது. மழை வேறு பலமாய் பெய்யத்தொடங்கியது. அதனால் கிழவி செய்வதறியாது தவித்தாள். கதிரவன் இமை திறக்க கடலலை கலகலக்க சேவல் கூவ காலை கண் விழித்தது.
"ஏய் மீனா இங்க வச்சிருந்த தகரப்பீங்கானெங்க?" தேடியும் காணாத அலுப்பில் கொஞ்சம் கடுமையாகவே கேட்டாள் தாய். "அதுவாம்மா...... நான் பத்திரமா வச்சிருக்கிறேன்." "அதை எதுக்கு நீ எடுத்து வச்சே? கெதியா எடுத்திட்டு வா. பாட்டிக்கு சாப்பாடு கொடுக்கனும்".
"மாட்டேன் அது எனக்கு வேணும்".
"அது எதுக்கு ஒனக்கு! தகரப்பீங்கான் புதுசா வாங்கித்தாரேன் அதக்கொண்டுவா"?
"எனக்கு புதுசா வேணாம் அதுதான் வேணும்" அவள் அடம்பிடித்தாள்.
'என்னடி வீணா அடம்பிடிக்கிறே?' என்றவள் முதுகில் ரெண்டு தட்டுத்தட்டினாள். உடனே மீனா அழத்தொடங்கிவிட அவள் பக்கத்தில் வந்து அவளின் அப்பா, "சரி கண்ணு அழாதே அப்பா வேற ஒன்னு வாங்கித்தாறேன் அதைக்கொடு" என்றான்.
'எனக்கு அதுதாம்பா வேணும்'
"அது எதுக்கு உனக்கு? அதுதான் வேணும்னு ஏன் அடம்பிடிக்கிறே?"
'அது வந்துப்பா பாட்டிக்கு வயசானதாலதானே இந்தப்பழைய தகரப்பீங்கானில் சாப்பாடு கொடுக்கிறீங்க. உங்களுக்கு வயசானதுக்கப்புறம் நான் உங்களுக்கு சாப்பாடு தாறதுக்கு எங்கே போய் தகரப்பீங்கான் தேடுவேன். அதுதான் எடுத்து வச்சிட்டேன்' என்றாள் சிறுமி.
அதைக்கேட்ட அவனும் அவளும் அதிர்ச்சியில் ஆடிப்போயினர். தாம் செய்த தவறை அந்தப் பிஞ்சு மூலம் உணர்ந்து கொண்டவர்கள் குடில் நோக்கி ஓடினார்கள். அங்கே குடில் தரையோடு சாய்ந்திருந்தது. அதைக் கண்டவர்களுக்கு திக்கென்றது. ஓடிப்போய் சாய்ந்த குடிலை அப்புறப்படுத்திப்பார்க்க அங்கே அவள் உயிர் இவ்வுலகை விட்டுப்போய் வெகு நேரமாயிருந்தது.
இதை நினைத்து நினைத்து தினமும் வெந்து சாவதே அவனுக்கும் அவளுக்கும் கிடைத்த தண்டனையாகும்.

தொடர் கட்டுரை - அங்கம் 19

## கத்தோலிக்க கலை இலக்கிய பாரம்பரியங்கள்

- அருள்பணியாளர் விக்ரர் பிலேந்திரன் -



### பகுதி 1 வியாகுல பிரசங்கம் - பன்முகப்பார்வையில்

### 8. இறையியல் நோக்கில் வியாகுல பிரசங்கம்

ஒல்லாந்தர் இலங்கையை ஆண்ட காலத்தில் கத்தோலிக்கர் பல நெருக்குவாரங்களை எதிர்நோக்கிய சூழலில் பணியாற்றிய கொன்சால்வெஸ் அடிகள் ஆன்மீகப் புதுப்பித்தல் பணிக்கு சிறந்த ஊடகமாகக் கருதியே இவ் இலக்கியத்தை ஆக்கியுள்ளார். இவ் இலக்கியம் சாதாரண மக்கள் பாடுவதற்கும், பாடுவதைக் கேட்பதற்குமாக ஆக்கப்பட்டது. இதில் கூறப்பட்டுள்ள இறையியல் கருத்துக்கள் இப்பின்னணியிலேயே நோக்கப்பட வேண்டியவை. இலக்கியம் ஆக்கப்பட்டதற்கான காரணத்தை கூறுமிடத்து கிறிஸ்து மக்களாகிய எங்கள் பாவக் குற்றங்களையெல்லாம் தாமே ஏற்று எங்கள் பாவத்திற்கான பரிகாரத்தைத் தமது மரணத்தினால் மேற்கொண்டார். இதனால் உயர் இறையியல் சிந்தனைகளை முன்வைப்பது இதன் நோக்கமல்ல. கிறிஸ்துவின் பாடுகள், மரணம் பற்றிய நிகழ்வுகளின் பின்னணியில் உளம் வருந்துதல், உளமாற்றம், பாவ அறிக்கை, பாவ மன்னிப்பு ஆகிய சிந்தனைகளும் செயற்பாடுகளும் மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறப்படுகின்றன. மக்கள் இச்செயற்பாடுகளில் ஆர்வத்துடன், பற்றுடன், பக்தியுடன் பங்குகொள்ளச் செய்வதே இலக்கியம் ஆக்கப்பட்டதன் நோக்கமாகும். எனவே இலக்கியம் முன்வைக்கும் இறையியல் சிந்தனைகள் இலகுவானவை, சிக்கலற்றவை, மக்களை மனமாற்றத்திற்கு அழைப்பதை முழுக்க முழுக்க இலக்காகக் கொண்டவை. ஒவ்வொரு பிரசங்கத்திலும் இடம்பெறும் முக்கிய கருத்துக்களைப் பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்.

#### இறையியல் 1ஆம் பிரசங்கம்

ஒருவர் செய்த பாவத்தின் விளைவிற்கு வேறு ஒருவர் பரிகாரம் (பிராயச்சித்தம்) செய்வது. இங்கு மக்கள் இறைத்தந்தைக்கு எதிராகச் செய்த பாவங்களுக்குப் பரிகாரமாக இறைமகன் (இயேசு) தாமாக முன்வந்து அப்பாவங்களுக்காகப் பிராயச்சித்தம் செய்வது தெளிவாகக் காண்பிக்கப்படுகின்றது. இறைத்தந்தையின் விருப்பத்திற்கு முற்றாகக் கீழ்ப்படிவது கிறிஸ்துவின் மனநிலையாகும். கிறிஸ்து தமது தாயாரிடம் பிரியாவிடை பெறுவதற்கு முன்பு இறைவனது சித்தத்தை நிறைவேற்றுவதே அவருடைய நோக்கு என்று ஆசிரியர் இரண்டு தடவைகள் குறிப்பிடுகின்றார்.
இறைவனின் அன்னை தொடர்ந்து வாழ்வதற்கான தேவையும் மனிதரின் மீட்புப்பணியில் மரியன்னை தொடர்ந்து ஆற்றவேண்டிய பங்கும் தெளிவாக வலியுறுத்தப்படுகின்றது. மரியன்னை ஆற்ற வேண்டிய பணியின் தன்மை பற்றிக் குறிப்பிட்டு அது அடியார்களுக்கு ஆறுதலும் ஊக்குவிப்பும் அளிப்பதாக இருக்கவேண்டும் என்று குறிப்பிடுகின்றார். கிறிஸ்து மேற்கொண்ட கொடூரமான பாடுகளுக்குக் காரணமாயிருந்த மனித பாவங்களுக்காக அதிகமாக மனம் வருந்த மனிதர் ஒவ்வொருவரையும் ஆசிரியர் அழைக்கின்றார். இந்த விடயம் எல்லாப் பிரசங்கங்களிலும் இடம்பெறுகின்றது.
தமது தாயாருக்குப் பிரியாவிடை கூறிய கிறிஸ்து தொடர்ந்து தமது சீடருடன் பாஸ்கு உணவை அருந்துகின்றார். இவ்வேளையிலேயே சீடரின் பாதங்களைக் கழுவி திவ்விய நற்கருணையை ஏற்படுத்தி தம்மைக் காட்டிக் கொடுக்கும் நிகழ்வு பற்றியும் முன்னறிவிக்கின்றார். கெத்சமனி தோட்டத்திற்குச் செல்லும் வழியில் இராயப்பரின் (பேதுரு) மறுதலிப்பு பற்றியும் எடுத்துரைக்கின்றார்.
கெத்சமெனி தோட்டத்தில் கிறிஸ்து செபித்த விடயம் பற்றிக் குறிப்பிடும்போது அவர் தந்தையுடன் தனிமையில் செபத்தில் உறவுகொள்ளும் நிலைக்கு ஒப்பான நிகழ்வு ஒத்தமை நற்செய்திகளில் சித்தரிக்கப்பட்டுள்ளதைக் காணலாம். இதேவேளை மனித நிலையில் எதிர்பார்க்கப்படுகின்ற ஆறுதல் அளிக்கும் பதில் எதுவும் தந்தையிடம் இருந்து கிடைக்கவில்லை.
மேலும் தந்தையின் மௌனம் கிறிஸ்துவின் பாடுகளையும் தனிமையையும் அதிகரிப்பதாக அமைகின்றது. பிதாவினுடைய மௌனத்தின் பின்னணியில் பரலோக வாசல் தாழிடப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ள சம்பவமும் கிறிஸ்துவினுடைய துன்பத்தை அதிகரிப்பதாய் உள்ளது. கிறிஸ்து இரத்த வியர்வை சிந்திய சம்பவத்தை விபரித்த இலக்கிய ஆசிரியர் இதற்கான விளக்கத்தை அளிக்கும் போது புதிய ஆதாமாகிய கிறிஸ்து பழைய ஆதாமின் பாவத்திற்கான பரிகாரத்திலும் பன்மடங்காகப் பரிகாரம் செய்வதாகக் குறிப்பிடுகின்றார். முதல் ஆதாம் தனது பாவத்தின் தண்டனையாக நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த உழைக்க வேண்டும் ஆனால் கிறிஸ்து இரத்த வியர்வை சிந்த பரிகாரம் செய்தார். கிறிஸ்து இறைமகனாக இருப்பினும் தமது மனித இயல்பின் பாவங்களுக்காக பரிகாரம் செய்யும் செயற்பாடு பாடுகளின் கொடுமையைக் குறைக்கவில்லை. கொன்சால்வெஸ் அடிகள் தெளிவாகக் கிறிஸ்துவின் உடல், உள ஆன்மீகத் துன்பங்களை முன் வைக்கின்றார். கபிரியேல் தூதன் வழியாக அளிக்கப்படும் ஆறுதல் தொடர்ந்து துன்பங்களையும் சிலுவை மரணத்தையும் ஏற்பதற்கும் கிறிஸ்துவுக்கு வழங்கப்படும் உந்துசக்தியாக இலக்கிய ஆசிரியர் நோக்குகின்றார். (தொடரும்)

# சர்வதேச சமாதான மாநாட்டில் மன்னார் மாணவி

"எத்தனை எத்தனையோ உறவுகள் எமக்காக தங்களை அர்ப்பணித்து செயற்பட்டதை கண்ணுற்ற போதெல்லாம் சமாதானத்தை விரும்புபவர்கள் உலகெங்கும் பரவிக் கிடக்க ஏன் இன்னும் அமைதி பிறக்கவில்லை என்னும் சந்தேகம் என் மனதில் எழுந்தது."

## மனம் திறக்கிறார் ஜெஸ்மின்




செல்வி. மரியான் ஜெஸ்மின் குரூஸ்

கரித்தாஸ் இலங்கை நிறுவனம் முன்னின்று நடாத்திய மாணவர்களுக்கிடையிலான சமாதான நிகழ்ச்சித் திட்டங்களின் அடிப்படையில் நான் பெற்ற அனுபவங்கள் பலவிதமானவை. ஆயினும், 21 நாட்களாக நாம் பிரான்ஸ் நாட்டில் மேற்கொண்ட சமாதான தூதுவர்கள் பயணத்திலே பங்கேற்க சந்தர்ப்பம் கிடைத்தமை என்னைப் பொறுத்தமட்டில் ஒரு கொடை என்று தான் கூறவேண்டும். ஆயிரக்கணக்கான மாணவ மாணவிகள் மத்தியில் 05 மாணவ மாணவிகள் என்ற அடிப்படையில் இந்த வாய்பினை எமக்குப் பெற்றுத்தந்த செடெக் நிலையத்தின் இயக்குனர் அவர்களுக்கும், பணியாளர்கள் மற்றும் மன்னார் மறைமாவட்ட வாழ்வுதய இயக்குனர் அருட்தந்தை ஜேசுராஜா அவர்களுக்கும், பணியாளர்களுக்கும், எனது பாடசாலையான மன்னார் புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள் அனைவருக்கும், எனது அன்பின் பெற்றோர்க்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதில் பெருமிதம் அடைகின்றேன்.

பல மொழி, இனம், மதம் சார்ந்த இன்னும் 4 மாணவ மாணவிகளுடன் கட்டுநாயக்கா விமான நிலையத்திலே புறப்பட்டுச் சென்ற இப்பயணம் சமாதான பாதையில் மேலும் மேலும் அர்ப்பணிக்க என்னை ஊக்குவித்தது என்றே கூற வேண்டும். எத்தனை எத்தனையோ உறவுகள் எமக்காக தங்களை அர்ப்பணித்து செயற்பட்டதை கண்ணுற்ற போதெல்லாம் சமாதானத்தை விரும்புபவர்கள் உலகெங்கும் பரவிக் கிடக்க ஏன் இன்னும் அமைதி பிறக்கவில்லை என்னும் சந்தேகம் என் மனதில் எழுந்தது.

மே மாதம் 22ம் திகதி காலை 7.00 மணியளவில் பாரிஸ் நகர் சார்ளஸ் டிகோல் விமான நிலையத்தில் தரையிறங்கிய எம்மை வரவேற்க, செக்கோ கத்தோலிக்க நிலையத்தின் தொண்டர் பணியாளர் ஜீன் கவ்சோகஸ் வந்திருந்தார். அந்நொடி தொடக்கம் சமாதான தூதுவர்களாக அங்குச் சென்ற எமக்கு, உற்சாகத்தை வழங்கும் விதத்தில் அனைத்து செயற்பாடுகளும் அமைந்திருந்தன. எம்மண்ணில் அமைதி பிறக்க வேண்டும் அதற்காக மாணவச் சமுதாயம் ஒன்றுபட வேண்டும் என்ற ஏக்கத்தோடு செயற்படும் எனக்கு மே மாதம் 24ம் திகதி சர்வதேச ரீதியாக சமாதானத்தின் ஒப்புரவுக்காக செயற்படும் பேர்னார்ட், டேனியேல், அலோசியஸ் போன்ற கரித்தாஸ் பிரான்ஸ் அதிகாரிகளும் ஏனைய சர்வதேச கரித்தாஸ் அங்கத்தவர்களும் பங்கேற்ற "சமாதானமும் ஒப்புறவும்" மாநாட்டில் பங்கேற்கும் சந்தர்ப்பம் கிடைத்தமை என் வாழ்வில் மறக்க முடியாத அனுபவமாக அமைந்தது. மாணவ பருவத்திலேயே சர்வதேச அளவிலே அமைதிக்காக குரல் கொடுக்கவும், அனுபவ பரிமாறலுக்கு இடம் பெற்றபோது அளவற்ற ஆனந்தம் ஏற்றத்தாழ்வு அற்ற நிலைதான் சமாதானம் என்பதை அந்நாட்டு மக்களும், பணியாளர்களும் உணர்ந்து செயற்படுவதை அனுபவித்தபோது நாம் சமாதானப் பாதையிலே வெகு தூரம் செல்ல வேண்டும் என நினைத்தேன். அதனைத் தொடர்ந்து எமது செயற்பாட்டில் இணைப்பதிகாரியாக செயற்பட்ட கரீன் எமக்கு தொடற் செயற்பாடுகளையும், நாம் செல்லும் இடங்களை பற்றிய விபரங்களையும் விளக்கினார். அதன் அடிப்படையில்



கொழும்பு செடெக் நிறுவனத்தின் அனுசரணையுடன் சர்வதேச மட்டத்தில் பிரான்ஸ் நாட்டில் இடம் பெற்ற சமாதான நிகழ்வில் இலங்கை சார்பாக பங்கு பற்றிய காலி மாவட்டத்தைச் சேர்ந்த செல்வன் நுவான் ரிச்ஸன, மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த செல்வி. பாத்திமா முஸ்தா, கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த செல்வி. மகேஸா நயோமி, யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த செல்வி. ஆர். சுஜித்தா மற்றும் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த செல்வி மரியான் ஜஸ்மின் குரூஸ் ஆகியோர்ரைக் காண்கின்றீர்கள். தற்பொழுது க.பொ.த. உயர்தர வகுப்பில் கற்றுக் கொண்டிருக்கும் இம்மாணவர்கள் மறைமாவட்ட நிறுவனங்களான செட்கோல், எகெட், செற்றிக், கியூடெக் மற்றும் வாழ்வுதயத்தினால் தெரிவு செய்யப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

முதல் நீண்ட ரயில் பயணமாக லுவாவ் அமைந்தது. ஏறக்குறைய 03 மணித்தியால இடைவெளியில் நாம் லுவாவ் வந்தடைந்தோம். அங்கு எம்மை வரவேற்க அப்பிரதேசத்தின் தொண்டர் பணியாளர்கள் புகையிரத நிலையத்திலே ஆர்வத்தோடு காத்திருந்தார்கள். இந்த வயதிலும் அர்ப்பணமான அவர்களை கண்டதும் என் உள்ளத்தில் ஒரு கேள்வி. இதற்கு பதில்தான் என்ன? என் ஆர்வத்தை கேள்வியாக முன் வைத்தேன். அவர்களின் வார்த்தைகள் என்னை சிந்திக்க வைத்தது. இதுதான் அபிவிருத்தியின் இரகசியமா! அனைவரும் தனது பங்களிப்பை செய்கிறார்கள். மனித நேயம் மேலோங்கிக்கிடப்பதை உணர முடிந்தது. இப்பகுதி மக்களோடு மக்களாக வாழ உறவுகொள்ள எமக்கு குடும்பங்கள் மத்தியில் 03 நாட்கள் வாழ்ந்தது வழிவகுத்தது. நாடு கடந்து உறவு பிரிந்து இங்கு வந்து தனித்து விட்டோம் என்ற உணர்வு மறக்கும் அளவிலே அவர்களின் உறவுகள் அமைந்தது. இப்பகுதி மாணவர்களோடு சமாதான விழுமியங்களை பகிர்ந்து கொள்ள அவர்கள் எமக்களித்த வாய்ப்புக்கள் ஊடாக எம்மைப் போன்ற 04 பாடசாலை மாணவமணிகளை ஊக்குவிக்க எம்மால் முடிந்தது. மேலும் நாம் சந்தித்த தொண்டர் பணியாளர்கள் தங்களது ஓய்வு நேரங்களைக்கூட மனித நேயம் பணிகளுக்கு ஒதுக்கி செயற்படுவதை கண்டு என் மனம் பூரிப்படைந்தது. நான்காம் நாள் எங்களுக்காக திரு. எரிக் தலைமையில் பல நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டு எங்களை லாறோச் என்னும் நகருக்கு

அழைத்துச் செல்லப்பட்டோம். அங்கு நடாத்தப்பட்ட பத்திரிகையாளர் மாநாட்டில் மட்டுமல்ல பலவிதமான குழுக்கள், தொண்டர் ஊழியர்கள், பாடசாலை மாணவர்கள் என்று பலரையும் ஊக்குவிக்கவும் அவர்களுடைய அனுபவங்களை தெரிந்தறியவும் வாய்ப்பளித்தனர். இவை எமக்கு திடத்தையும், அமைதிக்காக பணிபுரிவதன் அவசியத்தையும் வலியுறுத்தியது. அங்கிருந்து அடுத்தப்படியாக நாம் மசேல் நகருக்கு அழைக்கப்பட்டோம். மசேல் என்பது பிரான்ஸ் நாட்டில் பழைமை வாய்ந்த வரலாற்று முக்கியத்துவம் பெற்ற ஓர் நகர் என்பதையும் அந்நகர் வாழ் மக்கள் கலாச்சாரத்தை மதிக்கும் மக்கள் என அறிந்தேன். நான் இங்கு அழைக்கப்பட்டபோது, இவர்களின் கலாச்சாரம் தொடர்பாக என்மனதில் ஓர் சந்தேகம் இருந்தது. ஆனால், அவர்களுடன் வாழ்ந்தபோது இவர்களும் கலாச்சாரத்தை மதிப்பவர்கள், மனித மாண்பை மனித உரிமைகளை மதிப்பவர்கள் என்பதை அறிய முடிந்தது. அவர்களது மனித நேய செயற்பாடுகளின் ஆர்வம் அர்ப்பணம் எனக்கு சவாலாக அமைந்தது. 03 நாட்கள் அங்கு கழித்த நாங்கள் அங்கிருந்து 848 கி.மீ. துாரத்தை 3 மணித்தியாலத்திற்கும் குறைந்த நேரத்தில் புகையிரதத்தினூடாக சென்றடைய முடிந்தமையும் ஒரு புதிய அனுபவமாக அமைந்தது. இறுதி 05 நாட்கள் நாம் சர்வதேச ரீதியாக கரித்தாஸ் பிரான்ஸ் ஏற்பாடு செய்த சமாதானமும் ஒப்புரவும் என்ற கண்காட்சியும் சமாதானப் பேரவையில் பங்கேற்று எமது நாட்டின் அமைதிக்காக குரல் கொடுத்தோம்.

இதில் பல நாடுகளின் அங்கத்தவர்கள் பங்கேற்று எம்மோடு உறவாடி எமக்காக குரல் கொடுக்க முன்வந்தமையும் எம் மண்ணில் சமாதானத்திற்காக வாழ்த்து மடல்கள் தொடர்ந்து அனுப்புவதையும் எண்ணிப் பார்க்கும்போது, என் மனம் பூரிப்படைகிறது. நாம் மட்டுமல்ல அனைத்து நாடுகளும் அமைதிக்காக ஏங்குவதைப் பார்த்ததும் உலக சமாதானத்திற்காக கரித்தாஸ் புரியும் பங்களிப்பிற்கு மாணவர்களாகிய நாமும் எங்களை அர்ப்பணம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் என் மனதைத் தொட்டது. இதனைத் தவிர அந்நாட்டில் வாழும் எமது உறவுகளை மறக்கவே முடியாது. இலங்கையின் அரவணைப்பும் அவர்களின் உபசரிப்பும் தனி ரகம். அவர்களைப் பிரியும்போது அவர்கள் தமது தாய் நாட்டை, தமது மண்ணை உறவுகளை பிரிந்து உறவுகளுக்காக தவிப்பதை கண்டு வியப்புற்றேன். இவ்வாறான பல அனுபவங்களும் என்னை ஊக்குவித்தது. எமக்கு இந்த அனுபவங்களை அளித்து மாணவர்கள் மத்தியில் சமாதான விழுமியங்களை நிலைநாட்ட தேசிய அளவில் சர்வதேச அளவில் முயற்சிகளை மேற்கொள்ளும் கரித்தாஸ் மறைமாவட்ட நிலையங்களுக்கும், தேசிய நிலையத்திற்கும் மற்றும் சர்வதேச கரித்தாஸ் நிறுவனங்களின் பணி மேலும் வளர மனமார வாழ்த்துகிறேன்.

# உடல் உறுப்புகள் தானம்!

## கொரியக் கிறிஸ்தவர்களின் முன்மாதிரி ஓர் அலசல்



முப்பத்தெட்டு வயதுடைய பக்கியு யொன் தன் நண்பராகிய பிரான்சிஸ் உயிர் பிழைக்க வேண்டும் என எவ்வளவோ மன்றாடிப் பார்த்தான். கடைசியில் மருத்துவர்கள் ஆலோசனையின்படி தன் ஈரலில் 60 வீதத்தினை அவருக்குத் தானமாகக் கொடுத்து உயிர் பிழைக்கச் செய்தான். இது தென் கொரியாவில் நடந்த நிகழ்ச்சி. சென்ற ஆண்டு யூலை மாதம் நடந்த இந்த சத்திர சிகிச்சையின் பின் ஆறு மாதம் கழித்து இருவருமே நலமடைந்தார்கள். இவ்வாறு தம் உறுப்புக்களைத் தானம் கொடுப்பது கொரிய கத்தோலிக்க

## நாற்றமெடுக்கும் நற்காரியம்

மக்களிடையே வேகமாகப் பரவி வரும் பழக்கம் இதற்கு திருச்சபை நல்ல ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து வருகின்றது. இதனை ஒரே உடல், ஒரே இதயம் one Heart One Body Movement என்னும் இயக்கமாக நடத்தி வருகிறார்கள். கொரியாவின் உறுப்பு தானம் செய்பவர்களில் 85 வீதமானவர்கள் கத்தோலிக்கர்களே. 1989ம் ஆண்டு அங்கே நடைபெற்ற நற்கருணை மாநாட்டின்பின் இந்த உத்வேகம் அதிகரித்தது.

தற்போது சுமார் 17,000 பேர்கள் தங்கள் பெயர்களைத் தங்கள் மரணத்தின்பின் உறுப்பு தானத்திற்காகப் பதிவு செய்து வைத்திருந்தாலும் சத்திர சிகிச்சை செலவினங்களைப் பார்க்கும்போது இதில் ஒரு பகுதியினரே தானம் செய்ய முடிகின்றது. கொரிய நாட்டின் செலவினங்களின்படி சுமார் 68 இலட்சம் ரூபாய்கள் சத்திர சிகிச்சைக்கு மட்டும் செலவாகின்றது. மேலும், சில குடும்பத்தார் மரணிப்பவர்களது விருப்பத்தினை நிறைவேற்றுவதில்லை.

ஆனால் கம்யூனிச சீனாவில் விடயங்கள் வேறு விதமாக நடைபெறுகின்றது. ரூ 10 இலட்சம் செலவளித்தால் சிறைக்கூடத்தில் மரண தண்டனை பெற்ற கைதிகளின் உறுப்புக்கள் (குறிப்பாக சிறுநீரகங்கள்) கிடைக்கின்றன. மருத்துவ செலவு தனி. சில வேளைகளில் அது ஒரு போதை வஸ்து கடத்தியவர்களதாகவும் இருக்கலாம். இக்கைதிகளை மயக்க மருந்து முதலில் கொடுத்து கொன்று விடுவார்களாம். சீன அரசாங்கத்திற்கு நல்ல வருமானம்தான். மலேசியா ஒரு முஸ்லிம் நாடு. அங்கே தானம் கொடுப்பது குறைவு. எனவே அந்நாட்டு மக்கள் சீனாவுக்குப் படையெடுக்கிறார்கள். இந்தியா இன்னொரு அபாயநாடு எனலாம். அங்குள்ள மக்களின் வறுமையைப் பயன்படுத்தி என்னவெல்லாமோ நடக்கின்றது. பெங்களூரில் விடயம் தெரியாத சிறுவர்களைக் கூட கடத்திச் சென்று சிறுநீரகங்ளைக் கழற்றி வியாபாரம் செய்கிறார்களாம் மருத்துவர்கள். பேர்போன மருத்துவ நிலையங்களும் இதற்கு உடந்தையாம். வயிற்று வலிக்காக போனவர்கள் சிறுநீரகம் கழற்றப்பட்டு வருகிறார்களாம். கள்ள மார்க்கட்டில் பத்து இலட்சம் வரை இவை விலை போகின்றன. தமிழ்நாட்டில் வில்லிவாக்கம் என்ற இடம் இப்போது கிட்னிவாக்கம் என்று அழைக்கப்படுகின்றது. காரணம் இங்குள்ளவர்கள் தம் கிட்னியை தாராளமாக வியாபாரம் செய்வதுதான். விவசாயிகள் தங்கள் விளைச்சல்கள் மோசமானபின் நிலச்சுவான்தாரர்களுக்கு கடனைத் திருப்பித் தர முடியாமல் தற்கொலை செய்வது வழக்கமான ஒன்று. இப்போது தற்கொலைக்குப் பதிலாக கிட்னி வியாபாரம் செய்கிறார்கள்.

இவ்வாறு உடல் உறுப்புக்களை வைத்து அரசுகளும் மருத்துவ மனைகளும், இடைநிலை தரகர்களும் செய்யும் வியாபாரம் உலக அரங்கில் நாற்றமெடுக்கிறது. ஒரு மனிதனின் உறுப்பை வைத்து இன்னொரு மனிதனை வாழ வைப்பது என்பது எவ்வளவோ புனிதமான ஒரு காரியம். ஆனால் இதனை ஆதாரமாக வைத்து கொள்ளை கொள்ளையாய் பணம் பண்ணுவது என்பது எவ்வளவு கேவலமான மனிதாபிமானமற்ற செயல். ஆனால் இதைச் செய்பவர்கள் சமூகத்தின் மேல் மட்டத்தில் உள்ளவர்களே.

உதாரணமாக உருசியாவில் றியாசான் என்றொரு ஊரில் வாழ்ந்து வந்த அந்திரே சாக்கோவின் கதையைக் கேளுங்கள். அவனுக்கு வயது ஐந்து. அவனை அவன் தாயார் கைவிட்டுவிட்டு எங்கேயோ போய்விட்டாள். அவனது தாத்தா பாட்டி இருவருமே சேர்ந்து அவனை வியாபாரம் செய்ய முனைந்து விட்டார்கள். அவனைச் சேர்த்திருந்த அநாதை மடத்திலிருந்து பாரிஸ் நகரில் உள்ள டிஸ்னிலாண்ட் இரகசியத் திட்டத்தின்படி அவனுக்கு ஊசி மருந்தேற்றிக் கொன்று அவன் உடல் பாகங்களை ஒரு கோடி ரூபாய்க்கு விற்கத் திட்டமிட்டிருந்தனர். ஆனால் அவர்களைப் போலிஸ் வளைத்து விட்டது. அவன் பாட்டி கற்றை கற்றையான டொலர் காசுகளுடன் அகப்பட்டாள். பையன் காப்பாற்றப்பட்டு இப்போது ஸ்கொட்லாண்டு வளர்ப்புப் பெற்றோருடன் நலமாக இருக்கிறான்.

மீண்டும் கொரியாவுக்கு வருவோம். அங்கே திருச்சபை ஒரு முன்னேற்றகரமான முயற்சியை மேற்கொண்டுள்ளது. பற்றாக்குறை இருப்பதினால்தானே திருட்டுத்தனம் அதிகரிக்கின்றது? நாம் ஒவ்வொருவருமே நம் உறுப்புக்களைத் தானம் செய்ய முன்வரலாமே என்கிறார்கள் திருச்சபை அதிகாரிகள். சென்ற அக்டோபர் மாதம் நடைபெற்ற கன்ச்சொன் மறைமாவட்ட குருக்கள் 45 பேரும் இதர 18பேரும் தங்கள் உறுப்புக்களைத் தங்கள் மரணத்தின்பின் தானம் செய்கிறார்கள். ஆயர் ஜான் சான்யிக் (69 வயது) அவர்களும் இவ்வாறே முன்வந்திருக்கிறார். தெரசா ஹியுன் என்ற அம்மையார் காங்டொங் நகரின் திரு இருதய மருத்துவமனை அதிகாரி, இவர் இவற்றை ஒருங்கிணைக்கும் பணியை மேற்கொண்டுள்ளார். நல்லவர்கள் பேசாதிருக்கும்போதும், செயற்படாதிருக்கும் போதும் கள்ளர்கள் கொடிகட்டிப் பறக்கிறார்கள். நம்மூரிலும் நாம் இத்தகைய செயற்திட்டத்தினை மேற்கொண்டால் புழுத்து நாற்றமெடுக்கும் அவய வியாபாரம் படுத்துப்போகும்.

# அன்ரன் அழகளாரின் நினைவுகள்

**– அருட்சகோதரி கனிசியஸ் –**



13.07.2004 காலை 'யாழ் மறைமாவட்டத்தைச் சார்ந்த அருட்திரு அன்ரன் இராஜநாயகம் அடிகளார் இறைவனடி சேர்ந்து விட்டார்' என்னும் துயரச்செய்தி அனைவரது இதயங்களையும் ஒருகணம் ஆட்டம் காணச் செய்துவிட்டது. 'மின்னாமல்' முழங்காமல், இடியிடித்தது போன்று வந்தது இந்தச்செய்தி. "தொன்றிற் புகழோடு தோன்றுக, அ∴தில்லால் தோன்றலில் தோன்றாமை நன்று" என்பதற்கு இலக்கணம் வகுத்தவர் அருட்தந்தை அவர்கள்.

இவர் 1932ம் ஆண்டு ஆனித்திங்கள் 12ம் நாள் கரம்பனைச் சேர்ந்த திரு. திருமதி இராஜநாயகம் தம்பதியினரின் மூத்த மகனாய்ப் பிறந்தார். இளம் வயதிலேயே குருத்துவப்பணியில் ஆர்வம் கொண்டு, புனித மடுத்தினார் குருமடத்தில் இணைந்து, புனித பத்திரிசியார் கல்லூரியில் தனது கல்வியைத் தொடர்ந்தார். 1950ம் ஆண்டு உரோமாபுரியிலுள்ள மறைபரப்புப் பல்கலைக்கழகத்தில் குருத்துவத்திற்கான உயர்கல்வியைப் பெறுவதற்காக அனுப்பி வைக்கப்பட்டு, 21.12.1957ல் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். 1958ல் நாடு திரும்பிய இவரது முதலாவது பணித்தளமாக அமைந்தது மன்னார் புனித செபஸ்தியார் பேராலயப் பங்கு. 1960 – 1963 வரை இளவாலை புனித கென்றியரசர் கல்லூரியின் உப அதிபராகவும், 1963ல் சில மாதங்கள் முல்லைத்தீவு, செட்டிகுளம் ஆகிய இடங்களில் பங்குத்தந்தையாகவும், 1964 – 1966 வரை புனித மடுத்தினார் குருமடத்தின் அதிபராகவும், 1966 – 1969 வரை யாழ் ஆயர் இல்லத்திலும் பணியாற்றினார். 1969 –1974 வரை உரோமாபுரியில் தான் முன்னர் தங்கியிருந்து கல்விகற்ற, அதாவது குருமடமாணவர்கள் தங்கும் சம் பவுலோ கல்லூரியின் உப அதிபராகப் பணிபுரிய அழைக்கப்பட்டார். 1974 – 1975ல் கனடா ஒட்டாவா பல்கலைக்கழகத்தில் கல்வியியலில் முதுமானிப்பட்டத்தைப் பெற்றார். 1976 –1989 வரை இளவாலை புனித கென்றியரசர் கல்லூரி அதிபராகப் பணியாற்றினார். கல்விப் பணியிலிருந்து ஓய்வுபெற்ற பின்னர் 1989 – 1993 வரை மானிப்பாய்ப் பங்குத்தந்தையாகவும், 1993 – 1995 வரை யாழ் புனித மரியன்னை பேராலயப் பங்குத்தந்தையாகவும் அயராது சேவையாற்றினார். 1995ல் ஏற்பட்ட பாரிய இடப்பெயர்வின் பின்னர் கொழும்பில் தங்கியிருந்த வேளை இலங்கை ஆயர் மன்ற செயலாளராகப் பணிபுரிய விடுக்கப்பட்ட அழைப்பையேற்று, பொறுப்புடன் பணியாற்றினார்.

நோயும், உடற்தளர்ச்சியும் இவர் தனது பணியைத் தொடர விடாது தடைபோட்ட வேளையில், பணியில் இருந்தல்ல, மாறாகப் பணித்தளங்களிலிருந்து ஓய்வுபெற்று, 1998 தொடக்கம் இறக்கும்வரைகொழும்பு கிறகரிஸ் வீதியில் அமைந்துள்ள குருக்கள் இல்லத்தில் தங்கி ஓய்வெடுத்தார். அவ்வேளையிலும் "பணியில் மாற்றம் ஏற்பட்டதேயொழிய, பணியில் தளர்ச்சி ஏற்படவில்லை" என்பதற்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்தார். இவர் கொழும்பில் தங்கியிருந்த காலம், பல்வேறுபட்ட பணிகளின் நிமித்தம் கொழும்பிற்கு வரும் தமிழ் மறைமாவட்டங்களைச் சார்ந்த குருக்களுக்கும், இடப்பெயர்வின் பின்னர் கொழும்பில் தங்கிவாழும் தமிழ் மக்களுக்கும் ஓர் இறையருளின் காலம் என்றே கூற வேண்டும். அவர்கள் அனைவரது ஆன்மீகத் தேவைகளிலும், உலகியல் தேவைகளிலும், யார், எவர் என்று நோக்காது, அவர்கள் எந்த வேளையில், என்ன உதவி என்று நாடிவந்த போதும், தனது நோயையும், உடற்தளர்ச்சியையும் பாராது அவர்களின் தேவைகளை நிறைவு செய்வதில் முன்னின்றார்.

தனது அன்பான பேச்சினாலும், அருளொளி வீசும் காந்தப்பார்வையினாலும், அழகிய புன்முறுவலினாலும், அனைவரது இதயங்களையும் வெற்றி கொண்டார். இவர் ஓர் ஆசாரம் தவறாத அருட்குரவர். அதனால்தான் இவரது இறுதிவார்த்தை "திருப்பலிக்கு ஆயத்தம் செய்யுங்கள்" என்பதாய் அமைந்தது. யாவரும் இவரை ஓர் இனிய நண்பராகவே கருதிப் பழகினர். ஒவ்வொருவரதும் தனித்துவத்தை மதித்தவர். இதனால்தான் தனது உதவி நாடி வந்தவர் எவராயிருந்தாலும், எத்தகைய வேலைப்பளுக்கள் குறுக்கிட்ட வேளையிலும், அவர் ஒருவரே தனது கவனத்திற்கு உட்பட்டவர் போன்று, அவருக்கு உரியதைச் செய்து அனுப்பிவைப்பதில், ஆர்வமுடன் செயற்பட்டார். எவர் மனதையும் புண்படுத்தி அறியாதவர்.

மேலைத்தேய உருவாக்கமும், கீழைத்தேய விழுமியங்களில் கொண்ட பற்றும், இவரிடம் காணப்பட்ட ஆழமான ஆளுமைத் தோற்றப்பாடுகளும் நிர்வாகத்தளத்தில் இவர் பதித்துச்சென்ற சுவடுகளும், இவரைத் தனித்துவம் மிக்க ஒருவராக உலகிற்குக் காட்டின. உரோமாபுரியில் பெற்ற குருத்துவப் பயிற்சி, பல்லாண்டுகள் அங்கு பணியாற்றியமை, கல்வித்துறையில் பெற்ற உயர் பட்டங்கள், பிறநாடுகளைத் தரிசித்து, பல இன மக்களுடன் பழகி, பல்வேறுபட்ட கலாச்சாரங்களில் கொண்ட பரிச்சயம், கிறிஸ்தவ விழுமியங்களுடன் கூடிய உயர்ந்த ஆன்மீக சிந்தனைகள், எந்தச் சூழ்நிலையிலும் நிலை தவறாத மனப்பக்குவம், இவை யாவும் இவரை ஓர் உன்னத மனிதராக மிளிர வைத்தன.

இவர் விட்டுச்சென்ற விழுமியங்களும், நன்னெறிகளும் என்றுமே எவர் மனதையும் விட்டு அகலாது. இவரது மேன்மை மிகு வாழ்வுக்காகவும், தன்னலம் கருதாச் சேவைகளுக்காகவும் இறைவனுக்கும் நன்றி கூறுவதோடு, இவரது ஆன்மா என்றும் இறைவனில் சங்கமிக்க இறையருள் இறைஞ்சுவோம்.

தலைமன்னாரில் அரும்பணியாற்றிய

## சிஸ். ஸ்ரனி (குளோறி)

## இடமாற்றம் பெறுகிறார்!



கடந்த 9 வருடங்களாக தலைமன்னார் பங்கில் அன்புப் பணியாற்றிய திருக்குடும்ப அருட்சகோதரி ஸ்ரனி அவர்கள் அண்மையில் இடமாற்றம் பெற்று யாழ் திருக்குடும்ப சகோதரிகளின் மாகாண இல்லத்திற்கு பொறுப்பாளராக சென்றுள்ளார். பாலர்களை பக்குவமாய் பயிற்றுவிப்பதில் கைதேர்ந்தவரான அருட்சகோதரி அவர்களின் அன்புப் பணியை நினைவுகூர்ந்து தலைமன்னார் மக்கள் அவருக்கு நன்றி கூறுகின்றனர். அவரின் அன்பான சேவையை பெற்ற தலைமன்னார் மக்கள் சார்பாக சகோதரிக்கு சமர்ப்பிக்கப்படும் கவிதை இது.

### பாலர்களின் உள்ளமதில் பக்குவமாய் இடம்பிடித்தீர்!

குலவிளக்காய் உதித்திட்ட சகோதரி ஸ்ரனி அவர்களே
பெற்றெடுத்த பெற்றோர்க்கு பெருமை சேர்த்த பொக்கிசமே
நற்றோர்க்கும் நல்லவர்களுக்கும் நன்மைகளைப் பகிர்ந்தீரே
9 வருடங்கள் போதும் என்பதாலோ இடம் மாறிப் போகின்றீர்?
இப்பிரிவை எண்ணி எங்கள் விழியெல்லாம் குளமாகி
ஒளியிழந்து கிடக்கின்றோம்.
வாடாத பயிராக வசந்தம்தான் வீசினாலும்
பாடாத தேனியாக அன்பியங்கள் அனைத்தும்
படுத்துறங்க நினைத்தாலும் பண்பாக தங்களிடம்
வளர்ந்ததனால் என்றும் மறக்காது இருக்குமம்மா.
கள்ளமில்லா உள்ளத்துடன் கொஞ்சி கொஞ்சிப் பேசி
பாலர்களின் உள்ளத்தில் பக்குவமாய் இடம் பிடித்து
கல்விதனை வளர்த்தமைக்கு நன்றிகள் கூறுகின்றோம்.
அழியாத உங்கள் சேவை ஆகாயம்வரை வளர்ந்து
இனி செல்லும் இடத்திலும் ஓயாத அலையாக பூபாளம் இசைக்க
நீங்கள் உடல் நலம் பெற்று சேவைதனைப் புரிவதற்கு
எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கும்,

*திரு. ம. அன்ரனீஸ் மேரி குரூஸ் தம்பதியினர்,*
*தலைமன்னார் மேற்கு, தலைமன்னார்.*



# திருச்சபையின் நோக்கும் போக்கும்



## ஓர் விமர்சனக் கண்ணோட்டம்

**தொடர் 2**

**அருட்கலாநிதி ஸ்ரனி அன்ரனி (அமதி)**

திருச்சபையின் இருப்பு அதன் அமைப்புக்களை உறுதிப்படுத்துவதில் அல்லது நிறுவனமயப்படுத்துதலில் மட்டும் தங்கியிருக்கவில்லை. மாறாக திருச்சபையின் வாழ்வு தேங்கி நிற்காத நீரோடை போன்று அமைய தன்னை காலத்தின் குறிகளின் ஒளியில் புதுப்பித்துக்கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும்.

### திருச்சபை ஒரு மறைபொருளா?

உலக அரசுகளைப் போன்று காணக்கூடிய விதத்தில் அமைப்புக்களை கொண்ட நிறுவனமாக தன்னைப் புரிந்து கொண்ட திருச்சபை, தன்னை ஒரு மறைபொருளாகவும் விளங்கிக்கொள்ள முயலவேண்டும். மறைபொருள் இறைவனுடைய திட்டத்தையும் அது படிப்படியாக நிறைவேறுவதையும் குறித்துக் காட்டுகின்றது. மாந்தர் அனைவரையும் நிறைவாழ்வை நோக்கி அழைத்துச் செல்வதே அத்திட்டமாகும். இப்பணியை திருச்சபை தூய ஆவியின் வழியாக நிறைவேற்றவே அழைப்புப் பெற்றுள்ளது. மாந்தருக்கு வாழ்வளிக்க இறைவன் வகுத்த திட்டத்தினை செயற்படுத்தும் கருவியாகவே திருச்சபை செயல்பட வேண்டும். உண்மையில் வாழ்வளிக்கும் கருவியாய் நின்று மனித குலத்தை அடிமைப்படுத்தும் இறையரசிற்கு விரோதமான, இறைத்திட்டத்திற்கு ஒவ்வாத செயற்பாடுகளுக்கு எதிராக குரல் கொடுக்கும் பொறுப்பு திருச்சபையை சார்ந்ததே. அப்போதுதான் இறைவனின் மீட்புத் திட்டத்தை மக்களுக்கு வாழ்வளிக்கும் செயற்பாடாக மாற்ற முடியும். திருச்சபை தனது அமைப்பையும், நிறுவனமயப்படுத்தலையும் முதன்மையாகக் கொண்டு செயற்பட்டால், மனித குலத்திற்கு வாழ்வளிக்க வந்த இயேசுவின் மீட்பின் கருவியாக செயற்பட முடியாது.

எனவே திருச்சபை ஒரு மறைபொருள் என்பதை காணும் அமைப்புக்கள், அல்லது அதன் நிறுவனங்கள் மூலமாக அன்றி திருத்தந்தை 6ம் பவுல் "எல்லேசியாம் சுவாம்" என்ற சுற்று மடலில் குறிப்பிடுவது போல் **மக்களின் அனுபவமாக** மாறவேண்டும், வாழ்ந்து காட்டப்பட வேண்டும். திருச்சபையின் வாழ்வு மக்களோடு இரண்டறக் கலக்கவும், அதன் அமைப்புக்களினூடாக மக்கள் நிறைவாழ்வை நோக்கி வழிநடத்தப்படக்கூடிய விதத்திலும்உயிரோட்டம் பெறவேண்டும்.

### இறைமக்கள் சமூகமே திருச்சபை

இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம் திருச்சபையில் ஓர் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதில் இருகருத்து இருக்க முடியாது. திருச்சபை என்றாலே ஒரு நிறுவனம்



என்ற நிலைமாறி இறைமக்கள் சமூகம் என்ற பொருளில் உருவகப்படுத்தப்பட்டு "மக்கள் திருச்சபையாக" உருமாற்றம் பெறத் தொடங்கியுள்ளது.

பழைய ஏற்பாட்டில் "கஹால் யாவே" என இஸ்ராயேல் மக்கள் அழைக்கப்பட்டனர். நாடோடிகளாகத் திரிந்த மக்கள் இறைவனுக்குச் சொந்தமான மக்கள் என உரிமை பெற்றனர். அத்துடன் இறைவனின் பரிவும் அன்பும் அவர்களுக்கு கிடைத்தது. (வி.ப. 19:5) குருத்துவ அரச திருக் கூட்டமாகவும், தூய மக்களினமாகவும் தேர்ந்து கொள்ளப்பட்டது. (வி.ப. 19:6) புதிய ஏற்பாட்டில் இயேசுவின்மீது பற்றுறுதியும் விசுவாசமும் கொண்டு ஒரு சமூகமாக வாழ்ந்தவர்கள் 'எக்லேசியா' என்று அழைக்கப்பட்டனர். 'எக்லேசியா' என்றால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் சமூகம் எனப்பொருள்படும். இறைமக்கள் சமூகமாகிய திருச்சபை தேர்ந்தெடுக்கப்பட்ட சமூகம் என்றால் ஏன் இன்னும் இச்சமூகத்தில் ஒருமைப்பாடும், ஒன்றிப்பும் ஏற்படவில்லை என்பது சிந்திக்கப்பட வேண்டிய விடயமாகும். இறைமக்கள் சமூகம் என்ற உருவகம் திருமுழுக்குப் பெற்ற அனைவருமே இறைவனின் அழைப்பைப் பெற்று மாண்பிலும் செயல்பாட்டிலும் சமத்துவம் பெறுகின்றார்கள். (திரு. சட்ட எண் : 208) ஆனால் திருச்சபையில் பல்வேறு நிலைகளில் ஏற்றத்தாழ்வுகளும், பிளவுகளும், சமத்துவமின்மையும் நிலவுகின்றது. சில வேளைகளில் திருச்சபை அமைப்புக்களும் இத்தகைய பிளவுகளுக்கும் சமத்துவமின்மைக்கும் துணை போகின்ற நிலைகள் ஏற்படுகின்றன. திரு ஆட்சியில் உள்ளவர்கள் அதிகாரத்தோடும், ஆதிக்க உணர்வோடும் செயல்படுகின்ற நிலையும் காணப்படுகின்றது.

திருச்சபை இறைமக்கள் சமூகம் எனின் மக்களை, அவர்களின் நிறைவாழ்வை மையப்படுத்திய முடிவுகளை, திருச்சபையின் அடிமட்டத்தில் (Grass root) உள்ள மக்களோடு இணைத்தே மேற்கொள்ளவேண்டும்.

திருச்சபை பயணம் செய்யும் இயல்பை பெற்றிருப்பதால் அது வரலாற்றோடும் மனித வாழ்வுடனும் தொடர்புகொண்டது பயணம் செய்யும் திருச்சபை சில தவறுகளையும் செய்யக்கூடும் ஆனால் அவற்றை களைந்து எப்போதும் தன்னை புதுப்பித்துக் கொண்டு பயணத்தை தொடரவேண்டும். திருச்சபையை ஓர் உயிர்த்துடிப்புள்ள சமூகமாகக் கட்டியெழுப்பும் பணியில் அனைவரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும் என்று அழைப்பு விடுப்பவர் திருச்சபையின் ஆன்மாவாக விளங்கும் தூய ஆவியானவரே. திருச்சபையில் முக்கியமானவர்கள், முக்கியமற்றவர்கள், முதல்தரமானவர்கள், இரண்டாம் தரமானவர்கள் என்னும் வேறுபாடுகளுக்கு இடமேயில்லை. ஒவ்வொருவருக்கும் அழைப்பிற்கேற்ப பொறுப்பும் பணியும் உண்டு. இன்று திருச்சபையின் தலைமைத்துவம் தொடக்கம் இறைமக்கள் வரை இயேசுவின் மனநிலையில் செயற்படுவதாக தெரியவில்லை. திருச்சபை இன்னும் தனது அமைப்புக்களினூடாக ஒரு 'அதிகாரமும் மகிமையும்' நிறைந்த அமைப்பாகவே இனம் காட்டுகின்றது. திருச்சபை அன்புப்பணிகளில் சமூக மேம்பாட்டிற்காக ஈடுபட்டு உழைத்தாலும், எவ்வளவு தூரம் இயேசுவின் போதனைகளும், இறையரசு மதிப்பீடுகளும் மக்கள் வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றன என்பது கேள்விக்குறியே. திருஆட்சியைச் சார்ந்த பணியாளர்களும், இறைமக்களும் தம் அழைப்பு நிலைகளுக்கு ஏற்ப பணிநிலையில் வேறுபட்டாலும் இரு தரப்பினரினதும் இலக்கு ஒன்றாகவே அமைகின்றது. ஒருவர் மற்றவரை அடிமைப்படுத்தவோ அல்லது மற்றவர்மீது ஆதிக்கம் செலுத்தாமல் பொதுநன்மைக்காக, இறையரசின் நலனிற்காக செயற்படுத்தல் அவசியம்.

இன்று பயணம் செய்யும் திருச்சபையாக மக்களின் வாழ்வு அனுபவத்தில் திருச்சபை வேரூன்ற வேண்டும். அப்போதுதான் திருச்சபை இறைமக்கள் சமூகமாக மாற்றமடைந்து இறைமக்களின், கிறிஸ்துவில் நிறைவாழ்விற்காக தன்னை அர்ப்பணிக்க முடியும். இயேசுகிறிஸ்துவில் நிறைவாழ்வு உண்டு என்ற நம்பிக்கையை மனித குலத்தின் மத்தியில் விதைக்கும் கருவியாக செயற்படும் போதுதான் இறையரசு மலருகின்றது. மனித குலத்தின் வாழ்வியலுக்கான போராட்டங்கள் திருச்சபையின் வாழ்வோடு இரண்டறக் கலக்கும்போதுதான் திருச்சபை 'நம்பிக்கையின் அருட்சாதனமாக' (Sacrament of Hope) உலகில் விளங்கமுடியும்.

(கண்ணோட்டம் தொடரும்......)





## மன்னா பத்திரிகையும் பிரஜைகள் குழுவும் இணைந்து நடாத்திய

# ஊடகவியலுக்கு ஓர் அறிமுகம்

## பயிற்சிக் கருத்தமர்வு - ஓர் பார்வை!

மன்னார் மறைமாவட்டத்தில் முதன் முறையாக மன்னா பத்திரிகைப் பணியகம் மன்னார் பிரஜைகள் குழுவின் ஆதரவோடு *ஊடகவியலுக்கு ஓர் அறிமுகம்* என்னும் தலைப்பில் 3 நாள் பயிற்சிப்பட்டறை ஒன்றை ஒழுங்கு செய்திருந்தது. கடந்த ஒகஸ்ட் மாதம் 20, 21, 22ம் திகதிகளில் மன்னார் மறைக்கல்வி நிலையத்தில் இக்கருத்தமர்வு இடம் பெற்றது. இக்கருத்தமர்வை நடாத்துவதற்கு யாழ்ப்பாணத்தில் இருந்து இத்துறையில் தேர்ச்சி பெற்றவர்களான யாழ் - பாதுகாவலரின் பத்திரிகையின் ஆசிரியரான அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளை அவர்களும், யாழ் பல்கலைக்கழக ஊடக வளப் பயிற்சி நிலைய ஆலோசகர், திரு. செ. அருட்செல்வன் அவர்களும், பாதுகாவலன் பத்திரிகையாளர் திரு. எம். பிரான்சிஸ் அவர்களும் கலந்து சிறப்பித்தார்கள்.

இக்கருத்தமர்வை ஒழுங்குசெய்தவரும் மன்னா பத்திரிகையின் ஆசிரியருமான அருட்பணியாளர் கிறிஸ்து நேசன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்துகையில் இன்றைய நவீன உலகில் மிக வேகமாக வளர்ந்துவரும் துறைகளில் இந்த ஊடகவியலும் ஒன்று எனவும் ஊடகவியல் பற்றிய விரிவான அறிமுகத்தை, ஊடகவியலில் ஆர்வம் உள்ளவர்களுக்கு வழங்கி இத்துறையில் மேலதிக பயிற்சியை வழங்குவதே இக்கருத்தமர்வின் நோக்கம் எனக் கூறினார். தொடர்ந்து மன்னார் பிரஜைகள் குழுத்தலைவரும் பேராலய பங்குத்தந்தையுமான அருட்திரு. எமில் உரை நிகழ்த்தினார். பின்னர் மேதகு மன்னார் ஆயர் இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் ஆசியுரை வழங்கினார்.

> "செய்தி எனப்படுவது அவசர அவசரமாக நிகழ்த்தப்படுகின்ற வரலாறு, ஆகவே அந்த வரலாறு சரியாகவும், உண்மையாகவும், நேர்த்தியாகவும், நடுநிலையமாகவும் எழுதப்பட வேண்டும்"

> "மனதில் நினைத்ததை, நேரில் பார்த்ததை, பிறர் சொல்லக் கேட்டதை இலகு மொழியில் எழுதுவதே பத்திரிகையாளனின் பணி."

தொடர்ந்து அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளை அவர்கள் கருத்தமர்வை நடத்துகையில், செய்தி எனப்படுவது அவசர அவசரமாக நிகழ்த்தப்படுகின்ற வரலாறு, ஆகவே அந்த வரலாறு சரியாகவும், உண்மையாகவும், நேர்த்தியாகவும் நடுநிலையமாகவும் எழுதப்பட வேண்டுமெனக் கருத்துரை வழங்கினார். ஓர் பத்திரிகையாளனுக்கு இருக்க வேண்டிய குணாதிசயங்கள் ஒரு இடச்சம்பவத்தில் அவன் நடந்துகொள்ள வேண்டிய முறை பற்றியும் எடுத்துக் கூறினார்.

அதனைத் தொடர்ந்து திரு. அருட்செல்வன் அவர்கள் கருத்தமர்வை நடத்துகையில் மனதில் நினைத்ததை, நேரில் பார்த்ததை பிறர் சொல்லக் கேட்டதை இலகு மொழியில் எழுதுவதே பத்திரிகையாளனின் பணி எனவும் ஒரு செய்திப் பெறுமானம் அல்லது ஒரு புதிய நிகழ்வு புதினத்தன்மையுடன் அறிக்கையிடப்படும்பொழுது அது செய்தியாக மாறுகின்றது என்றும் தெரிவித்தார்.

கருத்தமர்வில் பங்குபற்றிய மாணவர்களுக்கு குழு வேலைகள், தனி வேலைகள், நேர்காணல்கள், பத்திரிகை தயாரித்தல், போன்ற பணித்திட்டங்கள் கொடுக்கப்பட்டன. இதில் பங்கெடுத்த அனைவரும் மிகவும் ஆர்வத்தோடும் உற்சாகத்தோடும் காணப்பட்டனர். 60 இளைஞர் யுவதிகள் இதில் பங்கேற்றுப் பயன்பெற்றனர். கருத்தமர்வின் இறுதிநாள் அன்று மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அவர்களினால் பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இப்பயிற்சிப் பட்டறைக்கு ஆதரவு வழங்கிய மன்னார் பிரஜைகள் குழுவிற்கும் பயிற்சியை வழங்கிய ரூபன் அடிகளாரின் குழுவினருக்கும் மன்னாப் பணியகம் தன் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றது.

## மதமாற்றத் தடைச்சட்டங்கள்.......

14ம் பக்கத் தொடர்ச்சி

ஒரு தீர்வு தேவை என்பதை நாம் ஒப்புக்கொள்கின்றோம்.

இரண்டாவதாக, இப்பிரச்சனைக்குத் தீர்வாக இரு சட்ட மூலங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இந்த சட்ட மூலங்களின் உள்ளடக்கத்திற்கு நாம் குறிப்பாக எதிர்ப்புத் தெரிவிக்கின்றோம். மூன்றாவதாக, தற்போதைய பிரச்சினையையும், இதனால் எழுகின்ற மனக்குரோதத்தையும் ஆராயவென பௌத்த ஆணைக்குழு முன்வைத்த மதங்களுக்கிடையேயான ஒரு அமைப்பை நாம் முழுமையாக ஏற்கின்றோம்.

முதலாவது விடயத்தில் நெறிமுறையற்ற மத மாற்றங்கள் என அழைக்கப்படும் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது என்பதை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். இவ்வாறான சம்பவங்கள் கவலைக்குரியவை. மேலும் இவை உடனடியாக நிறுத்தப்படாவிடில் நாம் எல்லோரும் மதிப்பதும் ஆசிப்பதுமான மதங்களுக்கிடையேயான ஒற்றுமை நிலைக்கு, நிவர்த்தி செய்ய முடியாத பாதிப்பு ஏற்படும். எந்த ஒரு மதக்குழுவினாலும் செய்யப்படும் நெறி முறையற்ற மதமாற்றத்தை களைவதற்கு நாம் தயக்கமில்லாமல் முன்வருகின்றோம்.

இரண்டாவது விடயம் இரண்டு சட்டமூலங்களாகிய "கட்டாய மத மாற்றத்தைத் தடுத்தல்" (2004 மே வர்த்தமானி), மற்றும் பௌத்த சாசன அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட மத சுதந்திரத்தை பாதுகாத்தல் முன்வரைபு ஆகியவற்றிற்கு, எமது எதிர்ப்பாகும்.

கத்தோலிக்க ஆயர் பேரவை ஏன் இவ்வாறு முன்வைக்கப்பட்ட சட்டங்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்கின்றது என சிலர் வினவலாம். எமது அபிப்பிராயப்படி இச்சட்டங்கள் நிறைவேற்றப்பட்டால் எமது அரசியலமைப்பிலும் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச நியமங்களிலும், சமவாயங்களிலும் கொடுக்கப்பட்ட அடிப்படை மனித உரிமைகளை அப்பட்டமாக மீறுபவையாக அவை அமையும். எனவே இந்நாட்டிலிருக்கும் சகல மக்களுக்கும் உத்தரவாதம் அளிக்கப்பட்ட அடிப்படை உரிமைகளையும் சுதந்திரங்களையும் பாதுகாப்பது எமது கடமை என நாம் கருதுகின்றோம்.

எமது கிறீஸ்தவ மதத்தின் ஒரு அடிப்படை அம்சமாகிய பிறரன்புப் பணிகளைப் புரிவதற்கான எமது மத சுதந்திரத்தை, முன்வைக்கப்பட்ட சட்டமூலத்திலிருக்கும் கூற்றுக்கள் மட்டுப்படுத்தும் என்பதால் நாம் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளோம். இச்சட்டமூலங்கள் நிறைவேற்றப்பட்டால், அனாதை இல்லங்கள், கைவிடப்பட்டோர், முதியோர், ஊனமுற்றோர் இல்லங்கள், கல்வி நிறுவனங்கள், வாழ்க்கைக் கல்வி பயிலுனர் மையங்கள் என்பவற்றுடன் கிறீஸ்தவ மதத்தின் அத்தியாவசிய அம்சமாகிய பிறரன்புப் பணிகளில் ஈடுபடும் எமது குருக்கள், கன்னியர், பொதுநிலையினரது மதச் சுதந்திரத்தையும் கட்டுப்படுத்துபனவாக இவை அமையும். மேலும் வழக்குகளுக்கும் பயமுறுத்துதல்களுக்கும் முகம் கொடுக்க நேரிடும்.

முன்வைக்கப்பட்ட சட்டமூலங்களின்படி எந்த ஒரு நபரும் பொது நலனுக்காக மேற்கூறிய ஸ்தாபனங்களுக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்யலாம். இவ்வாறாக மேற்கூறிய ஸ்தாபனங்கள் ஒவ்வொரு குற்றச்சாட்டிற்கும் இழுத்தடிக்கும் நீதிமன்ற நடவடிக்கை மூலமாக தாம் நிரபராதிகள் என்பதை நிரூபிக்க வேண்டிய தேவை ஏற்படும். தமது கிறீஸ்தவ வழிபாட்டின் அத்தியாவசிய அம்சமாகக் கருதப்படும் சகல மனிதருக்கும் மனிதாபிமான சேவை, என்பதைச் செய்யும் பொழுது பயத்திற்கும் அச்சுறுத்தல்களுக்கும் ஆளாக நேரிடும்.

வெகு தனிப்பட்ட விடயமாகிய மதமாற்றத்தை அரச அதிகாரிகளுக்கு தெரிவிக்க வேண்டிய கடப்பாடும் ஏற்றுக்கொள்ள முடியாத தொன்றாகும்.

வேறு சில சந்தேகத்திற்கிடமான விடயங்கள் உட்பட, இவையே கத்தோலிக்க ஆயர் பேரவை மேற்படி இரு சட்ட மூலங்களையும் எதிர்ப்பதற்கான முக்கிய காரணங்களாகும்.

மூன்றாவது விடயமாக மதங்களுக்கிடையேயான சுமுக வாழ்வையும் புரிந்துணர்வையும் ஊக்குவிக்கும் நோக்குடனும் வேண்டாத போக்குகளை தடுப்பதற்கும் அரசையும் எதிர்கட்சியையும் ஒன்றாகச் செயற்படுமாறு நாம் வேண்டுகிறோம். மேலும் எமது தாய் நாடு எப்பொழுதும் பேணி வந்த மதங்களுக்கிடையேயான சுமுக வாழ்வை மேம்படுத்துவதற்கும், கௌரவமானதும் நெறி முறையானதுமான வழியில் அப்பிரச்சனைகளை தீர்ப்பதற்கும் மதத்தலைவர்களை உள்ளடக்கிய மதங்களுக்கிடையேயான ஒரு அமைப்பை கூடிய விரைவில் அமைக்குமாறு நாம் வேண்டுகிறோம்.

ஆயர் மேரியஸ் பீரிஸ், பொதுச் செயலாளர்.


















### கருத்தமர்வில் பங்கெடுத்தோர் கவனத்திற்கு

ஊடகவியல் கருத்தமர்வின்போது சான்றிதழ் பெற்றவர்களின் புகைப்படங்கள் எம்மிடம் உள்ளன. இப்படத்தை பெற்றுக்கொள்ள விரும்புகின்றவர்கள் மறைக்கல்வி நிலையத்தில் அலுவலக நேரத்தில் அவற்றிற்குரிய கட்டணங்களைச் செலுத்தி அருட்சகோதரி பெனிக்னஸ் அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்

(மறைக்கல்வி இயக்குனர்)

## இப்பொழுது நான் ....

3ம் பக். தொடர்.

எனக்கு அதன்பின் ஒன்றுமே தெரியவில்லை. பின் என்னை வைத்தியசாலைக்கு கொண்டுசென்று வைத்தியம் பார்த்தார்கள். எனது வலது காலை இழந்து துயரப்பட்ட வேளையில் மட்டக்களப்பு J.R.S. நிறுவனம், மன்னார் J.R.S. நிறுவனம் ஊடாக மன்னார் வாழ்வுதயத்தின் உதவிக்கரம் பிரிவினால் செயற்கைக் கால் பொருத்துவதற்கு அனுப்பினார்கள் எனக் கூறினான்.

மன்னார் வாழ்வுதய நிறுவனம் அண்மைக்காலமாகத் தனது நடமாடும் சேவையூடாக இராணுவக்கட்டுப்பாடல்லாத பிரதேசங்களுக்கும் சென்று செயற்கைக் கால்களைப் பொருத்தி வருகின்றது. அண்மையில் கிளிநொச்சி மாவட்டத்தில் ஊனமுற்றோர் புனர்வாழ்வுச்சங்க கட்டடத்தில் இந்நடமாடும் சேவை மூலம் 6 யுவதிகள் உட்பட 17 பேருக்கு இச்செயற்கைக் கால்களை இலவசமாக வழங்கியுள்ளது. இச்செயற்கைக்கால்கள் மிகத் தரம் வாய்ந்ததாகவும் நீண்டகாலம் பாவிக்கக் கூடியவையாகவும் இருக்கின்றது. இன்றுவரை 390க்கு மேற்பட்டவர்களுக்கு இச்செயற்கைக்கால்கள் இலவசமாகப் பொருத்தப்பட்டுள்ளது.

இவைமட்டுமல்லாது இவர்களின் பொருளாதார வளத்தை மேம்படுத்தும் நோக்கில் கடன் அடிப்படையில் தலா 10,000 ரூபா சிறுதொழில் முயற்சிக்காக சிலருக்கு கொடுக்கப்பட்டுள்ளது. அண்மையில் மன்னார் வாழ்வுதய நிறுவனத்தின்கீழ் இயங்கும் 130 முன்பள்ளிகளில் கடமையாற்றும் ஆசிரியர்களின் போக்குவரத்தை இலகுபடுத்தும் நோக்கில் முதல் தடவையாக 40 ஆசிரியர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் சிறுகடன் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது. இக்கடனை இவர்கள் மாதாந்தம் தமது வாழ்வுதய ஊதியத்தில் இருந்து 350.00 ரூபா வீதம் கட்ட உள்ளனர். இதில் கடமைபுரியும் ஆசிரியர்களுக்கு தமது போக்குவரத்து சிரமங்களைக் குறைப்பதற்கு இது மிக உதவியாக உள்ளது.

## உன் பணிக்கு...

5ம் பக். தொடர்ச்சி

மேற்குறிப்பிட்ட விடயங்களை ஆதாரமாகக் கொண்டு, இவ்வருடம் ஒரு புதிய விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்பட்டு பங்குத்தந்தையர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பங்குத்தந்தையிடம் மாணவர்கள் தமது விருப்பத்தைத் தெரிவித்து, அப்படிவங்களை நேரகாலத்தோடு நிரப்பி 31 ஐப்பசி 2004 ற்கு முன்னர் மடுமாதா சிறிய குருமட அதிபரிடம் ஒப்படைக்கவும். அதன் பின்னர் குருமட நுழைவுப் பரீட்சை கார்த்திகை மாதம் 11ம் திகதி குருமடத்தில் இடம்பெறும். இதில் 9, 10, 11ம் ஆண்டு 2005ல் பயிலவிருப்போருக்கு தமிழ், ஆங்கிலம், கணிதம் ஆகிய பாடங்களில் 2004ம் ஆண்டு 1ம், 2ம் தவணை பாடத்திட்டத்திற்கமைய பரீட்சை நடைபெறும். அத்துடன் க. பொ. த. சாதாரண தரம் பரீட்சை எடுத்த மாணவர்கள், க.பொ.த. உயர் தரம் கற்பதற்கான தகைமை உடையவராக இருத்தல் வேண்டும். இதிலே தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் தம் பெற்றோருடன் மறைமாவட்ட ஆயருடன் நேர்காணலுக்கு கார்த்திகை இறுதியில் அழைக்கப்படுவார்கள். இறுதியில் குருமடத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கான அறிவித்தல்கள் குருமட அதிபரால் உடனே அனுப்பிவைக்கப்படும்.

மேற்கூறப்பட்டதை கவனத்திற்கொண்டு எம் மறைமாவட்டத்தில் இறை அழைத்தலை ஊக்குவிக்குமாறும், தங்களுடைய ஒத்துழைப்பை இக்குருமடத்திற்கு வழங்கிடுமாறும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். "ஒரு குடும்பத்திற்கு இறைவனால் அருளப்படக்கூடிய வரங்களுள் உன்னத வரம் அக்குடும்பத்திலிருந்து ஒருவரை குருவாக இறைவன் தேர்ந்தெடுப்பது" அத்தகைய சிறப்பு அருட்கொடை உங்கள் குடும்பங்களுக்குக் கிடைத்திட ஆசித்து நிற்கின்றேன். மருதமடு அன்னையிடம் எம் மறைமாவட்டத்தில் இறையழைத்தல் பெருகிட வேண்டுவோம். மேற்குறிப்பிட்ட விடயங்கள் பற்றி மேலும் தொடர்பு கொள்ள: அருட்பணி . எஸ். கே. தேவராஜா, அதிபர், மடு அன்னை சிறிய குருமடம். மன்னார்.

# அன்பின் கங்கை அன்னை தெரேசா

## விறு விறுப்புத் தொடர் 8

எழுத்துருவாக்கம்
சொல்லின் செல்வர்
அமுது

## சுவரில் தெறித்த இரத்தம்

சகோதரி திரேசா புனித மரியாள் கல்லூரிக்கு அதிபராயிருந்து, அந்தக் கல்லூரியின் சுக்கானை ஒளி வரும் திசையை நோக்கிப் பிடித்தார். கல்லூரி அமைதியான கடலில் அழகிய படகு மிதந்து செல்வதுபோல் சென்றது. அந்த நாட்களில் இந்திய அரசின் சுக்கானைப் பிடித்தவர்கள் பிரித்தானியர். இந்திய சுதந்திர தாகம் உச்சத்துக்கு வந்து பிரித்தானியாவின் முதுகெலும்பைக் குனிய வைத்தது. 1934ல் இரண்டாம் உலகப் போரில் இந்தியாவின் விருப்பம் இல்லாமலே அந்த நாடு ஈடுபட வேண்டியதாயிற்று. கல்கத்தாவுக்கு வள்ளங்களில் அரிசி கொண்டு வந்து வியாபாரிகளுக்கு விற்று வந்த கமக்காரர்களுக்கு போக்குவரத்துச் சாதனங்கள் மறுக்கப்பட்டன. இதனால் இருபது இலட்சம் மக்கள் அங்கு பட்டினியால் மரணத்தைத் தழுவ வேண்டிய துயரமான நிலை வந்தது. அந்நாளில் யப்பானியரோடு பிரித்தானியர் பர்மாவில் போரிட்டனர். இராணுவ வைத்தியசாலையாகக் கன்னியர் மடமும், பாடசாலையும் மாற்றமடைந்தன.

போரின் தாக்கம் கன்னியர் மடத்தைப் புறக்கணித்து விடுமா? அங்கே வசித்த மாணவிகள் தூர இடத்து மடங்களுக்கும் விடுதிச் சாலைகளுக்குமாக வெளியேறினர். மிச்சமாய் இருந்தோர் கன்னியர் மடத்துக்குக் கிட்ட இருந்த ஒரு கட்டிடத்துக்கு மாற வேண்டியதாயிற்று. இதனை சகோதரி திரேசா பொறுப்பேற்று, பாடசாலையையும் நடத்திவந்தார். 1946இல் பிரித்தானியா தனது அரசியல் நாணயக் கயிற்றை இந்தியாவிடம் கொடுக்க ஆயத்தம் செய்தது. ஆனால் இந்துக்களும் முஸ்லீம்களும் ஆட்சி அதிகாரத்தை ஏற்றுக்கொள்வதில் கருத்து வேறுபட்டனர். இனக்கலவரம் இமயமலையை அதிர வைத்தது. கல்கத்தாவின் வீதிகளிலும், ஒழுங்கைகளிலும், கடவுள் வழிபாடு செய்யும் திருத்தலங்களிலும் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். நேற்று சகோதர அன்புடன் வாழ்ந்த இந்து முஸ்லீம்கள் இன்று பயங்கரமான எதிரிகளாக மாறிக்கொண்டனர். சாலை ஓரங்களிலும் சாக்கடைகளிலும் இறந்தோரின் கும்பல் ஜேர்மனியில் யூதரின் படுகொலை அகழிகளை நினைவூட்டின. கோடரி, அரிவாள், கத்தி, சைக்கிள் சங்கிலி, கிறிஸ், அலவாங்கு, இரும்புக்கம்பிகள் என்பன அதிகார பீடத்தில் ஏறி ஆட்சி செய்தன. கல்கத்தாவின் ஆன்மாவில் பல நூற்றாண்டுகள் பூத்திருந்த சகோதர அன்பு உடைந்து கண்ணாடிப் பாத்திரம்போல நொருங்கியது. சுவரில் தெறித்த இரத்தத்தைக் கண்ட திரேசா கவலையும் திகிலும் அடையாமல் இருக்க முடியுமா? உணவுப் பொருள்கள் அத்தியாவசிய சேவைகள் முதுகெலும்பு முறிந்த நிலை.

இந்த வேளை அதிபராயிருந்த திரேசா மடத்திலே வசித்த பிள்ளைகளைக் காப்பாற்ற ஏதாவது செய்தாக வேண்டியிருந்தது. "நான் கலாசாலையில் இருந்து வெளியேறினேன். எனது விடுதிச்சாலையில் 300 மாணவிகள் இருந்தனர். அங்கே உணவுக்கு ஒன்றுமேயில்லை. நாங்கள் தெரு வீதியில் போவது முறையற்றதாயினும் நான் சென்றேன்.



கத்தியால் குத்தப்பட்டும், அடிக்கப்பட்டும், வெட்டப்பட்டும் இரத்தப் பெருக்கில் உடல்கள் கிடப்பதை என் கண்ணால் கண்டு கலங்கினேன். சுவருக்குள்ளே நாங்கள் இருந்தாலும் வெளியே நடப்பதை நாங்கள் அறியாமல் இருக்கவில்லை. சுவரால் மக்கள் ஏறிக்குதித்தனர். ஒரு இந்து கத்தியோடு குதிப்பான் பின்னால் ஒரு முஸ்லீம் கோடரியோடு விழுவான். ஒரு பெரிய பட்டாள வாகனத்தில் வந்த இராணுவ வீரர் வாகனத்தை நிறுத்தி என்னை வெளியே வரக்கூடாது என்றனர். "நான் வெளியே வந்தது, எந்த ஆபத்தையும் ஏற்றுக்கொள்ளவே!" என்றேன். 300 மாணவர்களுடைய உயிரை நான் காப்பாற்ற வேண்டும் என்றதும் அவர்களிடம் இருந்த அரிசியைத் தந்து என்னை உள்ளே தள்ளிவிட்டனர். அந்த நாளில் 5000 பேர் இறந்தனர். 15000 பேர் காயமுற்றனர். இன வெறியின் நாளாக அந்த நாள் நினைவில் நிலைத்து நிற்கிறது. திரேசா இடருக்கு அஞ்சாமல் ஆபத்தைச் சந்திக்க விரும்பியது அன்றுதான்.

இந்தச் சோகமான சம்பவம் நடந்து ஒரு மாசம் ஆகவில்லை. இறைவன் அவள் பயணம் செய்த வேளையில் சந்தித்து அந்த இரத்தம் தோய்ந்த வீதியில் பணி புரியுமாறு அழைத்தார். இதனையே தென்றல் சொன்ன சேதியில் கண்டுகொண்டோம்.

(கங்கை தொடர்ந்து பாயும்)

# உங்களுக்கு தெரியுமா?

## மாணவர் மறையறிவுப் பகுதி இல.16

உலகிற்கு சமாதானத்தையும் ஒப்புரவையும் கொண்டுவந்த நம் ஆண்டவராம் இயேசு 33 ஆண்டுகள் மட்டுமே உலகில் வாழ்ந்தார். அவரது குழந்தைப்பருவம், பிள்ளைப்பருவம் ஆகிய இரண்டிற்கும் 12 - 15 வருடங்களை விட்டுவிட்டால் 18 வருடங்களே உலகிற்கு அவரது பங்களிப்பு என்று கூறலாம்.

அதிலும் 30ம் வயதிலேயே யேசு தம்மை இனம் காட்டினார். அவரது மூன்றே வருட வாழ்வு இவ்வுலகில் எத்தனை மாற்றங்களைக் கொண்டுவந்தது! எத்தனை புதிய விழுமியங்களை - சிந்தனைகளை இன்றும் பர்ணமிக்கச் செய்கின்றன. இந்த இயேசுவைப்பற்றி நூல்கள் ஆயிரமாயிரமாய் நேற்றும் இன்றும் நாளையும் எழுதப்பட்டுக் கொண்டேயிருக்கின்றன. கிறீஸ்து வாழ்ந்த காலத்து வரலாற்றையும் பலர் எழுதினர். ஆனால் நான்கு பேர் எழுதிய வரலாறுதான் தூய ஆவியின் ஏவுதலால் எழுதப்பட்டவை என்று திருச்சபை ஏற்றுக்கொண்டு அவர்களை நற்செய்தியாளர்களாக நமக்குத் தந்திருக்கின்றது. அவரது பெயர்கள் நமக்கு மிகவும் பரீட்சயமானது.

மத்தேயு (லேவி) மாற்கு, லூக்கா, யோவான் (அருளப்பர்)

இம்முறை மத்தேயுவைப் பற்றி - அவரின் நற்செய்தி பற்றி நமக்கு எவ்வளவு தெரியும்! பரீட்சித்துப் பார்க்கலாமா?

### வினாக்கள்

01. புனித மத்தேயு நற்செய்தி எத்தனை அதிகாரங்கள் கொண்டது?
02. மத்தேயு நற்செய்தி எந்த வாக்கியத்தோடு நிறைவு பெறுகின்றது?
03. இயேசுவின் போதனைகளையும் செயல்களையும் தொகுத்து எழுதியவர்களில் முதல்வர் மத்தேயுதான். அவர் இந்நூலை எக்காலத்தில் எழுதியதாக நம்பப்படுகின்றது?
04. இது எந்த மொழியில் எழுதப்பட்டது
05. கிறீஸ்துவின் தாய்மொழி என்ன?
06. மத்தேயு என்பது ஒரு எபிரேய மொழிப் பதம். இதன் பொருள் என்ன?
07. மத்தேயு கிறீஸ்துவினால் எவ்விடத்தில் இருந்து அழைக்கப்பட்டார்?
08. இந்நகரம் எங்கிருந்தது?
09. யாருக்காக மத்தேயு தம் நற்செய்தியை எழுதினார்?
10. இவர் நற்செய்தியை எழுதிய நோக்கம் என்ன?

### குறிப்பு

வாசகர்களின் சிறப்பாக மாணவர்களின் பங்களிப்பை நாம் அதிகம் எதிர்பார்ப்பதால் இம்முறை வினாக்கள் மிகவும் இலகுபடுத்தப்பட்டுள்ளன. விடைகளை எங்கே பெறலாம்? உங்கள் மறைவாழ்வுக் கல்வி ஆசிரியர் அல்லது சமயபாட ஆசிரியர் உங்களுக்கு வழிகாட்டக்கூடும் முயற்சித்துப் பாருங்கள்.

உங்களுக்குத் தெரியுமா பகுதி - இது சம்பந்தமான இன்னுமொரு போட்டியையும் வருடத்துக்கு ஒருமுறை நடாத்தி பெரிய அளவிலான பரிசளிப்பு ஒன்றையும் நடாத்தத் திட்டமிட்டுள்ளது.

விரைவில் எதிர்பாருங்கள்.

மாணவர் மறையறிவுப் பகுதி இல. 14 இற்கான கேள்விக்கு 22 பேர் விடையளித்திருந்தினர்.

**அவர்களுள் எல்லாக் கேள்விகளுக்கும் சரியான விடையளித்து பரிசுக்குரியவராக தெரிவு செய்யப்பட்ட அதிஸ்ரசாலி**

***கி. கனீசியஸ், கொன்வன்ற் றோட், பெற்றா, மன்னார்.***

பாராட்டுக்குரியவர்கள்

1. செ. வளன் கில்றோய் துரம், மரியாள் வீதி, தாழ்வுபாடு.
2. திருமதி. அசோக்குமார் புனிதம், ஒலிமடு, நானாட்டான்.
3. ச. செபமாலை, புதுக்கமம், உயிலங்குளம்.
4. ஜேம்ஸ் றோஸ்மேரி, மாணவியர் இல்லம், முருங்கன்பிட்டி, முருங்கன்.
5. ஜெ. இ. றொபின்சி, பிடாரிகுளம், முருங்கன்.
6. ஜெனோராசரெட்ணம், வாழ்க்கைப்பெற்றான்கண்டல், முருங்கன்.
7. எ. நாதன் ஸ்ரைனி வாஸ், 4ம் வட்டாரம், வங்காலை.
8. மி. சுதர்ஷன், முருங்கன் பிட்டி, முருங்கன்.
9. செ. யோசப் சுஜந்தன் துரம், மரியாள் வீதி. தாழ்வுபாடு.
10. சஜீனா அருட்பிரகாசம், இளவாலை கன்னியர் மடம், இளவாலை.

*மாணவர் மறையறிவுப் பகுதி இல. 14 இற்கான சரியான விடைகள்*

1. மசிதோனியா நாட்டில். 2. அகாயா.
3. 1. தெருபை, 2. லிஸ்திரா, 3. இக்கோணியா.
4. எபேசு 5. பெஸ்து 6. யூலியு
7. அகஸ்து படைப்பிரிவு 8. எல்லோருமாக 276 பேர்
9. மால்தா 10. புப்பிலியு

இப்போட்டி பற்றிய உங்கள் அபிப்பிராயங்களை, கருத்துக்களை, ஆலோசனைகளை எமக்கு எழுதுங்கள். *(பதிப்பாசிரியர்)*

# 2வது பிறந்தநாள் வாழ்த்து




## செல்வன். லுயின்ரன் பிரதீஷ்

காத்தான்குளம் வட்டக்கண்டலைப் பிறப்பிடமாகவும், தோட்டவெளியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. திருமதி. டொணி லூயிஸ் ஜொய்சி தம்பதியினரின் செல்வப் புதல்வன் லுயின்ரன் பிரதீஷ் தனது இரண்டாவது பிறந்த நாளை தோட்டவெளியிலுள்ள தனது அம்மம்மா வீட்டில் சிறப்பாகக் கொண்டாடினார்.

இவரை பாசமுள்ள அப்பா, அம்மா, மற்றும் அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, சித்தப்பாமார்களான கெயிசர் பெரியமர்மா முகுந்தன், சின்னமாமா நிமலன், சீனிமாமா பெனில்டஸ், குட்டிச்சித்தி, டெல்சன் பெரியப்பா, குமா பெரியம்மா, விதுஷா அக்கா, றொசான் அண்ணா, அத்தை, மாமா - சுரேஸ், மாமி, மச்சாள் திவ்யா, குட்டி மச்சாள் துசிக்கா மற்றும் அம்மம்மாமார், சீயாமார், அப்பப்பாமார், அப்பம்மாமார், மாமிமார், சித்திமார், சித்தப்பாமார் அனைவரும் குழந்தை இயேசுவில் அருள்பெற்று பல்லாண்டுகள் சீரும் சிறப்புடனும் வாழ்கவென வாழ்த்துகின்றனர். தகவல்: அப்பா-

திரு. டெனிஸ் டொணி லூயிஸ், தோட்டவெளி.

# 1ம் ஆண்டு நினைவு

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 11 - 06 - 1947 |  | 26 - 09 - 2003 |

## திருமதி. யோசப்பின் விஜயரெட்ணம் (பிரான்ஸ்)

ஆண்டு ஒன்று சென்றாலும் உங்கள் அன்பு முகம் மறக்கவில்லை. உங்கள் பிரிவுத்துயர் என்றும் எம்மை விட்டு நீங்காதம்மா. குற்றமில்லா உள்ளமும், உம் புன் சிரிப்பும் நித்தம் எம் மனதில் நிழலாட உம் நினைவலைகள் எங்கள் நெஞ்சங்களில் என்றும் நிலைத்து நிற்குதம்மா.

அன்னாரின் ஆன்ம சாந்தித் திருப்பலி மன்னார் புனித மரியன்னை ஆலயத்தில் 25.09.2004 அன்று காலை 6.15 மணிக்கும் பரிஸ் 57, BLD. BELLEVLLE இல் அமைந்துள்ள ஒப்புரவு அன்னை சிற்றாலயத்தில் 2. 10. 2004 சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கும் ஒப்புக் கொடுக்கப்படும். இதைக் கண்ணுறும் உற்றார் உறவினர் அனைவரும் திருப்பலியில் பங்கு பற்றி செபிக்குமாறு வேண்டுகிறோம்.

*உங்கள் ஆத்ம சாந்திக்காக பிராத்திக்கும், அன்புக் கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார் உறவினர்கள்.*

## மத ஒற்றுமையை.... 3ம் பக்கத் தொடர்ச்சி

கத்தோலிக்க மதத்தை இழிவுபடுத்தியும், மதகுருக்களை கொச்சைப்படுத்தியும் ஜுலை 5ம் திகதி அன்று சூரியன் டொட் கொம் என்ற பெயரில் இயங்கும் (சூரியன் எவ். எம். அல்ல) இணையத்தளமொன்றில் இச்செய்தி வெளியிடப்பட்டது.

இக்கண்டனப் பேரணியானது மன்னார் செபஸ்ரியார் பேராலயத்திலிருந்து ஆரம்பமாகி கன்னியர் மட வீதி, மன்னார். தலைமன்னார் பிரதான வீதி ஊடாக மன்னார் கச்சேரியை அடைந்தது.

இணையத்தளத்தில் வெளியான தகவல்கள் யாவும் கத்தோலிக்க மதத்தை அவமானப்படுத்தும் தீய நோக்குடன் வெளியிடப் பட்டதென்றும், ஒரு குழுவால் திட்டமிட்டு மதங்களுக் கிடையில் ஐக்கியத்தை சீர்குலைக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்றும் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வி. விஸ்வலிங்கத்திடம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இப்பேரணியில் நூற்றுக்கணக்கான மக்கள் கலந்துகொண்டு தமது கண்டனங்களை வெளிப்படுத்தினார்கள்.

# அரசியல் அரங்கம்

அலசுவது - ஆனந்த், மடு.

## தொடரும் கொலைகள் நிறுத்தப்பட வேண்டும்

இலங்கை மக்களோ சர்வதேச நாடுகளோ இலங்கையில் யுத்தத்தை விரும்பவில்லை. ஆகவே தாமும் மீண்டும் ஒரு யுத்தத்தை ஆதரிக்கவில்லை என்று காட்டவே சந்திரிக்காவின் சுதந்திர முன்னணியின் தலைவி பதவி துறப்பும், மீண்டும் சமாதான அறிவிப்பும் எதிர்கட்சியின் ஆதரவு அறிவிப்பும் ஆகும்.

அரசியல்முனை இவ்வாறு காலம் கடத்தும்போது மறுபக்கத்தில் கொலைகள் தொடர்ந்துகொண்டிருப்பது கவலையளிப்பதாக உள்ளது. கடந்த மாதத்தில் ஊடகங்களில் வெளியான தலைப்பு செய்திகளின் சுருக்கம் இவைகள் "கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் தற்கொலை குண்டு வெடிப்பு" "கொட்டா பகுதி வீடு ஒன்றில் 7 தமிழ் இளைஞர்கள் 1 சிங்கள இளைஞர் சுட்டுக் கொலை" பம்பலப்பிட்டியில் புளட் மோகன் சுட்டுக் கொலை" "கிழக்கில் அரங்கேறும் பல கொலைகள்" என தலைப்பு செய்திகள் வெளியாகி இருந்தன. இதுவரை இந்தக் கொலைகளுக்கு யாரும் உரிமை கோரவில்லை. மாறாக ஒருவர்மீது இன்னொருவர் பழியைப் போடுகின்றார்கள். "ஆதாம் ஏவாளைச் சாட்ட ஏவாள் பாம்பை சாட்டினாளாம்" என்ற கதை தொடர்கின்றது. உரிமை கோரப்படாத இந்தக் கொலைகளுக்கு சில ஊடகங்கள் கடந்தகால நிகழ்கால காரணம் கற்பிப்பது ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவை.

கருத்து வேற்றுமை, கொள்கை வேற்றுமை கொண்டவர்களைக் கொலை செய்வதால் பிரச்சினைகள் முற்றாகத் தீர்ந்துவிடப் போவதில்லை. மாறாக வெறுப்பும், விரக்தியும், பழிவாங்கல் உணர்வுமே மேலோங்கி நிற்கும். சமாதானத்தை நோக்கிய பயணத்தில் மன்னிப்பும், ஏற்றுக்கொள்ளுதலும் மிக முக்கியமான அம்சங்களாகும் என்பதை அனைத்துத் தரப்பும் தெளிவாக புரிந்துகொள்ள வேண்டும்.


# திருமறைப்பணி நிலையச் செய்தி மடல்


## மறைக்கல்வி கல்வி விவிலியப் பணிகள்

# மாபெரும் மறைக்கல்விக் கண்காட்சி —சிறப்பிதழ்











யூலை 20 தொடக்கம் 24ந் திகதி வரை மன்னார் மறைமாவட்டத்தில் உள்ள மறைக்கல்வி நிலையத்தினால் அனைத்துப் பங்குகளின் ஒத்துழைப்போடு மாபெரும் மறைக்கல்விக் கண்காட்சி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. குருக்கள், துறவியர், ஆசிரியர்கள், பொதுநிலையினர், பங்குப் பணியாளர்கள், பாடசாலை மாணவர்கள் ஆகிய அனைவரும் தமது மறைஅறிவை வளர்த்து மறை வாழ்வை செழுமைப்படுத்தும் வகையில் இக்கண்காட்சி ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. இக்கண்காட்சி நிகழ்வு மூலம் மாணவர், இளைஞர், பெற்றோர் என பலதரப்பட்ட மக்களும் கற்றல் கற்பித்தலில் பெரும் பயன்பெறும் வண்ணம், சித்திரமாகவும், சிற்பமாகவும், கைவேலைப்பாடாகவும், அட்டவணையாகவும் விடயங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

மன்னார் மறைமாவட்டத்தில் உள்ள எல்லாப் பங்குகளும், பங்கு மறையாசிரியர்களும் இந்நிகழ்வில் பங்களிப்பு செய்தனர். பங்குகளிலுள்ள மறையாசிரியர்களின் பேருதவியோடு, இந் நிகழ்வு இடம்பெற்றது. திருவிவிலியம், திருச்சபை வரலாறு, மறைக்கல்வி, கல்வி போன்ற பெரிய தலைப்புகளின்கீழ் பல்வேறு விடயங்கள் இக்கண்காட்சியில் இடம்பெற்றன. பங்குகளிலுள்ள வளங்களையும், ஆக்கத் திறனையும், பயன்படுத்தி சிற்பகலைஞர்கள், சித்திரக்கலைஞர்கள், மற்றும் பங்குத்தந்தையர், அருட்சகோதரிகள் ஆசிரியர்கள் ஆகியோரின் முழு ஒத்துழைப்போடு இக்கண்காட்சி இடம்பெற்றது.

இக்கண்காட்சியை ஆரம்பித்து வைப்பதற்கு பிரதம விருந்தினராக மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் திருவாளர் ஆபேல் றெவ்வல் அவர்களும், சிறப்பு விருந்தினராக புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை அதிபர் அருட்சகோதரர் ஸ்ரனிஸ்லோஸ் அவர்களும் வருகை தந்திருந்தனர். இந் நிகழ்வில் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

கண்காட்சி பற்றி கருத்துரைத்த பல நூற்றுக்கணக்கானவர்களில் ஒரு சிலரது கருத்துக்களை மட்டும் இங்கே பதிவு செய்கிறோம். இக்கண்காட்சி வெற்றிகரமாக அமைய ஒத்துழைப்பு வழங்கிய குருக்கள், துறவியர், மறையாசிரியர்கள், பங்கு மக்கள் அனைவருக்கும் எமது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்து நிற்கின்றோம்.

- மறைக்கல்வி இயக்குனர்

## கண்காட்சி பற்றிய கருத்துக்கள்

### புளகாங்கிதம் அடைந்தேன்

பாராட்ட வேண்டிய விடயங்களை பாராட்டப்பட வேண்டும். அந்தந்த சந்தர்ப்பங்களில் அவை இடம்பெற வேண்டும் என்பதற்காக அருட்தந்தை நேசன் அவர்களின் அயராத சேவைக்குப் பாராட்டுக்களை கூறிநிற்கின்றேன். கடந்த 22.07.2004 அன்று மறைக்கல்வி நடுநிலையத்தினால் நடத்தப்பட்ட கண்காட்சியினைக் கண்டு மனதில் அளவில்லாத புளகாங்கிதம் அடைந்தேன். மன்னார் மறைமாவட்டப் பங்குகள் இணைந்து நடத்திய இம்மாபெரும் கண்காட்சி மிகத்திறமையான முறையில் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. அனைத்து செயற்பாடுகளும் ஒட்டு மொத்தமாக நன்றாக இருந்தன. இவற்றைப் பார்வையாளராகப் பார்த்துச் செல்வதைவிட பாராட்டுதல் மிகவும் சிறப்பானதாகும் அந்த வகையில் அத்தனை பங்குகளையும் பாராட்டி நிற்கின்றேன்.

பேசாலை - பாஸோ காட்சி, புத்தக ஆய்வு.
பண்டிவிரிச்சான் - மடுமாதா ஆலயம்
கோமரசன் குளம் - 2ம் வத்திக்கான் சங்கம்
தாழ்வுபாடு - வேதாகமம் எழுதப்பட்ட வரலாறு.
விடத்தல் தீவு - பாபேல் கோபுரத்தின் அழிவு
முள்ளிக்குளம் - நோவா காலத்தின் வெள்ளப்பெருக்கு
ஆட்காட்டிவெளி - பலிப்பீடம்
உயிலங்குளம் - மோசே - ஒரேபுமலை.
பள்ளிமுனை - இறைவாக்கினர்களின் அழைப்பு
வவுனியா - நான்கு நற்செய்திகள்
அளவக்கை - பக்திச் சபைகள்
கீழியன் குடியிருப்பு - புனித பவுலின் தூதுரைப்பயணம்
மன்னார் பங்கு - உலகத்திருச்சபை வரலாறு, வேதகலாபனை.
நானாட்டான் - மன்னார் மாவட்ட கட்டமைப்பு
வஞ்சியன்குளம் - இலங்கைத் திருச்சபை வரலாறு
பம்பைமடு - அன்னை தெரேசா
அடம்பன் - இளைஞர் உருவாக்கம்
முருங்கன் - மறைமாவட்ட துறவற சபைகள்
கற்கிடந்தகுளம் - மறைக்கல்வி வரலாறு
தச்சனா மருதமடு - குடும்பம் ஒரு குட்டித்திருச்சபை
தலைமன்னார் - அன்பியம், மலைப்பொழிவு
வங்காலை - திருவழிபாட்டு ஆண்டுச் சக்கரம்

இவ்வாறு அனைத்துப் பங்குகளின் விடயங்களும் பல சிரமங்கள் மத்தியில் சிறப்பாகச் செய்யப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. அனைத்துப் பங்குகளையும் பாராட்டி நிற்பதுடன் சிறப்பான பாராட்டுக்களை மறைக்கல்வி இயக்குனர் நேசன் அடிகளாருக்குக் கூறி நிற்கின்றேன். *திருமதி. பெப்பி விக்ரர் லெம்பேட்,*

*ஆசிரிய ஆலோசகர் (தமிழ்)*

### கற்றலுக்கு உதவியாக இருந்தது

மறைக்கல்விக் கண்காட்சியானது மிகவும் ஆழமான சமயக் கருத்தூண்டல் நிறைந்ததாகக் காணப்பட்டது. இது கற்பித்தல், கற்றல் செயற்பாட்டிற்கு மிகவும் உதவியாக அமைந்திருந்தது. மாணவர்களின் சமய அறிவிற்கும் மிகவும் முக்கியத்துவமிக்க கல்வியாக அமைந்திருந்தது.

எ. றக்சினி, தோட்டவெளி.

### உயர்தர மாணவர்கள் பயன் அடைந்தனர்

மன்னார் திருமறைப் பணி நிலையத்தில் நடாத்தப்பட்ட மாபெரும் கண்காட்சியானது மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது. இது ஐந்து நாட்கள் நடைபெற்றமையால் எல்லோரும் பங்கு பற்றி பயன் பெறக்கூடியதாக இருந்தது. மாணவர்கள் தங்கள் மறையறிவை மென்மேலும் வளர்த்துக்கொள்வதற்கு சிறந்த வழியாக இருந்தது. அதிலும் உயர்தர மாணவர்கள் சிறப்பான விதத்தில் பயனடையக்கூடியதாக இருந்தது. இக்கண்காட்சியை நெறிப்படுத்திய அனைவருக்கும் நன்றி கூறுவதோடு எமது மன்னார் மறைமாவட்டத்தில் பயன்பெறு முறையில் தொடர்ந்து இவ்வாறான நிகழ்வுகள் நடைபெற முயற்சி செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

*ஜெ. ஈ. றொபின்சி, தரம் - 13கலை,*
*மன். முருங்கன் ம.வி. முருங்கன்*

### அறியாத விடயங்களை அறிந்துகொண்டோம்

அனைத்துமே மிக நன்றாக இருந்தது. சாதாரண இயற்கை வளங்கள், கழிவுப் பொருட்களை உச்சமாக பயன்படுத்தி மிக சிறப்பாக காட்சி அமைப்புக்கள் இடம்பெற்றது. அறியாத விளங்காத பல விடயங்கள் அறிந்து கொண்டோம். சிறப்பாக கூறுவதில் மடுக்கோயில் அமைப்பு, மற்றும் பேசாலைப் பங்கினரின் உடக்கு பாஸ் காட்சி அமைப்பும் மனதில் ஆழமாக பதிந்துள்ளது.

*ஆசிரியர், மன். தட்சனாமருதமடு, அ. த. பாடசாலை.,*
*தட்சனாமருதமடு, பாலம்பிட்டி.*

### கத்தோலிக்க சமூக வாழ்விற்கு உகந்தது

இக்கண்காட்சி கத்தோலிக்க சமூக வாழ்விற்கு உகந்த ஒரு முக்கிய விடயமாகும். இன்றைய கால கட்டங்களில் கிறிஸ்தவ மறைக்கு எதிராக எழும் சவால்களுக்கு இது ஒரு விடையாகவும் எதிர்முனையாகவும் அமையும் இப்படி ஒரு நிகழ்வு இன்னும் மன்னார் மறை மாவட்டத்தில் வேண்டும் என்று கூறி இச் செயற்பாட்டை பாராட்டி நிற்கின்றேன்.

*செ. மனோஜ் பெனான்டோ,*
*முத்தரிப்புதுறை.*

### மிக அழகாக சித்தரிக்கப்பட்டிருந்தது

இன்றைய நிகழ்வை பார்க்கும்போது கிறிஸ்தவ மக்களின் ஆரம்ப காலம் முதல் இன்றுவரையிலான வாழ்க்கை முறைகள் மிக அழகாக சித்தரித்து காட்டப்பட்டுள்ளது. நான் ஆரம்ப நுழைவாயிலில் நுழைந்தபோது வேதாகமத்தில் தொடக்க நூலில் தொடங்கி இறுதி திருவெளிப்பாட்டு நூல் வரையான முழு விடயத்தையும் நேரில் பார்ப்பது போன்ற அனுபவம் அனைத்தையும் பார்த்து முடித்தபின் தோன்றியது.

*மிலன், பேசாலை*

### மாணவர்களின் பயன்பெறு வீதம் அதிகம்

மன்னார் மறைமாவட்ட மறை ஆசிரியர்களின் முயற்சியினால் நடாத்தப்பட்ட மறைக்கல்விக் கண்காட்சி மாணவர்கட்கு மிகவும் பயனுடையதாக அமைந்தது. காட்சிப்படுத்தல் ஊடாக மாணவர்களின் பயன்பெறு வீதம் அதிகமாகவுள்ளதினால் இது போன்ற கண்காட்சிகள் வருடாந்தம் நடாத்தப்பட வேண்டும் என வேண்டுகின்றேன். இக்கண்காட்சியை ஒழுங்கமைத்து நடத்துகின்ற அனைவரையும் பாராட்டி எமது சிறப்பு நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

*மன். புனித. லூசியா மகா வித்தியாலயம், பள்ளிமுனை.*

### அருமையான ஒழுங்கமைப்பு

மன்னார் மறைமாவட்டத்தினால் நடத்தப்படுகின்ற மறைக்கல்வி கண்காட்சியானது மறை மாவட்டத்திலுள்ள பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்களின் கற்றல், கற்பித்தல் விடயங்களுக்கு மிகவும் பொருத்தமானவையாகவும் அத்துடன் இன்றைய மத பிரிவுகளுக்கு கத்தோலிக்க மதத்தின் இழுக்கை இல்லாமல் செய்யவும் உதவுவதுடன் இதுபோன்ற கண்காட்சி இனிவரும் காலங்களிலும் இடம்பெற வேண்டுமென்றும் எதிர்பார்க்கின்றோம். சகல விடயங்களும் அருமையான முறையில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடிந்தது.

*அதிபர், மன். இசைமாலைத்தாழ்வு றோ.க.த.க.பாடசாலை,*
*இசைமாலைத்தாழ்வு, முருங்கன்.*

### வேதாகமத்தைப் படித்த உணர்வு

இக்கண்காட்சியூடாக எமது மாணவச் செல்வங்கள் பெரும்பயனை அடைந்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். உண்மையாகவே வேதாகமப் பகுதியினை முழுமையாகப் படித்ததைப் போன்று இந்நிகழ்வு அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கதாகும். காதால் பெறப்படும் அறிவை விடக் கண்களால் பெறப்படும் அறிவு என்றும் நிலைத்திருக்கக்கூடியது. இந்த முறையில் படித்தவர், பாமரர் அனைவருக்கும் இக்காட்சி பயனுள்ள முறையில் அமைந்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். உங்கள் கன்னி முயற்சி மென்மேலும் சிறப்படைய எமது வாழ்த்துக்கள்.

*அருட்சகோதரி எம். கிளாறா, பள்ளிமுனை*

### மீளவும் அமையுங்கள்

எமது மறையறிவை மேலும் வளர்த்துக்கொண்டு நாம் அறியாது விட்டுவிட்ட அல்லது மேலோட்டமாக மட்டும் அறிந்து வைத்திருக்கின்ற விவிலிய அறிவை மேலும் ஆழப்படுத்திக் கொள்ளத் தூண்டும் மிக அருமையான கண்காட்சி விசேடமாகக் கற்கின்ற மாணவர்களுக்கு மிகவும் பயனுடையதாய் அமைந்தமை குறிப்பிடத்தக்கது. என்னுடைய சிறிய யோசனை இக்கண்காட்சியைத் துணைக் கோட்ட ரீதியாக மீளவும் அமைத்து இதனைப் பார்த்துப் பயன்பெறுபவர்களின் வீதாசாரத்தை அதிகரிக்கலாமே!

*அதிபர், மன். சென். லோறன்ஸ் றோ.க.த.க. பா தலைமன்னார்*

### கிறிஸ்தவத்தை அறிந்துகொண்டோம்

நாங்கள் இந்து மாணவர்கள் தான் இருந்தும் இங்கு வந்து கிறிஸ்தவ மதத்தைப் பற்றிய விடயங்களை நன்றாக விளங்கிக் கொண்டோம். நன்றாக எல்லோரும் விளக்கம் அளித்தார்கள்.

*சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி மாணவர்கள். மன்னார்*

# பெரியப்பா பதில்கள்

கே. பெரியப்பா, ஒரு கெட்டவரை நல்வழிப்படுத்த என்ன செய்ய வேண்டும்?

*ப. டினிஷா, பெரியகுஞ்சுக்குளம், முருங்கன்.*

ப. ஆண்டவருடைய அளவுகடந்த அன்பைப் பற்றி அவர் உள்ளத்தில் பதியும்படி சொல்ல வேண்டும்.

கே. பெரியப்பா, துன்பம் வரும் வேளையிலே சிரிக்க வேண்டும் என்கின்றார்களே அது முடியுமா?

*டெ. பிரபு பெரேரா, 8ம் வட்டாரம், பேசாலை.*

ப. முடியும் என்றுதானே நமக்கு முன்னால் வாழ்ந்து சென்ற ஞானிகள், யோகிகள், புனிதர்கள் காட்டிச் சென்றுள்ளனர்.

கே. (இராயப்பரையோ அவர் வழி வந்த திருத்தந்தை மார்களையோ அன்றி) 10ம் நூற்றாண்டிலிருந்து இன்றுவரை திருத்தந்தையாக இருந்தோரைப் பின் வந்த திருத்தந்தைமார் ஏன் புனித பட்டத்திற்கு உயர்த்த வில்லை?

ஏ.றி. இம்மானுவேல், ஜேர்மனி.

ப. திருத்தந்தையர்கள் எல்லோரும் புனிதர் நிலைக்கு உயர்த்தப்பட வேண்டும் என்ற எந்தக் கட்டாயமும் இல்லையே. நீங்கள் குறிப்பிடும் திருத்தந்தையர்கள் புனிதர் நிலைக்கு உயர்த்தப்படத் தகுதி இல்லாதவர்களாக இருக்கலாம்தானே...

▣ கே. எமது பகுதியிலே யாத்திரை ஸ்தலமாகவும், புனித ஸ்தலமாகவும் விளங்கும் மடு அன்னை ஆலயத்தில் பூசை முன்னுரை, மன்றாட்டு வாசகம் போன்றவை பெண்களால் ஏன் வாசிக்கப்படுவதில்லை, ஆண்கள் மட்டும்தான் புனித ஸ்தலத்தில் வாசிக்க வேண்டும் என்ற கட்டாயம் உண்டா?

*யா. பிரான்சிஸ் சேவியர்,*
*தேவன்பிட்டி, வெள்ளாங்குளம்.*



ப. அப்படி எந்தக் கட்டாயமும் இல்லை. மடுவைப் பொறுத்தவரை அதன் புனிதத் தன்மையை பேணுவதற்காக சில பல ஒழுங்கு முறைகள் நூற்றாண்டு காலமாக பல இடர்பாடுகள் மத்தியிலும் கண்டிப்பாக கடைப்பிடிக்க முயற்சி செய்யப்படுகிறது. சில ஒழுங்குகள் அன்றைய சூழ்நிலையின் தேவைகளைக் கருதி கொண்டுவரப்பட்டது. அவற்றில் சில இன்னும் தொடர்ந்து அமுலில் இருக்கின்றன. எனவே நீங்கள் குறிப்பிடும் ஒழுங்கு - பெண்கள் வழிபாட்டு நேரத்தில் பீடத்திற்குள் அனுமதிக்கப்படாத நிலை - சிலவேளை எதிர்வரும் காலங்களில் மாற்றத்திற்கு உள்ளாகலாம்.

கே. பெரியப்பா, உங்கள் முன் திடீரென யேசு வந்து நின்றால் எனக்காக என்ன வரம் கேட்பீர்கள்?

*பி. பெனில்டஸ், தோட்டவெளி, மன்னார்.*

ப. இப்படியான உப்புச் சப்பில்லாத கேள்விகளைக் கேட்டுத் தொலைக்கும் உங்களுக்கு நல்ல புத்தியைக் கொடுக்கும்படி வரம் கேட்பேன்.

கே. பெரியப்பா நீங்கள் ஒரு புத்தகப் பிரியராமே... நீங்கள் அடிக்கடி வாசிக்கும் புத்தகம் எது?

*மணிரெத்தினம், மாங்குளம்*

ப. நமக்கு வெளியே இருக்கும் 'புதிய' 'அகம்' தான் 'புத்தகம்' நான் அடிக்கடி படிப்பது 'அகத்தகம்" அதாவது என்னையே நான் படித்துக்கொள்வேன்.

கே. "அரசன் அன்று அறுப்பான், தெய்வம் நின்று அறுக்கும்" என்று சொல்கிறார்கள் உண்மையா?

*க. ஜெயரமணன், ஆட்காட்டிவெளி, அடம்பன்.*


ப. உண்மை! அதைவிட நடைமுறை உண்மை - சிலர் பேசிப் பேசியே அறுக்கிறார்களே.

கே. திருப்பலியின்போது குருவானவர் பிரசங்கம் சொல்ல ஆரம்பித்ததும் படத்தில் இடைவேளை விட்டது போன்று வெளியே சென்றுவிட்டு பிரசங்கம் முடிந்ததும் மீண்டும் உள்ளே வரும் இளைஞர்களை பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப. "இளம் கன்று பயம் அறியாது" என்பார்கள்: ஆன்மீக ஆழம் இல்லாத இளைஞர்களுக்கு வழிபாடு ஒரு வாடிக்கை - வேடிக்கை நிகழ்ச்சிதான். அப்படி என்றால் இடைவேளை தேவைதானே.......!. புதுப்பித்தல் அனுபவத்திற்குள் இளைஞர்களை அழைத்து வாருங்கள். இடைவேளைக்கே இடம்இருக்காது.

கே. நாளாந்த வாழ்வின் இழப்புகளைக் கண்டு மனித மனம் அங்கலாய்க்கின்றதே...!

ப. சேறு செந்தாமரையை இழப்பதில்லையா? சிப்பி முத்தை இழப்பதில்லையா? மண் மாணிக்கத்தை இழப்பதில்லையா? இவையெல்லாம் உண்மையான இழப்புக்களா? இல்லை. இழப்புக்கள்போல் வெளியே தோன்றினாலும் இவை இழப்புக்கள் அல்ல. செந்தாமரையினால் சேற்றுக்கு மதிப்பு. முத்தால் சிப்பிக்கு மதிப்பு. மாணிக்கத்தால் மண்ணுக்கு மதிப்பு.



கே. இன்று ஆசிரியர் - மாணவர் உறவு எப்படி உள்ளது?

ப. தமிழ் ரீச்சர் வகுப்பில் பாடம் நடத்திக்கொண்டிருந்தார். காலங்களைப் பற்றி - இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் பற்றி விளங்கப்படுத்தினார். பின்னர் கேள்வி கேட்டார். "நான் அழகாக இருக்கிறேன்" இது என்ன காலம்?

ஒரு மாணவன் எழுந்து சொன்னான் "அது அந்தக் காலம் ரீச்சர்."

▣ இந்த அடையாளமிடப்பட்ட கேள்வி பாராட்டுக்குரியதாக தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

# நீங்காத நினைவுகள்

## 3ம் ஆண்டு நினைவு

மலர்வு 11 - 06 - 1954



உதிர்வு 10 - 08 - 2001

**திருமதி. ஜேசுதாசன் மரிய கொறற்றி (மனோன்)**
**(முதலியார் குளம், செட்டிகுளம்)**

அன்பின் ஒளி விளக்கே! பாசத்தின் சிகரமே! இமைபோல இரண்டு விழிகாக்கும் தாயே! எது வந்தபோதும் சுமை தாங்கி நீயே! நாள்தோறும் நெஞ்சில் நாம் ஏந்தும் ஜோதியே! இன்று நாம் என்னவென்று சொல்ல? பாதிவழியில் பரமன் உனை அழைத்ததும் நீண்ட தூரப் பயணத்தின் நிறை தூக்கத்தில் நிம்மதியாகச் சென்றுவிட்டீரே! மூவாண்டுகள் ஓடி மறைந்தாலும் நீங்காத நினைவுடன் வாழும் கணவரும் மக்கள் மூவரும். மரிய கொறற்றி எனும் நின் நாமம் புவிதனில் மகிமையுடன் விளங்கிட நீர் சிந்திய புன்னகை முத்துக்களை கண்ணீர்ப் பூக்களால் காணிக்கையாகத் தருகின்றோம். *உன் பிரிவின் துயரில் : கணவன் - அ. ஜேசுதாசன் மகன்மார் - றேகன், றேமன், மயூரன் சகோதர சகோதரிகள், மைத்துனர்,மைத்துனி, மருமக்கள், பெறாமக்கள்.*

## 2ம் ஆண்டு நினைவு

மலர்வு 11 - 02 - 1948



உதிர்வு 15 - 09 - 2002

**திருமதி. கமலா பிரான்சிஸ்**
**(மன்னார்)**

"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்"

தரணியில் எமை ஈந்து
தலை நிமிர்ந்து வாழச் செய்து
துயரெதுவென்றறியாது காத்து
தூக்கமே நீரறியாது
தந்தையாய்த் தமையனாய்த்
தாங்கும் பெருங்கிளையாய் வாழ்ந்து
தனிமரமாய் நொடியிலெமையாக்கி
தவிக்க விட்டெங்கு விரைந்தீர்
அம்மா?
தேவன் தமதடி சேர்ந்து நீரும்
தனனகத்தமைதி பெறவே பரமனைப்
பிராத்திக்கிறோம்.

*மக்கள், மருமக்கள்,*
*பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.*

## 4ம் ஆண்டு நினைவு

மலர்வு 09 - 04 - 1925



உதிர்வு 22 - 08 - 2000

**இன்னாசியாப்பிள்ளை மனுவேற்பிள்ளை**
**(கங்காணிதீவு, நானாட்டான்)**

அம்மா, காலங்கள் மாறலாம் காற்றசைய மறக்கலாம். கடல் அலை வற்றலாம் எம் அன்பு ஒரு நாளும் மாறாதம்மா.
எம் அன்பு அம்மா! உங்கள் ஆன்மா சாந்தியடைய தினமும் இறைவனிடம பிராத்திக்கின்றோம். ஆண்டு நான்கு மறைந்தாலும் உங்களின் நினைவலைகள் எம் நெஞ்சங்களை விட்டகலாது.

*உங்கள் பிரிவால் துயருறும்,*
*உங்கள் அன்பின் பிள்ளைகள்,*
*மருமக்கள், பேரப்பிள்ளைகள்*
*கங்காணிதீவு நானாட்டான்.*

## 10ம் ஆண்டு நினைவு

மலர்வு 30 - 10 - 1982



உதிர்வு 02 - 09 - 1994

**ம. சுனேத்திரா**
**(எழுத்தூர், மன்னார்)**

மலையாய் இறுகிய - அந்த
மௌனப் பொழுதுகள்
இதயக் கசிவுகளை
கண்ணீராய் இன்னும்
சுரக்கின்றது.
காலம் உன் ஆயுளை
கொள்ளையடித்து - உன்
நின்னவுகளை அழியா
வடுவாக்கியது.
பத்தாண்டுகளும்
பத்தாயிரம் ஆண்டுகளும்
சுழன்றுதான் போனாலும்
உன் முகம் உறங்காமல்
எம் நெஞ்சில் நிழலாடுகின்றது.

உன் பிரிவால் துயருறும்
*பெற்றோர், சகோதரர்கள்,*
*உற்றார், உறவினர்கள்.*

## 2ம் ஆண்டு நினைவு

மலர்வு 22 - 01 - 1919



உதிர்வு 04 - 09 - 2002

**சீ. அந்தோனியப்பு வாஸ்**
**(வங்காலை)**

ஆண்டுகள் இரண்டு மறைந்தாலும் உங்கள் அன்பும் ஆளுமையும் எமை விட்டு மறையவில்லை. அப்பா, வாழ்நாள் என்னாளும் எமக்கென வாழ்ந்தீர். வாடா மலர் போல எங்களைக் காத்தீர். மன்னர் குல பிள்ளைகள்போல் மகுடம் சூட்டினீர். எங்கள் மங்கல நாளிலே வாழ்த்துப் பாடினீர். ஒரு கூட்டுக் கிளிகளாக ஒற்றுமையுடன் வளர்த்தீர். உங்கள் அன்புக் குடையின்கீழ் ஒற்றுமையுடன் வாழ்வோம் அப்பா.

*இவரின் பிரிவால் துயருறும்*
*மனைவி, மக்கள், மருமக்கள்,*
*பேரப்பிள்ளைகள்,பூட்டப்பிள்ளைகள்.*

## 31ம் நாள் நினைவு

மலர்வு 20 - 01 - 1947



உதிர்வு 18 - 07 - 2004

**ப. அந்தோனிப்பிள்ளை**
**(பாலசிங்கம்)**

ஓய்வு பெற்ற விவசாய
போதனாசிரியர்,
முருங்கன் கமம், முருங்கன

எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்தி மீளாத் துயில் கொண்ட எம் அன்புத் தெய்வமே, ஐயாவே நாம் இனி உங்களை என்று காண்போமோ என ஏங்கித் தவிக்கின்றோம். எங்களுக்காக இறைவனிடம் பரிந்து பேசிக் கொண்டிருக்கும் எம் அன்புத் தெய்வமே உம்மை ஒரு நாள் முகமுகமாய் காண்போம் என்ற நம்பிக்கையில் ஏங்கித் தவித்துக்கொண்டிருக்கும்.

*அன்பு மனைவி, பிள்ளைகள்,*
*மருமக்கள், பேரப்பிள்ளைகள்.*

## 31ம் நாள் நினைவு

மலர்வு 28 - 04 - 1913



உதிர்வு 28 - 07 - 2004

**எலிசுப்பிள்ளை சலோமை**
**(சாவற்கட்டு, மன்னார்)**


"ஆண்டவரின் திருப்பெயரை அறிக்கையிட்டு மன்றாடுகிறவர் எவரும் மீட்புப் பெறுவர்"

அன்பான எங்கள் உயிரே பொன்னான மெய்பாசம் பொழிந்தீர். இறப்பொன்றே நிச்சயமென பிறக்கும்போதே தெரிந்தாலும் இழப்புக்களை ஏற்பதற்கோ மனித மனங்களிற்கு மனமில்லை. அன்பான உமது உயிர் அவசரமாய் பிரிந்ததுவோ! ஆறாத துயரத்துடன் அழுகின்றோம் நாங்கள். அமைதியுடன் உமது ஆன்மா இறைவனின் சந்நிதானத்தில் இளைப்பாறட்டும்.

*மக்கள், மருமக்கள்,*
*பேரப்பிள்ளைகள், பெறாமக்கள்,*
*உறவினர், நண்பர்கள்.*

## 1ம் ஆண்டு நினைவு

மலர்வு 12 - 03 - 1926



உதிர்வு 27 - 09 - 2003

**ச. சந்த குரு லியோன்**
**(தாழ்வுபாடு)**

நிழல் தந்து நின்ற விருட்சம்
நிலை மாறிப் போனதுவோ?
விழுதுகளை விட்டுத் தானும்
வேரிருக்கும் இடம் சென்றதுவோ?
அழுது புலம்புகின்றோம் ஆறாமல்
தொழுது வேண்டுகின்றோம்
ஆண்டு ஒன்று ஓடி மறைந்தாலும்
உம் நினைவு மட்டும் மாறாது.
உம் ஆத்ம சாந்திக்காய் தினமும்
பிராத்திக்கின்றோம்.

*மனைவி, பிள்ளைகள்,*
*சகோதரர்கள், உற்றார்,*
*உறவினர்.*

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி - இல.29
## திருப்பாடல் 131 - 150 அதிகாரங்கள்

உங்கள் விடைகளை 10. 10. 2004 க்கு முன் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கவும். சரியான விடையை எழுதிய மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பி வைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். (பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | 02 | | | | |
| | | | | | | | 03 | | * | |
| 04 | | | | | * | | | | 05 | |
| | | | | | 06 | | | | | 07 |
| | | | | | | 08 | | 09 | | |
| 10 | | | | | | | | * | | |
| 11 | | | | | | | 12 | 13 | | |
| | | | | 14 | | * | | | | 15 |
| | | | | | | 16 | | | | |
| | | | | | | 17 | | | | |
| 18 | 19 | 20 | 21 | | | | * | | 22 | |

### இடமிருந்து வலம்
1. இஸ்ராயேலைத் தமக்குரிய ........................த் தெரிந்தெடுத்தார்.
2. அவர் பூவுலகின் .......................களிலிருந்து மேகங்களை எழச் செய்கின்றார்.
4. தம் அடியாருக்கு ........................ காட்டுவார்.
9. ஆண்டவர் இரக்கமும் ...................ம் உடையவர்.
10. உம் இரக்கத்திற்காக நான் எழுப்பும் ..............ச் செவிசாயும்.
11. அவர் தம் எல்லையில்லா ........................க் குறித்து அவரைப் போற்றுங்கள்.
21. ........................... பழிகாரர் என்னிடமிருந்து அகன்றால் எத்துணை நன்று.

### மேலிருந்து கீழ்
3. ஆண்டவரே நீர் திருவாய் ...................... சொற்களைப் பூவுலகின் மன்னர் அனைவரும் கேட்டு உம்மைப் புகழ்வர்.
4. எங்களைக் கடத்திச் சென்றோர் எங்களை மகிழ்ச்சிப்பர் ..................... கேட்டனர்.
5. அவரைப் புகழ்வது ................. அதுவே ஏற்புடையது. (2வது 3வது எழுத்துக்கள் மாறியுள்ளன)
6. அவரே விண்ணையும், மண்ணையும் ...................... அவற்றிலுள்ள யாவற்றையும் உருவாக்கியவர்.
8. .......................... செய்து அவரது பெயரைப் போற்றுவார்களாக. (2வது எழுத்து 1வது எழுத்துக்கு மேலே நிற்கிறது)
12. எருசலேம் ...................... நாளை நினைத்துக் கொள்ளும்.
13. அவர் பல்வேறு இனத்தாரைத் ..........................
15. ......................... என்னைக் கனிவோடு தண்டிக்கட்டும்.

### வலமிருந்து இடம்
3. வான்வெளியை ......................... உருவாக்கியவருக்கு நன்றி செலுத்துங்கள்.
6. ஆனால் பொல்லாரின் வழிமுறைகளைக் ............................... விடுகிறார்.
8. அவர் தமக்கு அஞ்சி ......................... விருப்பத்தை நிறைவேற்றுவார்.
13. ஆண்டவரே ...................... அவர் பட்ட இன்னல்கள் அனைத்தையும் நினைவு கூர்ந்தருளும். (இறுதி 3 எழுத்துக்கள் மாறியுள்ளன)
14. "அவரது திருவடி தாங்கி முன் ...................... பணிவோம்" என்றோம்.
16. ஆண்டவரே உம் வழிகளை அவர்கள் .................... பாடுவர்.
17. எனக்கு முன்னும் பின்னும் என்னைச் ......................... இருக்கின்றீர்.

### கீழிருந்து மேல்
7. என் தலைவராகிய ஆண்டவரே எனக்கு ................... வழங்கும்.
8. அங்கேயும் உமது கை என்னை .........................ச் செல்லும்.
9. நீதிமான் என்னைக் ...................... தண்டிக்கட்டும்.
15. உம் குருக்கள் ...................... ஆடையென அணிவார்களாக.
18. நானோ ஆண்டவரை நோக்கி .......................... வேண்டினேன்.
19. பாபிலோனின் ஆறுகளருகே அமர்ந்து நாங்கள் சீயோனை ...................... அழுதோம்.
20. ஆண்டவரே நீர் என்னை ........................... அறிந்திருக்கிறீர். (3ம் 4ம் எழுத்துக்கள் மாறியுள்ளன)
22. இங்குள்ள குருக்களுக்கு மீட்பென்னும் உடையை .....................வேன்.

விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 28ற்கான முடிவுகளை ஒக்டோபர் மாத மன்னாவில் எதிர்பாருங்கள்.

## விவிலியகுறுக்கெழுத்துப் போட்டி இல. 27ல்

**சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசு பெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்**

*முதலாம் பரிசு*
என். மடுச்செல்வி,
பரிகாரிகண்டல், முருங்கன்.

*இரண்டாம் பரிசு.*
எஸ். றொசான் துரம்,
எமில்நகர், இல. 37,
மன்னார்.

*மூன்றாம் பரிசு*
ம. கிறிஸ்ரோபர்,இல. 92
பெற்றா, கொன்வென்ற்
றோட், மன்னார்.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 153 பேர்
சரியான விடைகளை எழுதியோர் 138 பேர்

**விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 27ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில்**

### பாராட்டுப் பெறும் 50 அதிஸ்ரசாலிகள்

1. இ. பிரேமிளா தேவி, இ. பிரதீபா, தேவன்பிட்டி, வெள்ளாங்குளம்.
2. ஆ. சவிரி, அந்தோனியார் புரம், இலுப்பைக்கடவை.
3. கு. சஞ்ஜீவ் குமார் குலாஸ், 6ம் வட்டாரம், வங்காலை.
4. எஸ். அன்ரன் எக்ஸ்பெற்றா, சுவிசர்லாண்ட்.
5. சஜீவன் மரியநாயகம், பாண்டியன் தாழ்வு, யாழ்ப்பாணம்.
6. ஸ்ரான்லி பஸ்ரி றஜித், இல.171 வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
7. ராணி அரசரத்தினம், தபால் கந்தோர் வீதி, மன்னார்.
8. அ. நிலுக்சன், பே. நவரட்ணம், புதுக்கமம், உயிலங்குளம்.
9. அ. பெனிஸ்ரா நிமலினி குலாஸ், 5ம் வட்டாரம், பேசாலை.
10. அ. வதனா, எழுத்தூர், மன்னார்.
11. கி. டிவைனி, 8ம் வட்டாரம், பேசாலை.
12. என். ரகு, பிடாரிகுளம், முருங்கன்.
13. ஜெனோ ராசரெட்னம், வாழ்க்கைப் பெற்றான் கண்டல், முருங்கன்.
14. ஜெ. இ. றொபின்சி, பிடாரிகுளம், முருங்கன்.
15. எம்.ஏ. ஜோண்சன், அளவக்கை, முருங்கன்.
16. எஸ். பி. செல்வநாயகம், பற்றிமா வீதி, மாதகல்.
17. ஜெ. ஜான்சி லோஜினி, 8ம் வட்டாரம், பேசாலை.
18. ஜெ. அருண், கற்கிடந்த குளம்.
19. வி. மேரி பிரான்சிஸ்கா, மன்.புனித.லூசியா ம.வி. பள்ளிமுனை.
20. கொ. திரேசா பீரிஸ், யூட் வீதி, 7ம் வட்டாரம், பேசாலை.
21. அ. லீலா, ஆலங்குளம், வட்டக்கண்டல்.
22. ம. கிறேஸ் வினோதினி, தி.கு.க. மடம், நானாட்டான்.
23. சி. மே. வ. (கண்ணன்), ஓலைத்தொடுவாய், மன்னார்.
24. திருமதி. எரிக் சுகந்தி, சுவிஸ்.
25. பி. மேரி ஜேட்ருட், சென் பீற்றர்ஸ் லேன், நித்தனி, புத்தளம்.
26. ச. அருண் குமார், மடுக்கோவில், மடு.
27. வெ. தயாநிதி, திருக்குடும்ப கன்னியர் மடம், வங்காலை.
28. ம. மரியறஞ்சினி, மடுக்கரை, நானாட்டான், இல 79ஏ.
29. பி. எம். எட்வின் மிரியம், சுவிஸ்.
30. ஜெ. எட்வின் சுரேஸ், சுவிஸ்.
31. ஜெயராஷன் சுகிர்தா, சாளம்பன், அடம்பன், ஆண்டான்குளம்.
32. மி. சுதர்ஷன் மிக்கேல் பிலிப்பு, முருங்கன் பிட்டி, முருங்கன்
33. ஜேம்ஸ் றோஸ்மேரி, மாணவியர் இல்லம், முருங்கன்பிட்டி.
34. சி.மேரி எமல்டா, பெரிய முறிப்பு, முருங்கன்
35. ஜஸ்ரின் கொன்சால் குலாஸ், 8ம் வட்டாரம், பேசாலை.
36. கு. மரிஸ்றெலா, நொச்சிக்குளம், உயிலங்குளம்.
37. அ. ராசேந்திரன், கீளியன் குடியிருப்பு, தலைமன்னார்.
38. த.யோ.ம.பொன்சேகா, எ.வீ.திட்டம், இல.12, முத்தரிப்புத்துறை.
39. அ. பிறியா பீரிஸ், அரிப்பு, முருங்கன்.
40. வி. வினோதன், கீளியன் குடியிருப்பு, தலைமன்னார்.
41. ச. அன்ரனி, கோவில் வீதி, உயிலங்குளம்.
42. டீ. எல். லுயின்ரன் பிரதீஷ், காத்தான் குளம், வட்டக்கண்டல்.
43. பி. கரோலின் (மெடோனா), தோட்டவெளி, மன்னார்.
44. கெலன் நோபேட், வூப்பெற்றால், ஜேர்மனி.
45. றெ. மேரி யோசவின், கடைவீதி, நானாட்டான்.
46. பே. ஆன், மணற்குளம், உயிலங்குளம்.
47. ஜெ. ஜொய்சன் பிரதிப், 8ம் வட்டாரம், பேசாலை.
48. ஞா. நிறோஜினி, மாதிரிக் கிராமம், வங்காலை
49. அ. ஜெறாட் பீரிஸ், அரிப்பு, முருங்கன்.
50. பி. எஸ். யோகராணி, பற்றிமா வீதி, மாதகல்.

### சரியான விடைகள்
விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 27
*திருப்பாடல் (அதி. 101– 118)*

**இடமிருந்து வலம்**
1. நீரோடையிலிருந்து 110:7
4. இளமை 103:5
6. மாட்சி 102:15
11. தாகத்தை 104:11
14. நினைவு
17. தண்டனை 109:31
18. வறிய 109:22
19. வலிமை 109:24
20. அலைகளும் 107:29
21. விருப்புக்கு 106:14

**வலமிருந்து இடம்**
2. குனிந்து 112:6
3. அமைதி 116:7
5. இளஞ் 104:21
7. துணையும் 115:10
8. அத்துணை 103:12
12. மலைகள் 104:18
13. குலங்களில் 105:37
15. வலிமைமிகு 106:2
16. செங்கடல் 106:22
24. கலகம் 106 : 43

**மேலிருந்து கீழ்**
1. நீதியுடன் 112:5
2. குன்றுகள் 114:4
3. அஞ்சுவோர் 118:4
5. இன்னிசை 104:12
8. அளித்த 105:8
9. வெள்ளி 105:37
15. செயல்க 106:39
16. வயலி 107:37

**கீழிலிருந்து மேல்**
8. அரசு 103:19
10. கைம்மாறு 116:12
14. நிலைத்துள்ளது 111:10
15. வலக்கை 118:16
16. செய்கை 106:29
21. விய(த்) தகு 106:7
22. கும்பலி 106:18
23. வேலையால் 107:12

---

2ம் ஆண்டு நினைவு



மலர்வு 26 - 02 - 1968 உதிர்வு 09 - 09 - 2002

**திருமதி. சேவியர் சகாயமேரி குருஸ் (ராணி)**
**(எழுதுவினைஞர் - மன்னார்)**

அன்பின் உருவாய் அனைவருக்கும் ஆதரவாய் ஒன்றித்த மனத்தோடு சேவை புரிந்து என்றும் எவருக்கும் நல்லன செய்த ராணியம்மாவே! பாசத்தில் மூழ்கடித்து வேதனையில் தவழ விட்டு ஆண்டு இரண்டு ஓடி மறைந்தாலும் எம் மனம் ஆறவில்லையம்மா! அன்றும், இன்றும், என்றும் உங்கள் நினைவே எங்கள் இதயங்களில் உம் ஆத்மா சாந்தியடைய தினமும் பிராத்திக்கும

*கணவன், பெற்றோர், சகோதரர்கள், பெறா மக்கள், உற்றார் உறவினர்.*

---

2ம் ஆண்டு நினைவு



மலர்வு 11 - 05 - 1985 உதிர்வு 18 - 09 - 2002

**தே. கிளியோப்பெற்றா லெம்பேட் (லக்சி)**
**(கொவ்வங்குளம், நானாட்டான்)**

இறந்த லாசறை உயிர்ப்பித்த ஆண்டவரே உம்மை போற்றுகின்றோம். இவ்வுலக வாழ்வை நீர்த்து இரண்டாண்டு சென்றிடினும் செவ்விய உன் முகத்தெளிவு செல்லுமோ யெம் மனதை விட்டு கிள்ளை மொழிச் சொல்லழகி கிளியோப்பெற்றா யெம் மகளே உள்ளம் உருகுதம்மா உன் பிரிவால் எப்பொழுதும். பந்துகளாம் பாங்கியரும் பள்ளிக்கூடமாணவரும் அந்தி சந்தி உந்தனுக்காய் ஆண்டவனை வேண்டுகின்றோம். இவரின் ஆன்ம சாந்திக்காக 18.09.2004 அன்று மாலை 5.30 மணிக்கு கொவ்வங்குளம் புனித தோமையார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

*இவரின் பிரிவால் துயருறும் தாய், தந்தை, சகோதரர்கள், உற்றார் உறவினர்கள்.*

---

2ம் ஆண்டு நினைவு



மலர்வு 22 - 01 - 1991 உதிர்வு 06 - 09 - 2002

**செல்வி. பிறேமதி**
**அந்தோனிப்பிள்ளை நித்திலா**
**(கற்கிடந்தகுளம், முருங்கன்)**

விண்ணுலகம் நீ சேர்ந்து ஈராண்டு ஆனதம்மா கண்ணுறங்கும் வேளையிலும் கனவிலும் உம் நினைவால் கலங்கித் தவிக்கின்றோம். புன்முறுவல் பூத்து இன்முகங்காட்டி இனிக்க பேசி எமை மகிழவைத்த அன்பான செல்வமே நித்திலா நீ இறக்கவில்லையம்மா எங்களுடன் என்றும் வாழ்கின்றாய். இவரின் ஆன்ம சாந்திக்காக 06.09.2004 திங்கட்கிழமை காலை 6.30 மணிக்கு கற்கிடந்தகுளம் புனித சூசையப்பர் ஆலயத்தில் இரங்கற்பலி நிறைவேற்றப்படும். *இவர் பிரிவால் துயருறும் அன்பு அப்பா, அம்மா, அண்ணாமார், அக்காமார், உற்றார் உறவினர்கள்.*

---

# 31ம் நாள் நினைவு



மலர்வு 09 - 04 - 1928 உதிர்வு 21 - 07 - 2004

**திருமதி. பாவிலு சந்தாக் குட்டி (தங்கம்) முருங்கன்**

ஆண்டவரைப் பற்றிய நல்லறிவை
அன்போடு ஊட்டிய அம்மா,
தாண்ட முடியவில்லை எம் துன்பத்தை
தவிக்கின்றோம் உம் பிள்ளைகள் இத்தரணியில்,
வறுமையின் பிடியில் நாம் வாடினாலும் - உம்
வற்றாத அன்பை நாம் மறப்போமா?
சிறுமைகள் எம்மை அணுகிடாமல்
சிறப்போடு எம்மை வளர்த்தீரே

தளராத மனதோடு இறுதிவரை - நீர்
தயங்காமல் பணிவிடைகள் செய்தீரே
பின்தூங்கி முன்னெழுந்து எங்களை
பேணியே வளர்த்திட்ட பெருந்தகையே!
சான்றோர்கள் வரிசையில் நாம் இருக்க - நீர்
சத்திய வழிகளைச் சொல்லித் தந்தீர்
அன்பிற்கு இலக்கணமானவரே
ஆண்டவர் அருகிலே அமைதி கொள்ளும்!

பிரிவால் துயருறும், மக்கள், மருமக்கள், சகோதரர்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் மற்றும் உறவினர், நண்பர்கள்

மன்னா

மதமாற்றத் தடைச்சட்டங்கள் நிறைவேற்றப்பட்டால்

# அடிப்படை மனித உரிமைகளை

## அப்பட்டமாக மீறுபவையாக அமையும்!

## இலங்கை ஆயர்கள் எச்சரிக்கை

நெறிமுறையற்ற மதமாற்றத்தை தடுப்பதற்கான உத்தேச சட்டம் பற்றிய தனது நிலைப்பாட்டை கத்தோலிக்க ஆயர் பேரவை விளக்குகின்றது. நெறிமுறையற்ற வழிகள் மூலமாக மக்களது மதத்தை மாற்றுகின்ற விடயத்தில் கத்தோலிக்க ஆயர் பேரவையினுடைய கண்ணோட்டத்தின் உண்மையான நோக்கம் பற்றி சில உள்ளூர் அரசியல்வாதிகள் கேள்விக்குட்படுத்தியுள்ளதை நாம் அறிவோம்.

முதலாவதாக இந்த விடயம் பற்றிய தற்போதைய விவாதத்தில் மறக்கப்பட்ட ஒரு அம்சத்தை தெளிவாக எடுத்துக்கூற நாம் விரும்புகின்றோம். 1881ம் ஆண்டிலிருந்து இலங்கையின் கிறீஸ்தவ விகிதாசாரத்தை குடிசன மதிப்பீட்டுத் திணைக்கள பதிவேடுகளிலிருந்து கீழே தருகின்றோம்.

| | | | |
|---|---|---|---|
| 1881 | - | முழு குடிசனத் தொகையின் | 9.77% |
| 1891 | - | முழு குடிசனத் தொகையின் ட | 10.04% |
| 1901 | - | முழு குடிசனத் தொகையின் | 9.79% |
| 1911 | - | முழு குடிசனத் தொகையின் | 9.96% |
| 1921 | - | முழு குடிசனத் தொகையின் | 9.86% |
| 1931 | - | முழு குடிசனத் தொகையின் | 9.76% |
| 1946 | - | முழு குடிசனத் தொகையின் | 9.06% |
| 1953 | - | முழு குடிசனத் தொகையின் | 8.95% |
| 1963 | - | முழு குடிசனத் தொகையின் | 8.36% |
| 1971 | - | முழு குடிசனத் தொகையின் | 7.91% |
| 1981 | - | முழு குடிசனத் தொகையின் | 7.62% |
| 2001 | - 18 | மாவட்டங்களுக்கான மதிப்பீடு மட்டும் | 6.89% |

எனவே இந்த விவாதத்தின் உண்மைச் சம்பவங்கள் பற்றி இந்நாட்டின் படித்த பொதுமக்கள் தாமே தமது தீர்மானத்திற்கு வரலாம்.

நாம் முதற் கூறியவாறு கத்தோலிக்க ஆயர் பேரவை மூன்று விடயங்களைப் பற்றி தனது நிலைப்பாட்டை எடுத்துக்கூற விரும்புகிறது. முதலாவதாக இந்நாட்டில் பாரிய விசனத்தை உருவாக்கியிருக்கும் நெறிமுறையற்ற மதமாற்றம் என அழைக்கப்பட்டிருக்கும் இவ்விடயத்திற்கு

(தொடர்ச்சி 9ம் பக்கம்)

### சுவிஸ் ஆன்மீகப் பணியகத்திற்கு நன்றி

சுவிஸ் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம் மன்னா பத்திரிகை வளர்ச்சிக்காக 30 சுவிஸ் பிராங் பணத்தை அனுப்பி வைத்துள்ளது. இப்பணம் 24. 04. 2004 அன்று சுவிஸில் இடம்பெற்ற மறைக்கல்வி விழாவின்போது சேகரிக்கப்பட்டது. அன்றைய தினம் போட்டி நிகழ்வுக்காக தயாரிக்கப்பட்ட கேள்விக் கொத்துகளை விநியோகம்செய்து அதிலிருந்து பெறப்பட்டதே இப்பணத்தொகையாகுமென சுவிஸ் தமிழ் கத்தோலிக்க பணியகத்தின் மறைக்கல்விப் பொறுப்பாளர் திரு. பொன்ராஜ் குமார் மன்னாவுக்கு தெரிவித்தார். பணியகத்திற்கு மன்னா நன்றிகளைத் தெரிவிக்கின்றது.

### சாள்ஸ் கொலின்ஸ் அடிகளாரின் தாயார் இறைபதம்

யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த சாள்ஸ் கொலின்ஸ் அடிகளாரின் அன்புத் தாயார் திருமதி உபகார றீற்றா (ராணி) கொலின்ஸ் 02.08.2004 அன்று கொழும்பில் இறைபதம் அடைந்துவிட்டார். ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகக் கொண்டு கொழும்பில் வசித்தவரான இவரின் இறுதி சடங்குகள் 05.08.2004 அன்று கொழும்பில் இடம்பெற்றது. இத்தாயாரின் ஆன்மா இறைவனின் இன்ப சந்நிதானத்தில் அமைதியில் இளைப்பாற செபிக்கின்றோம்.

### பிரான்சிஸ்கன் மறைபரப்பு சபையின் அதிசிரேஷ்டர் இலங்கைக்கு வருகை

பிரான்சிஸ்கன் மறைபரப்புச் சபையின் அதிசிரேஷ்ட சகோதரர் அதி. வண. ஜோசப் கரிமலையில் கடந்த சித்திரை மாதம் 29ஆம் நாள் தலவாக்கலையில் அமைந்துள்ள புனித பத்திரிசியார் அப்போஸ்தலிக்க நிறுவனத்திற்கு வருகை தந்தார். இங்கு வருகை தந்த அதிசிரேஷ்ட சகோதரர் உட்பட அனைத்து சகோதரர்களையும் நிறுவன மாணவர்கள் வெகு சிறப்பான முறையில் வரவேற்றனர்.

மேற்படி தரிசிப்பின்போது நிறுவனத்தில் உருவாக்கம்பெறும் மாணவர்களோடு கலந்துரையாடி அவர்களின் கல்வி வளர்ச்சி, ஒழுக்கக் கட்டுப்பாடு, கத்தோலிக்க சமய அமைப்போடு கூடிய உருவாக்கம் பற்றி கருத்தோடு கேட்டு அறிந்துகொண்டார். இந்தச் சந்திப்பைப் புனித பத்திரிசியார் அப்போஸ்தலிக்க நிறுவன இயக்குநர் அருட்சகோதரர் ஜஸ்டஸ் CMSFS அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார்.

### அமலமரித் தியாகிகளோடு இணைய வாருங்கள்!

இறைவனை நெருக்கமாக பின்பற்ற, இறைவனின் மீட்புப் பணியை தொடர்ந்தாற்ற இறை மக்களுக்காய் வாழ்வை அர்ப்பணிக்க, இறைவன் உம்மையும் அழைக்கலாம். *எளியோர்க்கு நற்செய்தி* என்ற விருதுவாக்கோடு பணிபுரியும் அமலமரித் தியாகிகளோடு ஜனவரி 2005இல் இணைந்துகொள்வதற்கு ஜனவரி 2005இல் தரம் 9 சித்தியடைந்திருத்தல் வேண்டும். க.பொ.த. சாதாரணம்/உயர்தரம் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

*தொடர்புகளுக்கு:-*

| | |
|---|---|
| குருமட அதிபர், | Rev. Fr. Rector, |
| புனித வளனார் அ.ம.தி. குருமடம், | St. Joseph's O.M.I. Semianary, |
| சுவாமியார் வீதி, | Swamiyar Road, |
| கொழும்புத் துறை, யாழ்ப்பாணம். | Columbuthurai, |
| | Jaffna. |


பெயர், வயது, முகவரி, மறைமாவட்டம், பங்கு, பங்குத்தந்தையின் பெயர், வகுப்பு, பாடசாலை ஆகிய விபரங்களை தெளிவாக எழுதி அனுப்பவும்.

*அமலமரித் தியாகிகள் சபையைப் பற்றியும் பணிகள் பற்றியும் அறிய விரும்புகின்றேன்*

.......................... ..........................


திகதி கையொப்பம்.

### எஸ். ஜே. அடிகளாரின் புதிய நூல் வெளியீடு



அருட்கலாநிதி எஸ். ஜே. இம்மானுவேல் அடிகளார் ஈழத் தமிழர்களின் உரிமைப் போராட்டத்தின் உண்மை நிலையை பன்னாட்டு அரங்குகளிலும், சர்வதேச மன்றங்களிலும் உரத்து ஒலித்த ஆங்கில உரைகளின் தொகுப்பு, நூலாக வடிவமைக்கப்பட்டு 30.07.2004ல் லண்டன் மாநகரில் வெளியிட்டு வைக்கப்பட்டது. இந்நூலுக்கு Agonies and Aspirations of the Tamil struggle (தமிழர் போராட்ட வேதனைகளும் வேட்கைகளும்) என தலைப்பளிக்கப்பட்டுள்ளது. மாமனிதர் குமார் பொன்னம்பலம் அவர்களுக்கு ஆசிரியர் இந்நூலைச் சமர்ப்பணம் செய்துள்ளார்.

### நெதர்லாந்து தமிழ் ஆன்மீகப் பணிக்கு சந்திரபோஸ் அடிகளார் நியமனம்



நெதர்லாந்து தமிழ் கத்தோலிக்க மக்களின் நீண்டகால வேண்டுகோளுக்கிணங்க அவர்களது ஆன்மீகப் பணியை மேற்கொள்ள அமலமரிப் பணியாளர் அருட்பணி. சந்திரபோஸ் குரூஸ் (அ.ம.தி.) அவர்கள் யாழ் மாகாண முதல்வரின் அனுமதியோடு இலங்கை ஆயர் ஒன்றியத்தினால் உத்தியோக பூர்வமாக நெதர்லாந்து தமிழ் மக்களின் பணிக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளார். இவர் யாழ் மறைமாவட்டத்திலும் குறிப்பாக வன்னிப் பகுதிகளிலும் பணியாற்றியவர். சில ஆண்டுகள் முன்பாக 2 வருடங்கள் உரோமையில் மேற்படிப்பை மேற்கொண்டிருந்த போது விடுமுறை காலங்களில் ஐரோப்பிய பணியகங்களைத் தரிசித்து பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவரது பணி சிறக்கவும் நெதர்லாந்து தமிழ் மக்களிடையே ஒற்றுமை ஓங்கவும் வாழ்த்துகிறோம். இவரது பணியேற்புத் திருப்பலி கடந்த 01.08.2004 அன்று பி.ப. 2.00 மணிக்கு Mgr – Driesen straat – 2, Roermond (Naast Ziekenhuis) எனும் இடத்தில் இடம்பெற்றது. மன்னார் முள்ளிக் குளத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட அடிகளாரை மன்னார் மறைமாவட்டம் சார்பாக மன்னா வாழ்த்தி நிற்கின்றது.

### பண்டத்தரிப்பில் திருக்குடும்ப பொது நிலையினருக்கான 4ஆவது ஆசிய மகாநாடு

திருக்குடும்ப பொது நிலையினருக்கான ஆசிய மகாநாடு ஆவணி மாதம் 18 - 23 திகதி வரை பண்டத்தரிப்பு தியான இல்லத்தில் நடை பெற்றது. மேற்படி மகாநாட்டை யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை சம்பிரதாய பூர்வமாக திறந்துவைத்தார். இவரோடுகூட றோமாபுரியில் இருந்து வருகைதந்த அருள்சகோதரி வினிவிறட்டாவும் கலந்துகொண்டார். இதில் யாழ்ப்பாணம், கொழும்பு, இந்தியா, பாக்கிஸ்தான், பிலிப்பைன்ஸ் நாடுகளைச் சேர்ந்த 60 அங்கத்தினர் ஒன்று கூடினர். திருச்சபையின் புதிய சமுதாயத்தை நோக்கி என்ற கருப்பொருளை வைத்து இம்மகாநாடு நடைபெற்றது. திருச்சபையில் பொதுநிலையினர் பணியைச் சிறப்பிப்பதே திருக்குடும்ப பொதுநிலையினரின் அர்ப்பணமிகு பணியாக உள்ளது.

### அசிசி அமைதி விருது

இவ்வாண்டுக்கான அசிசி அமைதி விருதை இஸ்ரேல், பலஸ்தீன நண்பிகள் இணைந்து பெற்றுள்ளனர். புனித பூமியின் அமைதிக்கான ஏக்கத்தின் அடையாளமாக இருக்கும் இவர்களின் நட்பும் பணிகளும் இப்பரிசை இவர்களுக்கு பெற்றுக்கொடுத்துள்ளது மட்டுமல்லாமல் நோபல் பரிசுக்கும் இவர்களது பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இஸ்ரவேல் நாட்டின் கல்வியாளரும் எழுத்தாளருமான அஞ்சலிக்கா காதோலிவினை, பாலஸ்தினத்தின் அநாதை இல்ல இயக்குனர் சமார் சாகேப் ஆகிய இருவரும் இரு தரப்பு மக்களிடையேயான அமைதிப் பேச்சுவார்த்தைகளுக்கு தங்களாலான அனைத்துப் பங்களிப்பையும் வழங்கியுள்ளனர்.

### மன்னாரில் ஜே. ஆர். எஸ். பணியாளருக்கான கருத்தரங்கு

இயேசு சபை அகதிப் பணியினரின் (J.R.S) தொண்டராசிரியர்களுக்கும், மாலைநேர வகுப்பு மேற்பார்வையாளர்களுக்கான இரண்டு நாள் வதிவிடக் கருத்தரங்கு கடந்த ஓகஸ்ட் மாதம் 18, 19ம் திகதிகளில் மன்னார் மறைக்கல்வி நடுநிலையத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வினை J.R.S இன் தேசிய இயக்குனர் அருட்பணி. வின்னி ஜோசவ் அவர்களும், வாழ்வுதய இயக்குனர் அருட்பணி பி. யேசுராஜா அவர்களும், மன்னார் மறைக்கல்வி இயக்குனர் அருட்பணி பி. நேசன் அடிகளாரும் குத்து விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர்.

### வவுனியா கல்வியியல் கல்லூரியில் திருவிழா

வவுனியா கல்வியற் கல்லூரியின் ஆலயத் திருவிழாவானது 05.06.2004 அன்று கல்லூரியின் வளாகத்தில் அமைந்துள்ள நற்கருணை நாதர் ஆலயத்தில் வெகுசிறப்பாகக் கொண்டாடப்பட்டது. கல்வியியல் கல்லூரியின் ஆன்மீகத் தந்தையாகிய அருட்பணி. ஜேக்கப் யோகராஜா (அமதி) அவர்களின் தலைமையிலும் அருட்பணி லீனஸ் சொய்சா (அமதி) அவர்களின் தலைமையிலும் கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இத்திருவிழாவினை சிறப்பிக்க கல்லூரியில் கல்விபயிலும் அனைத்து ஆசிரிய மாணவர்களும் இனமத வேறுபாடின்றி கலந்துகொண்டனர். இறுதியாக நற்கருணைநாதரை கல்லூரியின் வளாகத்தினுள் பவனியாக எடுத்துச்சென்று நற்கருணை நாதரின் இறுதி ஆசீருடன் திருவிழாத் திருப்பலி இனிதே நிறைவுற்றது. *கிறிஸ்தவ பிரிவு, கல்வியற் கல்லூரி - வவுனியா.*



திரிசாரணர்களுக்கு அண்மையில் மன்னாரில் பயிற்சி வழங்கப்பட்டபோது

### ஜேர்மன் ஆன்மீகப் பணியகத்தின் புதிய இசைத்தட்டு

ஜேர்மன் ஆன்மீகப் பணியகத்தின் வெளியீடாக இசையமைப்பாளர் கண்ணன் அவர்களின் இசையில் கிறிஸ்தவ வழிபாட்டு – நடனக் கலைக்கான பாடல்கள் அடங்கிய புதிய இசைத்தட்டு "பாடும் பாதங்கள்" விரைவில் வெளிவருகிறது. இதற்கான பாடல்களை பணியகக் கலைஞர்களே சிறப்பான முறையில் இயற்றியும் பாடியும் உள்ளனர். கேட்பவர்களை இசை வெள்ளத்தில் நீந்தச் செய்யும் இறைப்பாடல்கள் அடங்கிய இசைத் தட்டுக்களை கேவலார் யாத்திரையிலும் பணியக தொடர்பாளர்களிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு கொழும்பு கொட்டாஞ்சேனை அச்சகத்தில் அச்சிடப்பட்டு பதிப்பாசிரியரால் வெளியிடப்பட்டது.